அன்ரனிசை
வீழ்த்தி
கிண்ணத்தை
வென்றது
ஹென்றிஸ்
பக்கம் 27

# உதயன்

பக்கங்கள்
யாழ். - 30/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 208 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 8, ஞாயிறு 22.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


32°C
தெளிவான வானிலை

நாட்டைச் சூழவுள்ள கடற்கரைப் பகுதிகளில் காற்று மணிக்கு சுமார் 70-80 கிலோமீற்றர் வேகத்தில் வீசக் கூடும்.

# பாதுகாப்புச் சபைக்கு இலங்கை விவகாரம்

## பயண முடிவில் விசேட அறிக்கையைச் சமர்ப்பிப்பார் ஐ.நா. உதவிச் செயலாளர் பெர்னாண்டஸ் தரங்கோ

யாழ்ப்பாணம், ஜீன் 22
இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் பல தரப்பட்டவர்களுடனும் கலந்துரையாடல்கள் நடத்தி வரும், ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் தரங்கோ, தனது இலங்கைப் பயணத்தின் முடிவில் ஐ.நா பொதுச் செயலாளருக்கும், பாதுகாப்புச் சபைக்கும் விசேட அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார்.
இந்த அறிக்கையின் அடிப்படையிலேயே, எதிர்காலத்தில் இலங்கை தொடர்பில் ஐ.நாவின் நடவடிக்கைகள் அமையும் என்பதுடன், ஐ.நாவின் விசாரணையிலும் இவரது அறிக்கை தாக்கத்தைச் செலுத்தும் என்றும் தெரிவிக் கப்படுகின்றது.
இலங்கையின் ஆளும் தரப்பு அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ மற்றும் ஹக்கீம் ஆகியோருடன் நேற்று முன்தினம் சந்திப்புக்களை நடத்திய உதவிச் செயலர், நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.
கொழும்பு சினமன் விடுதியில் காலை 9.30 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை இந்தச்


ஒஸ்கார் பெர்னாண்டஸ் தரங்கோ

24 ஆம் பக்கம் பார்க்க

## வன்முறைகளை தூண்டியோர் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜீன் 22
முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது இலங்கை அரசின் கடமை என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில்,

24 ஆம் பக்கம் பார்க்க

# முஸ்லிம் வர்த்தக நிலையம் பாணந்துறையில் தீக்கிரை

## சதிமுயற்சியா அல்லது மின்னொழுக்கா எனச் சந்தேகம்


சாம்பராகிப்போன வர்த்தக நிலையம்

கொழும்பு, ஜீன் 22
முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான 'நோலிமிட்' வர்த்தக நிறுவனத்தின் பாணந்துறை காட்சியறையும், களஞ்சியமும் நேற்று அதிகாலை தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. தீ கொழுந்துவிட்டெரியத் தொடங்கியதும், தீயணைப்புப் படையினருக்கு அறிவிக்கப்பட்டதாகவும், அவர்கள் இரு மணி நேரம் தாமதித்தே வந்தமையால் வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது என்று நிறுவன ஊழியர்கள் தெரிவித்தனர். இது சதி முயற்சியா அல்லது மின்னொழுக்கினால் ஏற்பட்டதா என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
நேற்றுசனிக்கிழமைஅதிகாலை 3

24 ஆம் பக்கம் பார்க்க

## அளுத்கம வன்முறை குறித்து அறிக்கை கோருகிறது ஐ.நா.

யாழ்ப்பாணம், ஜீன் 22
அளுத்கமவில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரச உயர் மட்டத்தினரிடம், இலங்கைக்கு வந்துள்ள ஐ.நாவின் உதவிச் செயலர் எழுத்து மூல அறிக்கை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கைக்கு நான்கு நாள் பயணமாக வந்துள்ள ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் தரங்கோ, பல தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்.
கடந்த 15 ஆம் திகதி களுத்துறை மாவட்டத்தின் அளுத்கம நகரில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்த வன்முறைகளில் மூவர் கொல்லப்பட்டிருந்தனர். இந்த விடயம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.
இந்த நிலையில் மேற்படி

24 ஆம் பக்கம் பார்க்க

# முஸ்லிம்கள் மீதான வன்முறை நீள்கிறது


நாவாந்துறை ஹமால் பள்ளிவாசல் மீதான தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜீன் 22
அளுத்கமவில் இடம்பெற்ற கலவரத்தின் பின்னர் வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பகுதியிலும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று அதிகாலையில் யாழ். நாவாந்துறைப் பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
கடந்த இரு தினங்களில் மாத்திரம் இவ்வாறு 5 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.
கடந்த 15 ஆம் திகதி களுத்துறை மாவட்டத்தின் அளுத்கம தர்ஹா நகரில் முஸ்லிம் மக்கள் மீது, கடும் போக்கு பௌத்த அமைப்புக்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்தில் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தும் இருந்தனர். அத்துடன் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டிருந்தது.

24 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா. விசாரணையில் சாட்சிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும்

## உதவிச் செயலரிடம் கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜீன் 22
ஐ.நா. விசாரணையில் இலங்கை அரசுக்கு எதிராகச் சாட்சியமளிக்கும் தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, ஐ.நா. உதவிச் செயலரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாக நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் தரங்கோவுக்கும் இடையில் நேற்று ஒன்றரை மணி நேரம் கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை முன்னெடுத்

24 ஆம் பக்கம் பார்க்க

## பொது பல சேனாவுக்கு தடை விதிக்க மஹிந்த மறுப்பு

கொழும்பு, ஜீன் 22
பௌத்த கடும்போக்கு அமைப்பான பொது பல சேனாவைத் தடை செய்யுமாறு முஸ்லிம் அமைச்சர்கள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ நிராகரித்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

24 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கை கடற்படைக்கு எதிராக தமிழகப் பொலிஸ் வழக்கு பதிவு

இராமநாதபுரம், ஜுன் 22

இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கொலை முயற்சி மேற்கொண்டனர் என்று மண்டபம் கடலோர பொலிசாரிடம் தமிழக மீனவர்கள் முறைப் பாடு பதிவு செய்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 18ஆம் திகதி விசைப்படகில்சென்ற 5 மீனவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்த போது இலங்கை கடற்படையினர் ரோந்துக் கப்பலை வைத்து தமது படகுகளை மோதினர் என்றும் துப்பாக்கிச்சூடு நடத்தி படகை சேதப்படுத்தினர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு படகு கடலில் மூழ்கியது. அதில் இருந்த 5 மீனவர்களையும் மற்றொரு படகில் இருந்த மீனவர்கள் மீட்டு கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக படகு உரிமையாளர் பவியான் மண்டபம் கடலோர காவல் நிலையத்தில் இலங்கைக் கடற்படை மீது முறைப்பாடு பதிவு செய்தார்.

இதன் அடிப்படையில் இலங்கைக் கடற்படையினர் மீது, தமிழ்நாடு மீனவர்கள் சொத்து அழிப்பு சட்டம், இந்திய ஆயுத சட்டம், கொலை முயற்சி உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் மண்டபம் கடலோர பொலிஸார் வழக்குகளைப் பதிவு செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-14)

# ஐ.நாவின் விசாரணைக் குழு இன்னும் இறுதியாகவில்லை

கொழும்பு, ஜுன் 22

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில், நடத்தப்படவுள்ள சர்வதேச விசாரணைக்கான நிபுணர்கள் குழு இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்று ஐக்கிய நாடுகளின் சபையின் மனித உரிமைகள் ஆணையகப் பேச்சாளர் ரூபர்ட் கொல்வில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய மின்னஞ்சல் மூலமான நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இந்த மாதம் 5 ஆம் திகதி இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

இதன் பின்னர், ஐ.நா விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்கக்கூடாதெனத் தெரிவித்து, நாடாளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது. இலங்கைக்குள் குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டாலும், விசாரணை முன்னெடுக்கப்படும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், விசாரணைக் குழுவின் நிபுணர்கள் இறுதி செய்யப்பட்டதன் பின்னர், அது குறித்த உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று மனித உரிமைகள் ஆணையகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

நியமிக்கப்படவுள்ள இந்தக் குழுவில் 12 பேர் அங்கம் வகிப்பார்கள். அவர்களுக்கு மேலதிகமாக இந்தக் குழுவுக்கான இணைப்பாளர் ஒருவரும், இரண்டு ஆலோசகர்களும் நியமிக்கப்படுவார்கள்.

இதேவேளை இந்தக் குழுவின் ஆலோசகர்களில் ஒருவராக, பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்டி அத்திசாரி நியமிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மார்டி அத்திசாரி தமது சமாதானச் செயற்பாடுகளுக்காக நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## இலங்கைத் தமிழர் ஆஸ்திரேலியாவில் தற்கொலை முயற்சி

கொழும்பு, ஜுன் 22


இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சம் காரணமாக 40 வயது இலங்கைத் தமிழர் ஒருவர் ஆஸ்திரேலியாவில் தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்துகொள்ள முயன்றுள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையிலிருந்து கடந்த 2012 ஆம் ஆண்டு படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற நபரே இவ்வாறு தற்கொலை முயன்றுள்ளார்.

இந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மெல்போர்ன் கிழக்கில் அமைந்துள்ள நோபல் பார்க் பிரதேச வீடொன்றில் தமது உடலில் பெற்றோலை ஊற்றிக் கொண்டு தீ வைத்துக் கொள்ள முனைந்ததாகவும், அதன் போது வீட்டார் உடனடியாகவே அவரது தீயை அணைத்து மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இவருடைய காலில் மாத்திரம் சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளன. இவர் விரைவில் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரிச் சென்ற இருவர் இவ்வாறு தற்கொலைக்கு முயன்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)



ஊனமுற்றிருந்தபோதும் தனது சொந்த உழைப்பில் வாழவேண்டுமெனும் வைராக்கியத்தில் தனது மூன்று சில்லு சைக்கிளிலேயே சிறு நடமாடும் வியாபாரத்தைத் தினமும் மேற்கொண்டு அதிலிருந்து கிடைக்கும் சிறு இலாபத்தைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டுகிறார் சிலாவத்தை தீர்த்தக்கரையைச் சேர்ந்த 53 வயதான தங்கராசா கணேசலிங்கம். இவர் தினமும் காலைவேளை எவரது உதவியுமின்றி மூன்று சில்லு சைக்கிளில் தீர்த்தக்கரையி லிருந்து 5 கிலோமீற்றர் தூரமுள்ள முல்லைத்தீவு நகர்வரை சென்று வியாபாரத்தில் ஈடுபடுவார். (த-102)

## சிங்கள - முஸ்லிம் இரு தரப்புக்கும் அளுத்கம கலவரத்தால் பாதிப்பாம்

### ஜெனிவாவில் கூறியது இலங்கை அரசு

ஜெனிவா, ஜுன் 22

அளுத்கமவில் இடம்பெற்ற கலவரத்தினால் சிங்கள - முஸ்லிம் ஆகிய இரு சமூகங்களுக்குமே பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை அரசு, ஐ.நா மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் குறித்து ஜெனிவாவில் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் மேற்கு நாடுகளால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் 26 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வில், இலங்கையில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து ஜேர்மனி, கனடா, நோர்வே ஆகிய நாடுகள் கேள்வி எழுப்பின.

இந்த நாடுகளால் எழுப்பப்பட்ட கேள்விக்கு, ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதித் தூதர் மனிசா குணசேகர பதிலளித்துள்ளார்.

இலங்கை அரசு எந்தவொரு இன அல்லது மத வன்முறைகளையும் மன்னித்ததில்லை. சம்பவம் தொடர்பான நம்பகமான தகவல்கள் திரட்டப்பட்டு, பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எல்லா மக்களினதும், வழிபாட்டு இடங்கள் மற்றும் சொத்துக்களினதும் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதி செய்யும் என்று இந்தச் சபைக்கு உறுதிமொழி அளிக்கிறது.

இந்த வன்முறைகளில், 2 முஸ்லிம்கள், ஒரு தமிழர் என்று மூவர் கொல்லப்பட்டுள்ளனர். 6 பொலிஸார் உள்ளிட்ட 13 சிங்களவர்கள், 13 முஸ்லிம்கள் என்று 26 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இரு சமூகங்களினதும், 69 வீடுகள், 83 கடைகள், 11 வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

தற்போது நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றனஎன்றும் அவர் சபையில் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## முஸ்லிம்கள் மீதான வன்முறைகள்; இலங்கை அரசின் கவனம் தேவை

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல்

ஜெனிவா, ஜுன் 22

சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து இலங்கை அதிகாரிகள் விரைந்து விசேட கவனம் எடுத்துப் புலனாய்வு செய்ய வேண்டும். பொதுபல சேனா போன்ற தீவிரவாதப் பௌத்த குழுக்களுக்கும் இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கும் உள்ள உறவுகள்-தொடர்புகள் - குறித்து அரசு தீவிரமாக ஆராய்ந்து கண்டறிய வேண்டும்.

இவ்வாறு மனித உரிமை கள் கண்காணிப்பகம் அரசை வற்புறுத்தியிருக்கின்றது.

முஸ்லிம்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறை அட்டகாசங்களைக் கண்டித்து, அது குறித்து கவலை தெரிவித்து - அந்த அமைப்பு நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ் வாறு கோரப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி உட்பட சிரேஷ்ட அரசு அதிகாரிகள் வன்முறைகளுக்கு எதிராகக் கருத்து வெளியிட்டுள்ளமையுடன் பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் கூறியுள்ளனர். எனினும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான இந்த உணர்வெழுச்சியைத் தூண்டிவிட்டமைக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதை அரசு கண்டறிய வேண்டும். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்களைக் கைது செய்தால் மட்டும் போதுமானதன்று. புலனாய்வு செய்து அதற்குத் தூண்டியோரை அடையாளம் காண வேண்டும். - என்று மனித உரிமைககள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிரிவுக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்தார். துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் பயன்தராத போக்கையே ராஜபக்ஷ அரசு தொடர்ந்து பின்பற்றி வருகின்றது. என்று குறிப்பிட்ட அவர், இந்த வன்முறையின் முடிவில், சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்செயல்கள் தொடர்பில் உரிய முறையில் அவற்றைக் கையாளத் தான் தயாராக இருக்கின்றமையை பாதிக்கப்பட்டோருக்குநீதி கிடைக்கச் செய்கின்றமை மூலமும் பொறுப்புக்கூறலை நிலைப்படுத்துவதன் வாயிலாகவும் வெளிப்படுத்த அரசு முன்வர வேண்டும் - என்றும் தெரிவித்தார். (த)

# புதனன்று மாலைதீவுக்கு பயணமாகிறார் மஹிந்த

### குருப் பெயர்ச்சி காரணமா?

கொழும்பு, ஜுன் 22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும்புதன்கிழமை மாலைதீவுக்கு இரு நாள் பயணமாகச் செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதியின் மாலைதீவுப் பயணத்துக்கான நோக்கம் மற்றும் காரணம் என்ன என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அண்மையில் ஏற்பட்ட குருப் பெயர்ச்சி காரணமாக, நாட்டில் நிற்பது ஜனாதிபதிக்குக் கெடுதலான பலனைக் கொடுக்கும் என்று சோதிடர்கள் தெரிவித்திருந்த நிலையிலேயே, ஜனாதிபதியின் மாலைதீவுப் பயணம் அமைந்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷ, அங்கு வந்திருந்த மாலைதீவு ஜனாதிபதி யாமின் அப்துல் கையூமைச் சந்தித்ததுடன் மாலைதீவுக்குப் பயணம் செய்வ தாகவும் தெரிவித்திருந்தார்.

2010 ஆம் ஆண்டு மொஹமட் நசீட் ஜனாதிபதியாக இருந்த நேரத்தில் மகிந்த ராஜபக்ஷ மாலைதீவுக்குப் பயணம் மேற்கொண்டு, மாலைதீவு அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்திருந்தார். இதன் பின்னர் மாலைதீவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்று கொண்ட யாமீன் அப்துல் கையூம் கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்குப் பயணம் செய்திருந்தார்.

கல்வி, மருத்துவ தேவைகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளுக்காக இலங்கையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாலைதீவுப் பிரஜைகள் வசித்து வருகின்றனர்என்பதுகுறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் ஏற்பட்ட குருப் பெயர்ச்சி ஜனாதிபதிக்குக் கெடுதியான பலன்களைக் கொடுக்கும் என்பதால், நாட்டில் இருந்து வெளியேறிச் சில நாள்கள் வெளிநாட்டில் தங்கியிருக்குமாறு அவரது சோதிடர்கள் ஆலோசனை வழங்கியிருந்தாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

குருப் பெயர்ச்சியினால் ஏற்படும் பாதகங்களைத் தவிர்ப்பதற்காக 100 பேருக்குத் தானம் வழங்கி விட்டு, வெளிநாடு செல்லுமாறு சோதிடர்கள் கேட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில், ஜனாதிபதி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, கண்டியில் தானம் வழங்கியிருந்தார். அத்துடன் எதிர்வரும் புதன்கிழமை வெளிநாட்டுக்கும் புறப்பட்டுச் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## தவறிவீழ்ந்த சிறுவன் சாவு

முல்லைத்தீவு, ஜுன் 22

கடந்த 19ஆம் திகதி முல்லைத்தீவில், சைக்கிளில் இருந்து தவறிவீழ்ந்த 9 வயதுச் சிறுவன் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தான்.

முல்லைத்தீவு, அலம்பில் உப்பு வெளியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுவேந்திரன் (வயது-9) கடந்த 19ஆம் திகதி வீட்டிலிருந்து சைக்கிளில் சென்றவேளை அது வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் சிறுவன் வீழ்ந்துள்ளார்.

இதனால் பலமாக அடிபட்ட நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரின் இறப்பு விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (த-4-433)

## ஆலய வளர்ப்பு மாடுகளால் அடியவர்களுக்கு அசௌகரியம்

யாழ்ப்பாணம்.ஜூன் 22
நயினாதீவு அம்பாள் ஆலயத்துக்கு தினமும் உள்ளூர். வெளியூர், புலம்பெயர்ந்த மக்கள் வழிபாட்டுக்காக செல்கின்றனர்.
இந்த அடியார்களுக்கு ஆலய வளாகத்தில் காணப்படும் மாடுகள் தொல்லை தருவதாக அவர்கள் தெரிவித்தனர்.
அம்பாளுக்கு அர்ச்சனை செய்துவிட்டு ஆலய முன் மண்டபத்தில் வைக்கப்படும் அர்ச்சனைப் பொருள்களை மாடுகள் பைகளுடன் இழுத்துச்சென்றுவிடுகின்றன. அவை ஆலய முன் மண்டபத்தில் இளைப்பாறுவோரை மிதித்துச் செல்லும் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன. இதே வேளை- ஆலயத்துக்கு அருகில் காணப்படும் அன்ன தான மடத்தின் முன்பக்கமும் பின் பக்கமும் மாடுகள் குவிந்து நின்று இடைஞ்சல் தருவ தாகவும் தெரிவிக்கப்பட்டது. மாடுகளுடன் ஆலய வளா கத்தைச் சுற்றி கட்டாக்காலி நாய்களும் அடியார்களுக்குத் தொல்லை தருவதாகவும் கூறப்படுகிறது.
ஆலய வளாகத்தைச் சுற்றி மதில்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் அவை ஆலய வளர்ப்பு மாடுகள் என்பதால் ஆலய நிர்வாகத்தினர் இதில் அக்கறை கொள்ளாமல் உள்ளனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (த-9)

## காணி உறுதிகள் வழங்கக் கோரி மணியம்தோட்ட மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வீட்டுத்திட்ட பயன்களைப் பெற்றுக்கொள்ள வசதியாக தமது காணிகளுக்குரிய உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி மணியம் தோட்ட மக்கள் நேற்று சனிக் கிழமை போராட்டத்தில் குதித்தனர்.
மணியம்தோட்ட கிராம அலுவலர் பணிமனை முன்பாக ஒன்றுதிரண்ட மக்கள் நேற்றுக் காலை முதல் மதியம் வரை கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது குழுமி நின்று அமைதி வழியில் போராட்டம் செய்தனர்.
காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் 40 வருடங்களுக்கு முன்னர் மணியம் என்பவரின் காணியை அரசு மக்களுக்கு பகிர்ந்தளித்து இந்தக் கிராம குடியிருப்பு ஆரம்பிக்கப்பட்டது.
எனினும் இதுவரை காணிகளில் குடியிருப்போருக்கான உறுதிகள்வழங்கப்படவில்லை. அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்த போதும் இதுவரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.
இதனால் இந்திய வீட்டுத் திட்டத்துக்கு இந்தக் கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் காணிகளுக்கான உறுதிகள் குடியிருப்பாளர்களிடம் 35 வருடங்களுக்கு மேலாக குடியிருப்போர் இல்லாமையினால் வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லையெனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.
இதேவேளை - சில காணிகள் அண்மைக்காலங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ள போதிலும் அவற்றிற்கு உறுதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.
எனவே அரச திணைக்கள உதவித் திட்டங்களைப் பெற வசதியாக மணியம்தோட்ட கிராமத்தில் குடியிருப்போருக்கு உறுதிகளைவழங்கநடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-135)


போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள்

## தூண்டில் தொழிலில் கிளாலி மீனவர்கள்

பளை.ஜூன் 22
கிளாலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் அரசினால் தடைசெய்யப்பட்ட தொழில்களுக்குப் பதிலாகத் துண்டில் தொழிலை ஆரம்பித்துள்ளனர். இவர்களின் முன்மாதிரியான செயற்பாட்டினால் கடல் உணவுகளின் இனப்பெருக்கமும் வளர்ச்சியும் அதிகரிப்பதுடன் கடல் வளமும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.
தங்கூசி வலை, இழுவை வலை, கூட்டு வலை போன்ற தடைசெய்யப்பட்ட வலைகளை மீனவர்கள் பயன்படுத்துவதால் கடல்வளம் அழிவதுடன் கடலுணவுகளின் இனப் பெருக்கத்திலும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் கடற்றொழிலை நம்பி வாழ்ந்துவரும் ஆயிரக் கணக்கான மீனவர்களின் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் வாழ்க்கை நடத்த முடியாத நிலையும் உருவாகியுள்ளது.
இந்தத் தொழிலை கட்டுப் படுத்த முன்வந்துள்ள கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்கள அதிகாரிகளினால் கடந்த மாதம் பூநகரி கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்ததுடன் அதற்கான காலவரையறையும் வழங்கியிருந்தனர். இந்தக் கூட்டத்தில் இரு மாவட்டங்களையும் சேர்ந்த மீனவப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.
இதையடுத்து அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய கிளாலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்கள் தடை செய்யப்பட்ட வலைகளுக்குப் பதிலாகத் துண்டில் தொழிலை ஆரம்பித்துள்ளனர்.
இவர்களின் முன்மாதிரியான இந்தச் செயற்பாட்டினால் கடல் வளம் பாதுகாக்கப்படுவதுடன் கடலுணவுகளின் இனப் பெருக்கமும் வளர்ச்சியும் பாதுகாக்கப்பட்டுள்ளது. (த-115)

## முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு நல்லூர் பிரதேச சபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
அளுத்கம, பேருவளை உட்பட பல இடங்களில் முஸ்லிம் மக்க ளுக்கு எதிராக இடம்பெற்ற வன் முறைகளையும், தாக்குதல் களையும் கண்டிப்பதுடன் இன, மதவாதங்களைத் தூண்டி கல வரத்தை ஏற்படுத்தும் பேரின வாதிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி நல் லூர் பிரதேச சபை நேற்றுமுன்தினம்இடம்பெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச சபைக் கூட்டம் தவிசாளர் ப.வசந்த குமார் தலைமையில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்ததில் இன, மதவாதிகளின் வன் செயல்களுக்கு இலக்காகி உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்திய தவிசாளர், தென் பகுதியில் இன, மத வாதம் வலுவடைந்து வருகின்றது. அதைக் கண்டும் காணாதவர்களாக ஆட்சியில் உள்ளவர்கள் இருப்பது குறித்து மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் மக் கள் மீது இடம்பெற்ற வன்முறைகளை நாம் கண்டிப்பதுடன் அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கோருகிறோம்- என்றார்.
தீர்மானத்துக்கு ஆதரவாகப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அ.ரவீந்திரதாஸ், முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல் குறித்து எமது அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார். தமிழ் பேசும் முஸ்லிம் களுக்கு எதிரான இந்த வன் முறையை நாங்கள் கண்டிக்கிறோம் - என்றார்.

**இன, மதவாதங்களைத் தூண்டி கலவரத்தை ஏற்படுத்தும் பேரினவாதிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி நல்லூர் பிரதேச சபை நேற்றுமுன்தினம் இடம் பெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

இந்தப் பிரேரணையை நாங் கள் ஒட்டுமொத்தமாக ஆதரிக் கிறோம் என ஆளும் எதிரணி உறுப்பினர்கள் தெரிவித்தனர். இதனை யடுத்துப் பிரேரணை ஒருமனதாக நிறை வேறியது. (த-7)

## அமலமரித் தியாகிகள் சபை முதல்வர் வண. பிதா எட்வின்

குருநகர், ஜூன் 22
அமலமரித் தியாகிகள் சபையின் யாழ்ப்பாணத்துக்கான புதிய முதல்வராக வண. பிதா எஸ்.எட்வின் வசந்தராஜா அடிகளார் அமலமரித் தியாகிகள் சபையால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் தமது இறையியல் கலாநிதி பட்டப் படிப்பை பிலிப்பைன்ஸ் நாட்டில் நிறைவு செய்த பின்னர் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்து தமது மகாண முதல்வர் பதவியை பொறுப்பேற்றுள்ளார். (ஓ-51)

## ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவை வழங்குவதற்குப் பணம் இல்லை

### கைவிரிக்கிறது வடமராட்சி கல்வி வலயம்

கரணவாய், ஜூன் 22
ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்குவதற்குத் தம்மிடம் பணமில்லை எனக் கையை விரிக்கின்றது வடமராட்சி கல்வி வலயம்.
வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கற் பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்களுக்கு அவர்களின் பதவி உயர்வுக்குப் பின் பெருமளவு பணம் நிலுவையாக வழங்கப்படவுள்ளது.
இந்த நிலுவை இம்மாத சம்பளத்துடன் வழங்கப்படும் என எதிர்பார்த்திருந்த ஆசிரியர்களுக்கு அது வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.
இதனை அடுத்து இது தொடர்பாக வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள கணக்குக் கிளையுடன் தொடர்புகொண்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கேட்டபோது, சம்பள நிலுவை வழங்குவதற்கு தம்மிடம் போதிய பணம் கையிருப்பில் இல்லை எனவும், பணம் வந்ததும் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.
20 ஆயிரத்துக்குக் குறைவாக நிலுவை காணப்படுமாயின் அதனை வழங்கும் உடன் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும், கூடிய தொகையாக இருந்தால் உடனடியாக தம்மால் வழங்க முடியாது எனவும் கணக்குப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது என பாதிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (த)






# தெல்லிப்பழையிலும், நவாலியிலும் நேற்று கடாக்கள் வெட்டிச் சரிப்பு

வலி.வடக்கு, ஜூன் 22

தெல்லிப்பழை துர்க்காபுரம் பேரம்பல வைரவர் ஆலயத்தில் நேற்று சனிக்கிழமை சுமார் 250 இற்கும் மேற்பட்ட கடாக்களும் நூற்றுக்கு மேற்பட்ட சேவல்களும் வெட்டிச் சரிக்கப்பட்டன. ஏற்கனவே மல்லாகம் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு ஏற்ப மூடி மறைக்கப்பட்ட இடத்தில் வைத்து தனித்தனியாக கடாக்கள் வெட்டப்பட்டு அங்கிருந்து ஒரு கடா அகற்றப்பட்ட பின்னரே மற்றைய கடா வெட்டப்பட்டதுடன் பொது மக்கள் யாரும் வெட்டும் காட்சியை பார்வையிட அனுமதிக்கப்படவில்லை. காலை முதல் வலி.வடக்கு பிரதேச சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் கடாக்களை பரிசோதனை செய்து வெட்ட அனுமதி அளித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



இதேவேளை - மல்லாகம் நீதிவானின் உத்தரவின்படி வலி.தென்மேற்குப் பிரதேச சபை தவிசாளரின் அனுமதியுடன் சுகாதாரப் பரிசோதகர்களின் நடைமுறைகளுக்கு அமைய நவாலி தில்லைக்காளி அம்மன் ஆலயத்திலும் நேற்றுக் காலை வேள்வி நடைபெற்றது.

பொதுமக்கள் எவரும் பார்க்காதவாறு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கொல்களத்தில் 50 இற்கும் மேற்பட்ட கடாக்கள் வெட்டி சரிக்கப்பட்டன.

நவாலி தில்லைக்காளி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள மிருகப் பலியை தடுத்து நிறுத்துமாறு இந்துமகா சபையினர் மானிப்பாய் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் இந்த விடயம் பற்றி மல்லாகம் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இது பற்றி விசாரணை செய்த நீதிவான், பிரதேச சபை தவிசாளரின் அனுமதியுடன் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய மிருகப் பலியை நடத்துமாறு உத்தரவிட்டிருந்தார். (து-86-115)

## போக்குவரத்துப் பொலிஸாரின் இரவுக் கடமை இடை நிறுத்தம்

### யாழ்ப்பாணம் முதல் வவுனியாவரை

வலி.வடக்கு. ஜூன் 22

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா வரையான ஏ-9 வீதியில் இரவு நேரத்தில் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினரின் கடமை கடந்த நான்கு தினங்களாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. பொது மக்களின் முறைப்பாடுகளின் காரணமாகவே இது நிறுத்தப்பட்டுள்ளதாக வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

இளவாலை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைத் தெரிவித்த அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஏ-9 கண்டி வீதியில் போக்குவரத்துப் பொலிஸாரின் இரவு ரோந்து நடவடிக்கைகளின் போது விரும்பத்தகாத சம் பவங்கள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கும் சாரதிகளுக்கும் ஏற்படுவதாக தமக்குத் தொடர்ந்து கிடைத்து வந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இத்தகையதொரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதுடன் மாலை 6 மணியில் இருந்து அடுத்த நாள் காலை 6 மணிவரை போக்குவரத்துப் பொலிஸாரின் கடமைகள் நிறுத்தப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-86)

## முன்னாள் போராளியைக் காணோம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

நெடுங்கேணி, கீரிசுட்டான் பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் கடந்த மாதம் 27ஆம் திகதியில் இருந்து காணாமற்போயுள்ளார் என்று அவரது உறவினர்களால் நெடுங் கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவசிதம்பரம் சிவகுமார் என்பவரே கடந்த மாதம் 27ஆம் திகதியிலிருந்து காணவில்லை என்று கடந்த 16ஆம் திகதி அவரது மனைவி முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த மாதம் 14ஆம் திகதி வீட்டில் இருந்து தனது கணவர் கிளிநொச்சிக்கு சென்றார் என்றும், கடைசியாக 27ஆம் திகதி தன்னுடன் கணவர் தொலைபேசி மூலம் உரையாடினார் என்றும், அன்றில் இருந்து கணவருடன் தொடர்பு இல்லாமல் போய்விட்டது என்றும் தனது முறைப்பாட்டில் அந்தப் பெண் தெரிவித்துள்ளார். (ஐ-435)

## கைதான இந்திய மீனவர்கள் இரு தினங்களில் விடுதலை

யாழ்ப்பாணம்.ஜூன்.22

இலங்கைக் கடற்படையினரால் கடந்த 3 தினங்களுக்கு முன்னர் கைது செய்யபப்பட்ட மீனவர்கள் இன்னும் இரண்டு தினங்களில் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகக் கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த இரு தடவைகள் இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் இரு நாட்டுக்கும் நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் நீதிமன்றில் விளக்கமறியல் நீடிக்கப்பட்டபோதும் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் இந்தத் தடவை நெடுந்தீவு, தலைமன்னார், திருகோணமலைக் கடற்பரப்புக்களில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் அந்தந்த சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ளனர்.

நல்லிணக்கத்தின் அடிப்படையில், இம்முறையும் மீனவர்கள் விடுதலை செய்யப்படுவர் எனத் தமிழக மீனவர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் இந்தத் தடவை இலங்கை அரசு ஏமாற்றி விட்டது.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

மீனவர்கள் கைது செய்யப்பட்டவுடன் இந்திய மத்திய மாநில அரசுகள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்து கடிதம் அனுப்பி வைப்பார்கள் ஆனால் இது வரை மீனவர்களை விடுவிக்குமாறு இந்திய மத்திய மாநில அரசுகள் கோரவில்லை . எனினும் இன்னும் இரு தினங்களில் அவ்வாறான கோரிக்கைக் கடிதம் கிடைக்கப்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு இந்திய அரசு கோரினால் மட்டும் மீனவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசு தீர்மானிக்கும் எனத் தெரிவித்துள்ளது. (த-14)

# நடவடிக்கை இல்லையெனில் தமிழகம் தழுவிய போராட்டம்

## மீனவர் சங்கங்கள் எச்சரிக்கை

இராமநாதபுரம்.ஜூன் 22

மீனவர் பிரச்சினைக்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகம் தழுவிய மாபெரும் போராட்டத்தை நடத்தத் தமிழக மீனவர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்படிப்பதாக இந்திய மீனவர்கள் தொடர் தாக்குதலுக்கு உள்ளாவதுடன் அவர்களது மீன்பிடி வளங்களும் சேதமாக்கப்படுகின்றன. இதனைவிட மீனவர்கள் கைது செய்யப்படுவதுடன் படகுகளும் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இலங்கைக் கடற்படையின் தொடர் தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கை காரணமாகத் தமிழகத்தில் இருந்து குறைவான படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்கின்றனர்.

தடைக் காலத்திற்கு பின் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக்கடற்படையினரின் தொடர் தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் வேலை நிறுத்தம் மற்றும் போரட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஸ்ணனை சந்தித்து தங்களுடைய வாழ்வாதாரத்தை எடுத்துக் கூறினர். இதன்பின்னர் வேலை நிறுத்தத்தை கைவிட்டு விட்டு கடலுக்குச் சென்ற மீனவர்கள் 46 பேரை கடந்த 18ஆம் திகதி இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.

கைது செய்யப்படும் மீனவர்களை மட்டும் விடுதலை செய்து விசைப் படகை விடுதலை செய்யாமல் இருப்பதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகிறது.

மேலும் இராமேஸ்வரம் துறைமுகத்தில் 800 விசைப் படகுகள் உள்ள நிலையில் இன்று 150க்கும் குறைவான படகுகளிலே மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். அவர்களும் நாளை திரும்பி வருவார்களா என்ற உத்தரவாதம் இல்லாத சூழ்நிலை உருவாகியுள்ளதால் மத்திய, மாநில அரசுகள் படகுகளையும் மீனவர்களையும் மீட்டுத் தர வேண்டும் பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடி உரிமையைப் பெற்றுத்தர வேண்டும். இனியும் நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தினால் மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராகத் தமிழகம் தழுவிய போராட்டத்தை நடத்த உள்ளதாக மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் சங்கங்கள் கூட்டம் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன. (த-14)

## ஞானம் பவுண்டேசன் அலுவலகம் இன்று முல்லையில் திறப்பு

முல்லைத்தீவு. ஜூன் 22

ஞானம் பவுண்டேசன் எனும் அரச சார்பற்ற நிறுவனத்தின் முதலாவது மாவட்ட அலுவலகம் இன்று மு.ப. 10 மணிக்கு முல்லைத்தீவு முள்ளியவளையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வின்போது ஊனமுற்ற 10 பயனாளிகளுக்கு சக்கர நாற்காலியும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 100 மாணவர்களுக்கு சைக்கிளும் இதில் பாரதி சிறுவர் இல்லத்துக்கு - 10, நல்லாயன் சிறுவர் இல்லத்துக்கு - 10, பாரி சிறுவர் இல்லத்துக்கு - 5, அன்பு சிறுவர் இல்லத்துக்கு - 5 சைக்கிள்களும் உள்ளடங்கலாக ஏனையவை பாடசாலை அடிப்படையிலும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் 100 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் பாடசாலையில் கல்வியைத் தொடரும் 100 வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் 2000 ரூபா என்ற அடிப்படையிலும் நிதி வழங்கப்படவுள்ளது. இதில் சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த 50 மாணவர்களும் உள்ளடங்குவர். இவற்றுடன் பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பைத் தொடரும் 50 வறிய மாணவர்களிற்கு மாதாந்தம் 5000 ரூபா என்ற அடிப்படையிலும் நிதியுதவி வழங்கப்படவுள்ளது அத்துடன் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் 10 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. (த)

# உயிருக்கு ஆபத்தான ஆயுதங்கள் வைத்திருந்தால் ஒப்படையுங்கள்

## நெல்லியடிப் பொலிஸார் மக்களிடம் கோரிக்கை

கரணவாய், ஜூன் 22

பிறருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய தடை செய்யப்பட்ட கத்தி, வெட்டக் கூடிய கத்தி, வாள் மற்றும் ஆயுதங்கள் என்பவற்றை வைத்திருப்போர் அவற்றை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது கிராம சேவையாளர்களிடமோ உடன் ஒப்படையுங்கள் என்று நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் பரவலாக வாள் வெட்டுச் சம்பவங்கள், கத்திக் குத்துச் சம்பவங்கள் இடம் பெற்றுவருகின்றன. இதனால் உயிர் இழப்புக்கள் ஏற்படுவதுடன் பலர் காயங்களுக்கும் உள்ளாகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இந்தக் கோரிக்கையை நாம் விடுக்கின்றோம்.

இலங்கைச் சட்டக் கோவைகளின் பிரகாரம் சட்டத்திற்கு அமைவாக தடை செய்யப்பட்ட கத்தி, கூரிய வெட்டக் கூடிய கத்தி, வாள் மற்றும் ஆயுதங்கள் வீட்டில் வைத்திருத்தல், பாவனை செய்தல், கொண்டு செல்லல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

இத்தகையவற்றை வீடுகளில் வைத்திருப்போர் அவற்றை இரண்டு வாரங்களுக்குள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது கிராம சேவையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பொலிஸ் உத்தியோகத்தர் மூலம் வீடுகளில் சோதனை செய்யப்படும் போது அவ்வாறான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-108)

## யாழ்ப்பாணத்தில் பள்ளிவாசல் மீது இனந்தெரியாதோரால் தாக்குதல்

### நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம், நாவாந்துறை வீதியில் உள்ள ஹமால் பள்ளிவாசல் மீது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும் இதனால் பள்ளிவாசல் யன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன என்றும் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

> "பள்ளி வாசலின் கண்ணாடி யன்னல் ஒன்றை அடித்து உடைத்ததுடன் மின்குமிழ் ஒன்றையும் சேதமாக்கிவிட்டு வேகமாக தப்பிச் சென்றனர்

வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பள்ளிவாசலின் கண்ணாடி யன்னல் ஒன்றை அடித்து உடைத்ததுடன் மின்குமிழ் ஒன்றையும் சேதமாக்கிவிட்டு வேகமாக தப்பிச் சென்றனர் என்று அயலவர்கள் பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் தெரியப்படுத்தினர்.

சம்பவம் குறித்து இரவு 12.30 மணிக்கு யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. பள்ளிவாசலுக்கு சென்ற பொலிஸார் நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-7-86)

### வீடும் வளவும் விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதான வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயில் 9 பரப்பில் வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. (C/14546)

தொடர்புகளுக்கு: 077 3404101

### வாகனங்கள் விற்பனைக்கு

உங்கள் மனதைக் கவரும் Premio, Allion, Aqua, Vessel, Prius Hybrid மற்றும் பல வகையான வாகனங்கள் உங்கள் விருப்பத்திற்கு அமைய ஜப்பானிலிருந்து நேரடியாக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் குறைந்த விலையில் அதி உயர் தரத்தில் பெற்றுத்தரப்படும் அத்துடன் காப்புறுதி வசதியும் செய்து தரப்படும்.



(C/14548)

**0766 356 090**

### வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் இருந்து சில நிமிட நடைப்பயண தூரத்தில் உள்ள சீனிவாசகம் வீதியில் வீடு வாடகைக்குண்டு.

இன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை பார்வையிடலாம்.

தொடர்பு: 071 305 5425, 075 052 0355

### விற்பனைக்கு

கோயில் வீதியில் புதிய கட்டடத்துடன் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 774 0941 (49138) (4.3.6)

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## பதவியேற்கும் வைபவம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 22

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் உத்தியோகத்தர்கள் பதவி ஏற்கும் வைபவம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ். சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள ஐ.ஐ.எஸ்.சிற்றி கம்பஸ் மண்டபத்தில் நடை பெறும். லயன் ரி.ரி.சிவதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லயன் மருத்துவர் வி.தியாகராஜாவும் அவரது பாரியார் சீமாட்டி லயன் றன்சி தியாகராஜாவும் கலந்து கொள்கின்றனர். (ஒ-10)

## ஆக்கம் கோரல்

நெடுந்தீவு, ஜூன் 22

நெடுந்தீவு பிரதேச செயலக கலாசார பேரவையால் நடத்தப்படவுள்ள கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள செய்தி மடலுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

நெடுந்தீவு பிரதேசம் சார்ந்த பிரதிபலிப்புடையதான கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடல்கள், செய்தித்துளிகள், விடுகதைகள், குறுங் கவிதைகள் போன்ற ஆக்கங்களை தலைவர், கலாசார பேரவை, பிரதேச செயலகம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பேரவை கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1981, 08 இல் செவ்வாய் கிரக பாவம் 61 உயரம் 5' 11'' ஆங்கில ஆசிரியர் 2012 இல் திருமணம் நடந்து தகுந்த காரணத்தினால் 02 வாரங்களில் விவாகரத்து. பொறுப்புகள் இல்லை. பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 011 271 8862/077 926 3956

### அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)
Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222
011 205 8182 (Paul)

### கார் விற்பனைக்கு

Nissan AD Wagon - VY-11 (Japan) சகல வசதியுள்ள Car விற்பனைக்கு.

தொடர்பு: 076 641 9826

(பி14538) (12.3.6) ஞாயிறு/திங்கள் பார்வைக்கு.

### பண வைப்பு

USA, Canada, UK, Australia, Newzealand, Italy, Japan, France, Denmark, Cyprus போன்ற நாடுகளுக்கு செல்வதற்கு வங்கியில் பண வைப்பு (Bank Balance (Sponcer)) செய்து தரப்படும்.
*USA, Canada and UK ஆலோசனைகள்

தொடர்பு:077 940 6751 வவுனியா.

### WANTED AGENTS

**From all parts of Sri Lanka & Maldives**

To promote an
**International Business & Hospitality School**
No investment, high earning capacity.
Director Arriving from Australia for information session and appointing agents

**Introductory session will be held on**
Wednesday **25th June** from 2.00pm - 5.00pm
or
Saturday **28th June** from 9.00am - 12.00 noon

Bring along : National ID , 2 reference letters & Resume
Please register in advance............
Call over or by email : Info@ihma.lk
Contact -
Asoka 0777 178229 Jayani 011 2 733717
Madura 0772 833825 (C/14536)

IHMA - International Hospitality and Management Academy
No. 290, Galle Road, Mount Lavinia Web: www.ihma.lk

## மனைவியை தாக்கிய கணவனுக்கு சிறை

மனைவியை கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய கணவனுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஆறு மாத சிறைத் தண்டனையும், நட்ட ஈடாக ஒரு லட்சம் ரூபா வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது.

நுணாவில்மேற்கைச் சேர்ந்த குறித்த நபர் தனது இரண்டாவது மனைவியைத் தாக்கியதுடன் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியுமுள்ளார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றகுறிப்பிட்ட பெண் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து அவரது கணவனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து பெண்ணுக்கு நட்ட ஈடாக ஒரு லட்சம் வழங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டது. (வ-9)

## இந்திய புடைவை வியாபாரி கைது

சாவகச்சேரி புறநகர்ப் பகுதியில் புடைவைகள் விற்பனை செய்த இந்திய வியாபாரி சாவகச்சேரி நகர வணிகர்களால் பிடிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு பகுதியில் இந்திய வியாபாரி ஒருவர் வீடுவீடாகச் சென்று புடைவை வியாபாரத்தில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற வணிகர் குழுவினர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நபரைப் பிடித்தனர்.

குறித்த வியாபாரி மன்னிப்புக் கோரியதை அடுத்து மன்னித்து அனுப்பி வைக்கப்பட்டதாக வணிகர்கள் தெரிவித்தனர். (வ-9)

### அங்கஜன் அண்ணாவுக்கு வாழ்த்துக்கள்



எதிர்கால விடிவெள்ளியாய் இளைஞர்களை நெறிப்படுத்தி எதிர்பார்ப்பு ஏதுமின்றி மக்கள் வங்கியில் எமக்கான நியமனத்தை முறையான வழிப்படுத்தலினால் பெற்றுத் தந்து எம் வாழ்வில் ஒளியேற்றிய யாழ். மாவட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடமாகாணசபை உறுப்பினருமாகிய எங்கள் அங்கஜன் அண்ணாவுக்கு நல் வாழ்த்துக்கள்.

(49147)(4.3.6)

தொடரட்டும் உம் பணி
பின் தொடரும் எம் அணி

2014 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் நியமனம் பெற்ற ஊழியர்கள்.

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

கொனிக்கா கலர்லாப்பில் 19.06.2014 வியாழக்கிழமை வாடிக்கையாளர் இருக்கையிலிருந்து தங்க ஆபரணங்கள், ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 773 0567
கொனிக்கா கலர் லாப். (49143) (12.3.6)

### வீடு வாடகைக்குண்டு

இல.46, கோயில் வீதி, (சிவன் வீதிச்சந்திக்கு அருகில்) நல்லூர் எனும் முகவரியில் 4 அறைகள் வீட்டிற்குள் இணைந்த குளியலறையுடன் முற்றிலும் tiles பதிக்கப்பட்ட சொகுசு வீடு வாடகைக்கு உண்டு. 6 வாகனங்கள் நிறுத்தக்கூடிய நிலப்பரப்பு, நல்ல குடிதண்ணீர் உள்ள வெட்டுக்கிணறு, மோட்டர், நீர்த்தாங்கி வசதிகள் அனைத்தும் உண்டு.

தொடர்பு: 077 735 5096

### TILKO JAFFNA CITY HOTEL — Vacancy

4 Star hotel Requires an internal night Audit, with Book - keeping Knowledge and Computer Skills. English is an added Advantage. (பி10161) (12.3.6)

Contact: The General Manager.
**077 981 7617/021 222 5969**
info@cityhotel.com 70/6, K.K.S, Road Jaffna.

### பதவி வெற்றிடம் - Vacancy

1) Manager & Assistant Manager
2) It Department Assistant
   தகைமை : A/L
   Software & Hardware அறிவுள்ளவர்கள்
3) Sales Executive

வயதெல்லை: 18 - 30 வரை.

சுயவிவரக் கோவைகளைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**Annai Nagaa Food City**
No.46, 36th Lane,
Wellawatte, Colombo - 06. (சி10144) (12.3.6)
Email: anfccolombo@gmail.com

### YOGIS

Institute of Beauty
Therapy, Hair Dressing & Home Science (Pvt) Ltd

குறுகிய கால அழகுக்கலை பயிற்சிகள்
கேக் ஐசிங் பயிற்சிகள்
புதிய வகுப்புக்கள் 28.06.2014 ஆரம்பமாகவுள்ளன.
சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Regd No: PV 98755 (சி/10160) (4.3.6)

**Mrs. Yogini Shanmuganathan**
Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make-up& Character Make-up (India)
Diploma in Advanced Modern Make -up Course with Air Brush Make-up (India)
Diploma in Home Economics (Srilanka)
T.P: 077 716 4923, 021 222 2796

## 32 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்.......

மலர்வு
22.06.1982





மறைவு
14.11.2010

## ஜஸ்ரின் றீகன் றெனோல்ட்

கண்ணீருக்குள் நின் குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா - உந்தன்
பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினில் காணாது தவிக்கின்றோம்
நீருக்குள் உந்தன் வாய்மொழி நின்றாலும்
மூடிய விழி மலர்ந்திடா நின்றாலும் றீகனே
எங்கள் மூச்சினில் கலந்திருப்பாய்
என்றும் எங்கள் பேச்சினில் நிறைந்திருப்பாய்
வாழ்நாள் தனில் எம்மோடு வாழ்ந்திடுவாய்.

உன் நினைவுகளுடன்
ஜஸ்ரின்
குடும்பத்தினர்

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

(49145) (45.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

வேலணை வடக்கு

## திருமதி மனோன்மணி இராசரெத்தினம்

அவர்களின்

## ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி



"அன்னையே உம்மை நீங்கி
ஆறெனும் ஆண்டுசென்றும்
கண்ணையே மூடுநீரோ
கலைந்தது இல்லையம்மா - எம்
தேகமே! தேனே! பாலே! எங்கள்
தென்பெனும் உதிரமே நீ
ஓடுறாய் உள்ளாய் எம்முள்
ஓம்பினோம் அம்மை ஐயனார்
தாளதில் சேவைகொண்டு
தாய்மையே அமைதிகொள்வீர்...."
ஓம் சாந்தி..! சாந்தி..!! சாந்தி..!!!

மகன்
இ.பரநிருபசிங்கம்.

81.A, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.
வேலணை வடக்கு,
வேலணை.

தோற்றம் 06.05.1920

திதி: தசமி

மறைவு 28.06.2008

[49146][12.3.6]

# மரண அறிவித்தல்

## செல்லையா நவரத்தினராஜா (பட்டு)

(வலி/கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் ஊழியர்)



கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நவரத்தினராஜா 20.06.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், பாலசிங்கம் - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சுபாசினியின் அன்புக் கணவரும், டனிஷா (3ஆம் வருடம் கலைப்பிரிவு யாழ்.பல்கலைக்கழகம்), வேணுஜா, தர்ஷினி, தீபநேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தவலோகநாதன் மற்றும் பரமநாதன், கௌரிமலர், ஜெகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கமலேஸ்வரி, பாஸ்கரதேவி, ரவிக்குமார், குமுதினி, தேவமனோகரி, ஜெயக்குமார், சுகந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயரட்ணம், ஈஸ்வரன், சிவகௌரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப.10.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பருத்தித்துறை வீதி,
கட்டைப்பிராய்.

(49150)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## பஞ்சரத்தினம் சண்முகதாசன்

(உரிமையாளர்-காவேரி சில்க்ஸ்,
பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சரத்தினம் சண்முகதாசன் கடந்த 20.06.2014 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் செம்பொற்சோதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான பஞ்சரத்தினம்-பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், வத்சலா, தர்மிலா (கொமர் ஷல் வங்கி-சாவகச்சேரி), தினேஸ், ரமேஷ் ஆகியோரின் அன் புத் தந்தையும், சகுந்தலா, திருநாதன், திலகாநந்தன், லோக நாதன், விஜயபாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவ யோகன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்- கோப்பாய் பிரதேச செயலகம்) அவர்களின் அன்பு மாமனும், பாலசுப்பிர மணியம், சோதிமலர், சுகந்தி, உருத்திரகுமாரி, றஜிதா, சரஸ்வதி, இரட்ணேஸ்வரி, ஸ்ரீதர்மமூர்த்தி, கமலாஷனி ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 322, ஆனந்தன் வடலி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (23.06.2014) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப் பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

322, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.


(49149)(10.6.3)

கணித்தவர்:-
கே.வி.ரெகுநாதன்

# குருப்பெயர்ச்சிப் பலன்

## விருச்சிகம்

விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை



உங்கள் இராசிக்கு 8 இல் சஞ் சரித்த குரு பகவான் வைகாசி மாதம் 30 ஆம் திகதி (13.06. 2014) ஒன் பதாம் இடத்துக்கு இடம்பெயர்ந்து அதன் பின் அதிசாரமாக 3.12. 2014 அன்று 10 ஆம் இடத்துக்கு வந்து 22.12. 2014 இல் வக்ரகதியாக மீண்டும் 9 ஆம் இடத்துக்கு வருகிறார். ராகு கேதுக்கள் ஆனி மாதம் 7 ஆம் திகதி 21.06.2014 அன்று 12, 6 ஆகிய இடங்களிலிருந்து 11.5 ஆகிய இடங்களுக்கும், சனிபகவான் 16.12.2014 மார்கழி 1 முதல் உங் களுக்கு ஜென்மச்சனியாகவும் ஆகி பலன் கொடுக்க இருக் கிறார்கள். இந்த 2014 ஆம் ஆண்டின் குருப்பெயர்ச்சிக் காலம் முதல் சனிப் பெயர்ச்சிக் காலம் முதல் 4 பெரிய கிரகங்கள் மாறுதல் அடைவதால் எல்லா ராசி நேயர்களும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

முதலாம் இடமாகிய ஆயுள், தேகத்தை பொறுத்தவரை இந்தக் காலகட்டத்தில் $7\frac{1}{2}$சனியின் விரயச்சனி முடிந்து ஜென்மச் சனி ஆரம்பமாகின்றது. கடந்த காலத்தில் பொருளாதார ரீதியாகப் பட்ட கஷ்டங்கள் விலகி உடல் ரீதியாக, வரும் $2\frac{1}{2}$ ஆண்டு காலம் தாக்கங்களை அனுபவிக்க இருக்கின்றீர்கள். ஆயுளுக்கு எவ்விதத் திலும் பங்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

2 ஆம் இடமாகிய தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தைப் பொறுத்த வரை இந்த இடம் குருவின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம் வரை சனிபார்வை ஏற்பட்டு அதன்பின் விலகுகிறது. தன ஸ்தானத்தைப் பொறுத்தவரை பொருளாதார ரீதியாக கடந்த காலத்தில் பட்ட கஷ்டங்கள் நீங்கி ஒரு மேம்பாடு அடையக் கூடிய காலமாகும். குடும்பத்தை பொறுத்தவரை பலவிதமான சலசலப்புகள் இருந்து கொண்டே தான் இருக்கும்.

3 ஆம் இடமாகி ய தைரிய சகோதர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சனிபகவான் வீடாகி அங்கு குருபார்வை ஏற்பட்டு டிசெம்பர் மாதம் முதல் சனிபார்வையும் விழுகிறது. உங்களது சகோதர பாவமானது குருபார்வையால் நன்றாக இருந்தாலும் சனிபார்வை குருபெயர்ச்சியின் இறுதிக் காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். சகோதர, சகோதரிகளிடம் ஒருவிதமான பெருந்தன் மையுடன் நடந்துகொள்வது நன்றாக இருக்கும்.

4 ஆம் இடமாகிய தாய், வீடு, மனை, வாகனத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சனிபகவான் வீடாகி அங்கு கிரக பார்வை பலம் ஏதுமில்லை. பூமி, மனை சம்பந்தப்பட்ட விடயங்களில் முதலீடு செய்வது சுபவிரயத்தின் அறிகுறியே. அதே சமயம் விற்பதோ ஏதாவது மாறுதல் செய்வதோ இத்தருணத்தில் வேண்டாம். வண்டி வாகனங்களால் இடர்பாடுகளே அதிகம் காணப்படுகிறது. பொறுமையுடன் இருக்கவும்.

5ஆம் இடமாகிய பூர்வ, புண்ணிய, புத்திர ஸ்தானத்தை பொறுத்த வரை இந்த இடம் குருவின் வீடாகி அங்கு கேது பகவான் அமர குருபகவான் பார்வையிடுகிறார். உங்கள் பூர்வ புண்ணியத்தை குல தெய்வ அருளால் மட்டுமே கூட்டிக்கொள்ள முடியும்.

6 ஆம் இடமாகிய ருண, ரோக ஸ்தானத்தை பொறுத்தவரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம் வரை சனிபார்வை ஏற்படுகிறது. உங்கள் உடம்பைப் பொறுத்தவரை அதிகசூடு சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இந்த வருடத்தில் சனி, செவ்வாய் சேர்க்கை நடைபெறும் காலத்தில் பெண்களுக்கு வயிறு, மாதவிடாய் தொந்தரவுகளும் ஆண் களுக்கு மனச்சோர்வு, உடல் நடுக்கம், சிறுநீர்க் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. உங்கள் கடன் ஸ்தானமானது சனிபார்வையால் ஓரளவு நீங்கக்கூடிய அமைப்பு இருந்தாலும் முற்றிலும் தீரக் கூடிய காலம், சனிபகவான் தனுசு ராசிக்கு பிரவேசிக்கும் காலமே ஆகும். ஏற்ற இறக்கஙகள் கொண்ட இந்த ராசி நேயர்கள் மிகவும் ஜாக்கிரதையுடன் இருக்கவும்.

7ஆம் இடமாகிய களஸ்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி அங்கு எவ்வித கிரக பார்வை பலமும் விழவில்லை. குரு 9 இல் இருப்பது பூரண குருபலம் உள்ளதால் திருமண காரியங்கள் சிறப்புடன் நடத்த ஏற்றகாலம் ஆகும். பொதுவாக $7\frac{1}{2}$ சனியில் ஏற்படும் திருமணங்கள் வாழ்க்கையில் ஓர் உன்னதமான நிலைக்கு எடுத்துச்செல்ல சனிபகவான் அருள் புரிவார்.

8 ஆம் இடமாகிய ஆயுள் சத்ரு ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு எவ்வித கிரகபார்வை பலமும் கிட்டவில்லை. உங்கள் சனிபகவானும், குருபகவானும் போதிய ஆதரவைக் கொடுப்பதால் ஆயுளுக்கு பங்கம் கிடையாது.


9ஆம் இடமாகிய பிதுர், பாக்ய ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சந்திரனின் வீடாகி குருபகவான் உச்ச கதியில் அமர்ந்து டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் பார்வையிடுகிறார். உங்கள் தகப்பனாரின் ஆயுள் பாவம் மிகவும் கெட்டியாக இருக்கும். மிகவும் நல்ல அமைப்பான இந்த இடம் வரும் காலத்தில் நல்ல வாய்ப்புக் களை வழங்கும். உங்களது உயர்கல்வி ஸ்தானமானது வலுப் பெற்று உள்ளதால் தக்கபடி பயன்படுத்திக் கொள்ளவும்.

10 ஆம் இடமாகிய ஜீவன ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சூரியனின் வீடாகி அங்கு எவ்வித கிரக பார்வை பலமும் விழ வில்லை. பலவிதமான போராட்டங்களைச் சந்தித்து கொண்டி ருக்கும் உங்களில் அரச துறையினருக்கு நிம்மதியின்மையும், தனியார் துறையினருக்கு பணிப்பளு அதிகமாதலும், சேவை இல்லாதவர்கள் குடும்பத்தைவிட்டு பிரிதலும் நடக்கும்.

11 ஆம் இடமாகிய இலாபஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு ராகுபகவான் அமர்வது மிகுந்த உற் சாகத்தை கொடுக்கும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட யோகங்கள் வந்து திக்கு, முக்காடச் செய்யும். அரச துறையினருக்கு உபரி வருமானமும், தனியார் துறையினருக்கு பணிப் பளு குறைந்து ஊதிய உயர்வும் கிடைக்கும்.

12 ஆம் இடமாகிய அயனம், சயத்தை பொறுத்தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி வரும் டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் அங்கிருந்தும், பின் பெயர்ச்சி ஆகி ஜென்மஸ் தானத்துக்குப் போவதும், கேது 5 இல் இருப்பதும் வாழ்க்கை யில் மன உளைச்சல்களை அதிகம் கூட்டும் காலம் ஆகும். இருந்த போதிலும் குருபகவான் 9 இலும் ராகுபகவான் 11 இல் இருப்பதும், பொருளாதார ரீதியாக ஒரு சில நல்ல அமைப்புக் களை கொடுக்க இருப்பதால் கடந்த காலத்தைப் போல் அல்லாது இந்த குருப்பெயர்ச்சி காலத்தில் ஓரளவு சாதிக்க முடியும்.

அதிர்ஷ்ட எண்கள்:1,9,2,3
அதிர்ஷ்ட ராசிக்கல்: பவளம்
அதிர்ஷ்ட நிறம்-சிவப்பு,
இளஞ்சிவப்பு, ரோஸ், வெண்மை கலந்த நிறங்கள்.



## தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்



உங்கள் ராசிக்கு 7 இல் சஞ் சரித்த குருபகவான் வைகாசி மாதம் 30 ஆம் திகதி (13.06.2014) 8 ஆம் இடத்துக்கு இடம்பெயர்ந்து அதன் பின் அதி சாரமாக 3.12.2014 அன்று 9 ஆம் இடத்துக்கு வந்து 22.12. 2014 இல் வக்ரகதியாக மீண் டும் கடகராசிக்கு வந்தடை கிறார். ராகு, கேதுக்கள் ஆனி மாதம் 7 ஆம் திகதி 21.06.2014 அன்று 11.5 ஆகிய இடங்களில் இருந்து 10.4 ஆகிய இடங்க ளுக்கும் சனி பகவான் 16.12. 2014 மார்கழி 1 முதல் 12 ஆம் இடம் பெயர்ந்தும் பலன் கொடுக்க இருக்கிறார்கள். இந்த 2014 ஆம் ஆண்டில் குருபெயர்ச்சியிலிருந்து சனிப்பெயர்ச்சி முடியும் வரை 4 பெரிய கிரகங்கள் மாறுதல் அடைவதால் ஒருவித தடுமாற்றம் எல்லா ராசிகாரர்களுக்கும் உண்டு.

1 ஆம் இடமாகிய ஆயுள் தேகத்தை பொறுத்தவரை இந்த இடம் உங்கள் ராசிக்கு அதிபதி குருவின் வீடாகி அங்கு வரும் டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் பார்வை ஏற்பட்டு பின் விலகுகிறது. சனிப்பெயர்ச்சி ஆரம்பிக்கும் காலமான 16.12.2014 முதல் உங்களுக்கு $7\frac{1}{2}$ சனியின் ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. ஆகவே குருபெயர்ச்சியின் காலம் முழுவதும் கிரகங்கள் ராகு, கேது, குருவைத் தவிர சனி ஒருவனே சாதகமான பலன்களை தர இருக்கிறார். உங்கள் ஆயுள் பாவம் ஓரளவு நன்றாக இருக்கும்.

2ஆம் இடமாகிய தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தைப் பொறுத் தவரை இந்த இடம் சனிபகவான் வீடாகி அங்கு குருபார்வையும், வரும் டிசெம்பர் மாதத்துக்குப் பின் சனிபார்வையும் ஏற்பட இருக்கின்றது. உங்கள் தன ஸ்தானத்தைப் பொறுத்தவரை கடந்த காலத்தில் ஓரளவு நிம்மதியான பொருளாதார சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.

3 ஆம் இடமாகிய தைரிய சகோதர ஸ்தானத்தைப் பொறுத்த வரை இந்த இடம் சனிபகவான் வீடாகி அங்கு எவ்வித பார்வை பலமும் கிட்டவில்லை. உடல் தைரியம் இன்றி மனம் தைரியம் நிறைந்த நீங்கள் வரும் காலத்தில் கோழை போல் ஆகி விடுவதற்கு கிர கங்கள் முயலும், மனத்துணிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக நடந்து கொள்ளவும்.

4ஆம் இடமாகிய தாய், வீடு, மனை, வாகனத்தைப் பொறுத்தவரை இந்த இடம் குருபகவான் வீடாகி அங்கு கேதுபகவான் அமர குருபகவான் பார்வையிடுகிறார். தாயின் உடல்நிலை பார்க்கப்பட வேண்டியிருக்கும். வீடு, மனையைப் பொறுத்தவரை விற் பதற்கோ, வாங்குவதற்கோ குருபெயர்ச்சியின் முற்காலம் வரை நடத்திக் கொள்ளுங்கள். வண்டி வாகனங்களால் டிசெம்பர் மாதம் வரை ஆதாயமும் அதன்பின் விரயங்களும் ஏற்படும்.

5 ஆம் இடமாகிய பூர்வ, புண்ணிய புத்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் பார்வை ஏற்படுவதால் குலதெய்வ அருளை கூட்டிக் கொள்ள வேண்டும். உங்கள் குழந்தைகளின் உடல் நலத்திலும், கல்வியிலும், ஓரளவு அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உண்டு.

6ஆம் இடமாகிய ருண, ரோக ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி அங்கு எவ்வித கிரக பார்வை பலமும் கிட்டவில்லை. உங்களது உடம்பில் வெப்பம் சம்பந்தப்பட்ட நோய்கள் தாக்கக்கூடிய சூழ்நிலை உள்ளதால் தகுந்த மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று நடந்து கொள்ளவும்.

7ஆம் இடமாகிய களஸ்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு எவ்வித கிரகபார்வை பலமும் விழவில்லை. போதிய குருபலம் இல்லாததால் திருமண காரியங்களைத் தவிர்ப்பது நல்லது.

8ஆம் இடமாகிய ஆயுள், சத்ரு ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சந்திரனின் வீடாகி அங்கு குரு அமர உள்ளார். வரும் டிசெம்பர் மாதம் வரை சனிபகவானின் பார்வை பட்டு இருப்பதால் குடும்ப ஸ்தானத்துக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய சம்பவங்களும் நடைபெறும்.

9 ஆம் இடமாகிய பிதுர்,பாக்ய ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சூரியனின் வீடாகி அங்கு எவ்வித பார்வைப் பலமும் விழவில்லை. ஆகவே, தகப்பனாருக்கு ஆயுள் பாவம் ஓரளவு சாதகமாக இருந்தாலும், உடல்நலத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. உங்களது உயர்கல்வி ஸ்தானமானது வலுக் குறைந்துள்ளதால் அதற்கு ஏற்றால் போல் நடந்து கொள்ளவும்.

10 ஆம் இடமாகிய ஜீவன ஸ்தானத்தைப் பொறுத் தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு ராகு பகவான் அமர்ந்துள்ளார். 10-லே ஒரு பாவி இருக்க வேண்டும். ஆனால் இந்த இடம் தொழிலுக்கு உரிய இடமாதலால் அரச துறையினருக்கு மேல் அதிகாரி களின் தாக்கமும், தனியார் துறையில் உள்ளவர்க ளுக்கு வேலைப்பளு அதிகமாதலும் நடக்கும்.

11 ஆம் இடமாகிய இலாபஸ்தானத்தைப் பொறுத் தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் அமர்ந்து பரிபாலனம் செய்வதால் ஆதாய வரவுகள் அவர் இருக்கும் வரை இருக்கும்.

12 ஆம் இடமாகிய அயனம், சயனத்தைப் பொறுத்தவரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி அங்கு குருபார்வை ஏற்படுகிறது. $7\frac{1}{2}$ சனியின் பிடியில் வரும் டிசெம்பர் மாதத்துக்குள் பொருளாதார ரீதியாக என்ன சாதிக்க முடியுமோ அதை சாதித்துக் கொள்ளவும்

அதிர்ஷ்ட எண்கள்:3,1,9
அதிர்ஷ்ட ராசிக்கல்:மஞ்சள் நிற கன்கபுஸ்பராகம்,
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், பொன்நிறம்,
இளம் சிவப்பு, வெளிர்நீலம், வயலட்

## மகரம்

உத்திராடம் 4 ஆம் பாதம்
திருவோணம் அவிட்டம் 1,2 ஆம் பாதம்



உங்கள் ராசிக்கு 6 இல் சஞ் சரித்த குருபகவான் வைகாசி மாதம் 30 ஆம் திகதி (13.06. 2014) 7 ஆம் இடத் துக்கு இடம் பெயர்ந்து அதன்பின் அதிசார மாக3.12.2014 அன்று 8 ஆம் இடத்துக்கு வந்து 22.12.2014 இல் வக்ரகதியாக மீண்டும் கடகராசி வந்தடைகிறார். ராகு, கேதுக்கள் ஆனி மாதம் 7 ஆம் திகதி 21.06.2014 அன்று 10.4 ஆகிய இடங்களில் இருந்து 9.3 ஆகிய இடங்களுக்கும் சனிபகவான் 16.12.2014 மார்கழி 1 முதல் 11 ஆம் இடம்பெயர்ந்தும் பலன் கொடுக்க இருக்கிறார்கள். இந்த 2014 ஆம் ஆண்டில் குருபெயர்ச்சியிலிருந்து சனிபெயர்ச்சி முடியும் வரை 4 பெரிய கிரகங்கள் மாறுதல் அடைவதால் ஒருவித தடுமாற்றம் எல்லா ராசிக்காரர்களுக்கும் உண்டு.

1 ஆம் இடமாகிய ஆயுள்.தேகத்தைப் பொறுத்தவரை இந்த இடம் உங்கள் ராசிக்கு அதிபதி சனியின் வீடாகி அவரும் 10 ஆம் இடத்தில் இருந்து குருபகவான் 7 ஆம் இடத்தில் இருந்தும் பரிபாலனம் செய்ய இருக்கிறார்கள். கடந்த ஒரு வருட காலமாக உடல்நிலையிலும், பொருளாதார நிலையிலும் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்துக் கொண்டிருந்த உங்களுக்கு இந்த குருபெயர்ச்சி காலம் ஓர் அருமையான வரப்பிரசாதம் ஆகும்.

2ஆம் இடமாகிய தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தைப் பொறுத் தவரை இந்த இடம் சனிபகவான் வீடாகி எவ்வித கிரகபார்வை பலமும் விழவில்லை. தனவரவு மற்றும் பொருளாதார நிலை உயர்ந்து காணத் தொடங்கும். தனவ்ரவில் இருந்த மந்த நிலைகள் சரி செய்யப்படும் காலம் ஆகும்.

3 ஆம் இடமாகிய தைரிய சகோதர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் குருவின் வீடாகி அங்கு கேது அமர்ந்து குரு பார்வை ஏற்படுகிறது. 3 ஆம் இடத்தில் கேதுபகவான் அமர்வது நல்ல அமைப்பு என்றாலும் உங்கள் தைரிய ஸ்தானத்தில் சில வகைகளில் பாதிப்புகளை ஏற்படுத்துவார்.

4ஆம் இடமாகிய தாய் வீடு, மனை, வாகனத்தைப்

(தொடர்ச்சி 8ஆம் பக்கத்தில்)

# குருப்பெயர்ச்சிப் பலன்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுத்தவரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி வரும் டிசெம்பர் மாதம் வரை சனிபார்வை பட்டு பின் விலகுகிறது. முதல் 6 மாதங்களும் தாயின் உடல்நிலை பாதிக்கப்படும் சூழ்நிலையில் உள்ளதால் மிகுந்த எச்சரிக்கை தேவை.

5 ஆம் இடமாகிய பூர்வ புண்ணியம், புத்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம் முதல் சனிபார்வை ஏற்படுகிறது. பூர்வபுண்ண்ணிய அமைப்புகுறைவாக உள்ளதால் குருதெய்வ வழிபாட்டை விருத்தி செய்து புண்ணியங்களை கூட்டி கெடுபலன்களை குறைக்க முடியும்.

6 ஆம் இடமாகிய ருண, ரோக ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு எவ்வித கிரகபார்வை பலமும் விழவில்லை. உங்கள் உடம்பானது மிகவும் பலவீனப்பட்ட சூழலில் உள்ளது. இந்த இடம் புதன் அதிபதி ஆவதால் கை, கால்களில் நடுக்கம், நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்கள் உள்ளவர்கள் தக்க பரிகாரங்களைச் செய்து கொள்ளவும்.

7 ஆம் இடமாகிய களஸ்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சந்திரனின் வீடாகி அங்கு குருபகவான் அமர்ந்து டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் பார்வை ஏற்பட்டு பின் நீங்குகிறது. முழு குருபலம் உங்களுக்கு இந்த குருபெயர்ச்சி காலத்தில் கிட்டி உள்ளது.

8 ஆம் இடமாகிய ஆயுள் சத்ரு ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சூரியனின் வீடாகி அங்கு எவ்வித பார்வை பலமும் கிட்டவில்லை. ஆயுளுக்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது. குருபகவான் அதிசாரமாகும்போது வக்ரகதியில் செல்லும் போது மிகுந்த எச்சரிக்கை தேவை. சத்ருக்கள் உருவாவார்கள்.

9ஆம் இடமாகிய பிதுர், பாக்ய ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு இராகுபகவான் அமர உள்ளார். தகுந்த முன்யோசனையுடன் செயற்படவும். உங்கள் உயர்கல்வி ஸ்தானமானது சலனப்பட்ட நிலையில் உள்ளதால் வேறிடம்சென்று படிக்க ஏதுவாகலாம்.

10 ஆம் இடமாகிய ஜீவன ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி வரும் டிசெம்பர் மாதம்வரை சனி அமர்ந்து பின் இலாப ஸ்தானத்துக்குப் பிரவேசிக்கிறார். இந்த அமைப்பானது முதல் 6 மாதங்கள் நற்பலன் குறைந்தும், பின் 6 மாதங்கள் நற்பலன் கூடியும் நடக்கும்.

11 ஆம் இடமாகிய இலாபஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி அங்கு குருபார்வை ஏற்பட்டு அதன்பின் டிசெம்பர் மாதம் முதல் சனிபகவான் பெயர்ச்சி ஆகிறார். அரசு துறையினருக்கு தகுந்த ஊதியமும், தனியார் துறையினருக்கு ஊக்கத்தொகையும் கிடைக்கும்.

12 ஆம் இடமாகிய சயனத்தைப் பொறுத்தவரை இந்த இடம் குருவின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம்வரை சனிபார்வை ஏற்பட்டு பின் நீங்குகிறது. உங்கள் வாழ்க்கையில் நிம்மதி என்பது வரும்காலத்தில் அமோகமாக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் :6.5
அதிர்ஷ்ட ராசிக்கல் : நீலக்கல்
அதிர்ஷ்ட நிறம் : கருநீலம்,
வெளிர்நீலம், மஞ்சள், பொன்னிறம்

## கும்பம்



அவிட்டம் 3, 4ஆம் பாதம்,
சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதம்

உங்கள் ராசிக்கு 5 இல் சஞ்சரித்த குருபகவான் வைகாசி மாதம் 30ஆம் திகதி (13.06. 2014) 6ஆம் இடத்துக்கு இடம் பெயர்ந்து அதன்பின் அதிசாரமாக 3.12.2014 அன்று 7 ஆம் இடத் துக்கு வந்து 22.12.2014 இல் வக்ரகதியாக மீண்டும் கடகராசி வந்தடை கிறார். ராகு, கேதுக்கள் ஆனி மாதம் 7 ஆம் திகதி 21.06. 2014 அன்று 9,3 ஆகிய இடங்க ளில் இருந்து 8,2 ஆகிய இடங்க ளுக்கும் சனிபகவான் 16.12.2014 அன்று 9,3 ஆகிய இடங்களில் இருந்து 8,2 ஆகிய இடங்களுக்கும் சனிபகவான் 16.12.2014 மார்கழி 1 முதல் 10ஆம் இடத்துக்கு இடம் பெயர்ந்தும் பலன் கொடுக்க இருக்கிறார்கள். இந்த 2014ஆம் ஆண்டின் குரு பெயர்ச்சியிலிருந்து சனி பெயர்ச்சி முடியும் வரை 4 பெரிய கிரகங்கள் மாறுதல் அடைவதால் ஒருவித தடுமாற்றம் எல்லா ராசிகாரர் களுக்கும் உண்டும்.

1ஆம் இடமாகிய ஆயுள் தேகத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சனிபகவான் வீடாகி எவ்வித கிரக பார்வை பலமும் கிட்டவில்லை. இந்த குருபெயர்ச்சி காலம் உங்களுக்கு போதுமான நற்பலன் களைத் தராத சூழ்நிலையில் இருக்கிறது. உங்களின் ஆயுள் பாவத்துக்கு எவ்விதத்திலும் பங்கம் இல்லை.

2ஆம் இடமாகிய தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் குருவின் வீடாகி அங்கு கேது அமர்ந்து குருபகவான் பார்வையிடுகிறார். தனவரவை பொறுத்தவரை பொருளாதார ரீதியாக கடந்தகாலத்தில் ஏற்பட்டிருந்த ஒரு வளர்ச்சியானது இந்தக் காலத்தில் நிகழ வாய்ப்பு இல்லை.

3ஆம் இடமாகிய தைரிய சகோதர ஸ்தானத்தைப் பொறுத்த வரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் பார்வை ஏற்பட்டு அதன் பின் நீங்குகிறது. உடல்பலம் இல்லாமலும் மனபலத்தை வைத்து வாழ்க்கையில் பல போராட்டங்களை சந்தித்த நீங்கள் இந்தக் காலக் கட்டத்தில் எளிதில் சமாளிக்க குரு பார்வை உதவும்.

4ஆம் இடமாகிய தாய், வீடு,மனை, வாகனத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதத்துக்குப் பிறகு சனிபார்வை ஏற்படுகிறது. தாயின் ஆயுள்நிலை கவனிக்கப்பட வேண்டியதாகும். வண்டி வாகனங்களில் பிரயாணம் செய்வோர் தகுந்த முன் எச்சரிக்கை நடவடிக்கையுடன் பயணிக்கவும்.

5ஆம் இடமாகிய பூர்வ, புண்ணியம், புத்திரஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு எவ்வித கிரகபார்வை பலமும் கிட்டவில்லை. பூர்வ புண்ணிய பலன்கள் குறைவு ஏற்பட்டுள்ளதால் தகுந்த குல தெய்வ பூஜையை செய்து சரிசெய்து கொள்ளவும்.

6ஆம் இடமாகிய ருண,ரோக ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சந்திரனின் வீடாகி அங்கு குரு அமர டிசெம்பர் மாதம் வரை சனிபார்வை ஏற்பட்டு பின் விலகுகிறது. ஆகவே உங்கள் உடல்நிலையில் நீர் சம்பந்தப்பட்ட, வாத சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களும் தோன்றி ஓர் உலுக்கு உலுக்கிவிடும். வீண்விவாதங் கள் ஏற்பட்டு பகைதரக்கூடிய அளவில் வளரும்.

7ஆம் இடமாகிய களஸ்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சூரியனின் வீடாகி எவ்வித கிரகபார்வை பலமும் கிட்டவில்லை. போதுமான குருபலம் இல்லை ஆதலால் திருமண காரியங்கள் தள்ளிப் போகும் சூழ்நிலை உருவாகும். ஒரு சிலருக்கு குருபகவானின் அதிசாரகதி ஏற்படும் பொழுது திருமணத்துக்கான வாய்ப்பு உருவாகும்.

8ஆம் இடமாகிய ஆயுள், சத்ரு ஸ்தானத்தை பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு ராகுபகவான் அமர்ந்துள்ளார். உங்களுக்கு நாகதோஷம் ஏற்படும் காலமாக உள்ளது. ஆயுளுக்கு எந்த விதத்திலும் பங்கம் இல்லை. யாரிடமும் அதிகம் பேசாமல் தவிர்த்து விடுவது நல்லது.

9ஆம் இடமாகிய பிதுர், பாக்ய ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சுக்கரனின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் அமர்ந்து பின் 10ஆம் இடம் நோக்கி செல்கிறார். ஆகவே தந்தையாரின் ஆயுளுக்கு பங்கம் ஏதும் இல்லை.

10ஆம் இடமாகி ஜீவன ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி அங்கு குருபார்வை ஏற்பட்டு பின் டிசெம்பர் மாதம் முதல் சனிபகவான் அமர உள்ளார். ஆகவே இது முதல் 6 மாத காலம் நன்றாகவும், பின் 6 மாத காலம் மோசமாகவும் இருக்கும். அரசுத்துறையினருக்கு பதவி இறங்குவதும் தனியார் துறையினருக்கு வேலைப்பளு அதிகமாதலும் நடக்கும்.

11ஆம் இடமாகிய இலாபஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் குருவின் வீடாகி அங்கு டிசெம்பர் மாதம் வரை சனிபார்வை ஏற்பட்டு பின்விலகுகிறது. குருப்பெயர்ச்சியின் தொடக்கம் சுமாராக இருந்து பின் படிப்படியாக உயரும் சூழல் தெரிகிறது.

12ஆம் இடமாகிய அயனம், சயனத்தை பொறுத்தவரை இந்த இடம் சனிபகவான் வீடாகி அங்கு குருபார்வை ஏற்பட்டு பிற்பகுதியில் சனிபார்வை ஏற்பட இருக்கின்றது. கடவுள் இருக்கிறார் நம்மை காப்பாற்று வதற்கு. சனிக்கிழமை தோறும் நவக்கிரக தரிசனம் செய்து வந்தால் நல்லதே நடக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் :5.6
அதிர்ஷ்ட ராசிக்கல் : நீலம்
அதிர்ஷ்ட நிறம் : கருநீலம்,
வெளிர்நீலம், பொன்னிறம், மஞ்சள்.

## மீனம்



பூரட்டாதி 4 ஆம் பாதம்
உத்திரட்டாதி, ரேவதி

உங்கள் ராசிக்கு 4 இல் சஞ்சரித்த குருபகவான் வைகாசி மாதம் 30 ஆம் திகதி (13.06.2014) 5ஆம் இடத்துக்கு இடம் பெயர்ந்து அதன்பின் அதிசாரமாக 3.12.2014 அன்று 6ஆம் இடத்துக்கு வந்து 22.12.2014 இல் மீண்டும் வக்ர கதியாக கடகராசி வந்தடைகிறார். ராகு கேதுக்கள் ஆனி மாதம் 7 ஆம் திகதி 21.06.2014 அன்று 2,8 ஆகிய இடங்களில் இருந்து 7,1 ஆகிய இடங்களுக்கும், சனிபகவான் மார்கழி 1 முதல் (16.12.2014) 8 இருந்து 9 ஆம் இடத்துக்குப் பெயர்ந்து பலன்கொடுக்க இருக்கின்றார்கள். வரும் குருப்பெயர்ச்சி காலம் முதல் சனிப்பெயர்ச்சி காலம் வரை 4 பெரிய கிரக மாறுதல் நடப்பதால் எல்லா ராசி அன்பர்களுக்கும் விழிப்புடன் இருப்பது நல்லது.

1ஆம் இடமாகிய ஆயுள் தேகத்தை பொறுத் தவரை இந்த இடம் உங்கள் ராசி அதிபதி குருவின் வீடாகி அங்கு கேதுபகவான் அமர குருபகவான் பார்வையிடுகிறார். குரு பகவானின் பார்வை பலத்தால் உங்கள் ஆயுள் பாவம் தீர்க்கமாக இருக்கும். அதே சமயம் ஜென்மத்தில் அமரக் கூடிய கேதுபகவான் ஏதாவது ஒரு சங்கட காரிய விக்னங்களை தோற்றுவித்து கொண்டே இருப்பார். ஏற்கனவே அஷ்டமத்து சனியின் பிடியில் அகப்பட்டு கொண்டு இருக்கும் நீங்கள் வரும் டிசெம்பர் மாதம் வரை மிகவும் பொறுமையோடு இருக்க வேண்டும்.

2ஆம் இடமாகிய தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி அங்கு சனி பகவான் பார்வை வரும் டிசெம்பர் மாதம் வரை விழுகின்றது. குருபெயர்ச்சியின் முற்காலம் வரை பொருளாதாரத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு பின்பகுதியில் அது நீங்கிவிடும். நான் நினைத்ததே சரி, நான் சொன்னதே சரிஎன்று வாக்கிடாமல் எவ்வளவுக்கு எவ்வளவு வாயை அடக்குகிறோமோ அவ்வள வுக்கு அவ்வளவு நல்லது.

3 ஆம் இடமாகிய தைரிய சகோதர ஸ்தானத்தைப் பொறுத்த வரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி வரும் 2015 இற்கு பின் சனிபார்வை ஏற்படுகிறது. உடல் தைரியத்தை காட்டிலும் மனத் தைரியம் அதிகமுடைய நீங்கள் சனிபார்வை இருக்கும்வரை வீணாக சஞ்சலப்பட்டு மன அமைதியை இழக்க சனிபார்வை தூண்டும். பொறுமையுடன் நிதானித்து அமைதியைக் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் ஆனந்தம் பொங்கும்.

4ஆம் இடமாகிய தாய், வீடு, மனை, வாகனத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு எவ்வித கிரக பார்வை பலமும் விழவில்லை, தாயின் ஆயுளுக்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது. வீடு, மனை விற்பது, வாங்குவது தவிர்க்கவும். வண்டி வாகனங்களால் போதிய ஆதாயத்தை எதிர்பார்க்க இயலாது. அஷ்டமத்து சனி முடியும் காலம் வரை பிரயாணங்களில் கவனம் தேவை.

5ஆம் இடமாகிய பூர்வ, புண்ணியம், புத்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் குருபகவான் உச்ச கதியில் அமர்ந்திருப்பது மிக யோகமான அமைப்பைக் கொடுத்தாலும் சனிபார்வை இருக்கும் வரை சற்று சரியில்லாத நேரமே ஆகும். குல தெய்வத்தை வழிபட்டுவர குறைகளும் நிவர்த்தியாகும்.

6ஆம் இடமாகிய ருண, ரோக ஸ்தானத்தைப் பொறுத்த வரை இந்த இடம் சூரியனின் வீடாகி அங்கு எவ்வித பார்வை பலமும் விழவில்லை. ஆகவே சூரியன் பலம் அதிகமாக இருக்கும் காலங்களில் அதிக உஷ்ணத்தால் ஏதாவது நோய்கள் தோன்ற வாய்ப்பு உண்டு. சமூக நோய்கள், கொப்புளங்கள், வயிறு எரிச்சல், மாதவிடாய்க் கோளாறுகள் தோன்றுவதற்கு வாய்ப்பு உண்டு.

7ஆம் இடமாகிய களஸ்திர ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் புதனின் வீடாகி அங்கு ராகு அ[illegible] நாகதோஷத்தை ஏற்படுத்துகிறார். முழுகுருபலம் உங்களுக்கு கிட்டி உள்ளது. சனிபகவான் பார்வையும் இந்த இடத்தில் ராகு அமர்ந்திருப்பதும் தடுமாற்றங்களை ஏற்படச் செய்யும். தே[illegible] இருப்பவர்கள் தக்க பரிகாரங்களைச் செய்துகொள்ளவும்.

8ஆம் இடமாகிய ஆயுள், சத்ருஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் சுக்கிரனின் வீடாகி வரும் டிசெம்பர் மாதம் வரும்வரை அஷ்டமத்துச்சனியாக சனிபகவான் அமர்ந்துள் ளார். அதன்பின் பாக்ய ஸ்தானத்துக்குப் பெயர்கிறார். இந்த அமைப்பானது சனியின் உச்சம் உங்கள் ஆயுள் பல[illegible] கூட்டும்.

9ஆம் இடமாகிய பிதுர், பாக்ய ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் செவ்வாயின் வீடாகி அங்கு குருபகவானின் 5 ஆம் பார்வை பட்டு வரும் டிசெம்பர் மாதம் முதல் சனிபகவான் அமர உள்ளார். உங்கள் தகப்பனாரின் ஆயுள்பாவம் நன்றாக இருக்கும்

10ஆம் இடமாகிய ஜீவன ஸ்தானத்தைப் பொறுத்தவரை இந்த இடம் குருவின் வீடாகி அங்குவரும் டிசெம்பர் மாதம் வரை சனிபகவான் பார்வைபடுகிறது. அதன் பின் அது இலாப ஸ்தானத்துக்குச் சென்று விடுகிறது.

வேலையில்லாதவர்கள் வேலைக்காக அலைந்து தகுதி இல்லாத வேலையைச் செய்வார்கள்.

11 ஆம் இடமாகிய இலாப ஸ்தானத் தைப் பொறுத்தவரை இந்த இடம் சனி பக வான் வீடாகி அங்கு குருபார்வை ஏற்பட்டு டிசெம்பர் மாதத்துக்குப் பிறகு சனிபார் வையும் ஏற்படும். ஆரம்ப காலங் களில் ஆதாயம் அதிகமாகவும் அதன் பின் இலாபம் குறைவதும் நிகழும்.

12ஆம் இடமாகிய அயனம், சயனத் தைப் பொறுத்தவரை இந்த இடம் சனிபகவான் வீடாக எவ்வித கிரக பார்வை பலமும் விழவில்லை. இந்த ராசி நேயர்களுக்கு குருபகவான் ஒருவரே சாதகமான சூழ்நிலையில் இருக்கிறார். அவரும் இந்தப் பெயர்ச்சி காலத்தில் ஒரு இடத்தில் நிலையில்லாமல் இருந்து அதிசாரமாகவும், வக்ரகதியாகவும் அலைந்து கொண்டி ருக்கிறார். அதிசாரம் ஏற்படும் காலத்தில் மிகவும் ஜாக்கிர தையுடன் இருக்க வேண்டும். அஷ்டமத்து சனி 2014 கடைசிவரை உள்ளதால் எக்காரியத்திலும் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. நவக்கிரக நாயகர்களைக் கைதொழுது தீபம் ஏற்றினால் பிரச்சினைகள் விலகும்.

அதிர்ஷ்ட எண்கள் :3,2,9
அதிர்ஷ்ட ராசிக்கல் : மஞ்சள் கனகபுஷ்பராகம்
அதிர்ஷ்ட நிறம் : மஞ்சள்,
பொன்னிறம், இளம்சிவப்பு, வயலட், வெளிர் நீலம்

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 173

## விசர்நாய்க்கடி இறப்புக்களை தவிர்ப்பது எப்படி?

விசர்நாய்க்கடியால் உலகளாவிய ரீதியாக ஒவ்வொரு வருடமும் 55,000 பேர் இறக்கின்றார்கள். 2005 ஆம் ஆண்டில் இலங்கையில் 55 சாவுகள் விசர்நாய்க் கடியால் ஏற்பட்டுள்ளன. விசர்நாய்க் கடியால் ஏற்படும் இறப்பு 100 வீதம் தடுக்கப்படக் கூடியதே.

விசர்நாய்க்கடி நோய் ரேபீஸ் (Rabies) என்ற வைரஸின் மூலம் ஏற்படுகின்றது. இந்த வைரஸ் மனிதனின் நரம்புத் தொகுதிய்ய செயலிழக்கச் செய்வதன் மூலமே இறப்பை விளைவிக்கின்றது. இது விலங்குகளின் மூலம் பரவும் ஒரு நோயாகும். இந்த வைரஸ் முலையூட்டிகளில் இந்நோயை ஏற்படுத்துகிறது. அந்த வகையில் மனிதன் மற்றைய முலையூட்டிகளிடமிருந்து இந்த வைரஸை விபத்தின் மூலம் பெற்றுக் கொள்கிறான். அதாவது ரேபிஸ் வைரஸ் தொற்றுக்குள்ளான விலங்கொன்று கடிப்பதனாலோ அல்லது அதன் உமிழ்நீரில் நனைந்த நகங்களினால் கீறுவதாலோ, மென்சவ்வுகளில் அல்லது திறந்த காயங்களில் அந்த விலங்கு நக்குவதனாலோ, தொற்றுக்குள்ளான விலங்கின் பாலை காய்ச்சாது குடிப்பதனாலோ மனிதன் அந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்றான்.

விசர்நாய்க்கடி நோய்க்கான குணங்குறிகள் தோன்றிய பின் இறப்பு அண்ணளவாக 100 வீதம் நிச்சயமாகி விடுகிறது. இந்த நோயின் குணங்குறிகள் வெளித் தோன்றுவதற்கு 1-3 மாதங்கள் வரை எடுக்கும். சில சந்தர்ப்பங்களில் ஒரு சில கிழமைகளிலோ அல்லது சில வருடங்கள் கழிந்தோ ஏற்படலாம்.

**உங்களுக்கு ஒரு விலங்கு கடித்து விட்டால் அந்தக் காயத்துக்கு சவர்க்காரமிட்டு ஓடும் நீரினால் கழுவவும். பின்னர் 70 வீத அற்க கோல் அல்லது கிருமித் தொற்று நீக்கியால் துப்புரவு செய்யவும். சிறிய புண்ணாக இருந்தாலும் உடனடியாக மருத்துவ உதவியை நாடவும்.**

நீர் வெறுப்பு நோய்த் தொற்றுக்குள்ளான விலங்குகளை இனங்கண்டு கொள்வதன் மூலமும், விலங்குக் கடியிலிருந்து விலகியிருப்பதன் மூலமும், வீட்டில் வளர்க்கும் விலங்குகளுக்கு வருடந்தோறும் நீர் வெறுப்பு நோய் தடுப்பூசி போடுவதன் மூலமும் நாம் இந்த நோய்த் தொற்று ஏற்படுவதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். 95 வீதமான நோய் நாய்கள் மூலமே தொற்றுகின்றன.

தொற்றுக்குள்ளான விலங்குகளை அவற்றின் வழமைக்கு மாறிய நடவடிக்கைகளான வாயிலிருந்து அதிக உமிழ் நீர் வடிதல், குரல் மாற்றம் என்பன மூலம் அறிந்து கொள்ளலாம். சாப்பிட்டுக் கொண்டிருக்கும், உறங்கிக் கொண்டிருக்கும் மற்றும் குட்டிகளுடன் இருக்கும் நாயை தொந்தரவு செய்யாதிருப்பதன் மூலமும் நாய் மீது தாக்குதல் எதனையும் மேற்கொள்ளாதிருப்பதன் மூலமும், அதன் கண்களை நேருக்கு நேராக பார்க்காதிருப்பதன் மூலமும் நாய்க்கு அருகில் ஓடிச் செல்லாதிருப்பதன் மூலமும் நாய்களினால் கடிபடுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

உங்களுக்கு ஒரு விலங்கு கடித்து விட்டால் அந்தக் காயத்துக்கு சவர்க்காரமிட்டு ஓடும் நீரினால் கழுவவும். பின்னர் 70 வீத அற்கோல் அல்லது கிருமித் தொற்று நீக்கியால் துப்புரவு செய்யவும். சிறிய புண்ணாக இருந்தாலும் உடனடியாக மருத்துவ உதவியை நாடவும். மருத்துவக் குழு, ஏற்பட்டிருக்கும் புண் மற்றும் கடித்த விலங்கு பற்றிய தகவல்களின் படி விசர்நாய்க்கடி தடுப்பூசி அல்லது ரேபீஸ் பிறபொருளெதிரி (Antirabies serum) அல்லது அவதானிப்பில் வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு விசர்நாய்க்கடி நோயிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

மருத்துவர் சகிலா சிற்றம்பலம்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை

## சளிக் காய்ச்சலும் வயிற்றோட்டமும்:

### குழந்தைகள் மத்தியில் ஏற்படும் பொதுவான தொற்று நோய்கள்



குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய மிகப் பொதுவான தொற்று நோய்களாக சளிக்காய்ச்சலும், வயிற்றோட்டமும் அமைவதை பெரும்பாலான பெற்றோர் அவதானித்திருப்பர். அவர்களுக்குத் தோன்றும் கேள்வி இதுதான், "ஏன் எனது குழந்தைக்கு அடிக் கடி சளிக்காய்ச்சல், வயிற்றோட்டம் ஏற்படுகின்றன?" உலக சுகாதார நிறுவனத்தினதும் (WHO)UNICEF இனதும் தகவலின் படி, குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களில் 27 சதவீதமானவை சுவாச தொற்று நோய்களாகவும் (சளிக்காய்ச்சல்), 23 சதவீதமானவை வயிற்றோட்ட நோய்களாகவும் காணப்படுகின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் தகவல்படி, உலகில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 1.8 மில்லியன் குழந்தைகள், நிமோனியா எனப்படும் சளிக் காய்ச்சலினால் ஒவ்வொரு வருடமும் இறக்கின்றார்கள். ஏறத்தாழ 800,000 குழந்தைகள் வயிற்றோட்டத்தால் ஒவ்வொரு வருடமும் இறப்பதுடன், 1.7 பில்லியன் பேர் வயிற்றோட்டத்துக்காக சிகிச்சை பெறுகிறார்கள். இந்தத் தகவல்களின்படி இவ்விரு நோய்களும் எவ்வளவு தாக்கத்தை குழந்தைகளின் வாழ்வில் உண்டாக்குகின்றன என்பதை அறியலாம்.

**உலக சுகாதார நிறுவனத்தின் தகவல்படி, உலகில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 1.8 மில்லியன் குழந்தைகள், நிமோனியா எனப்படும் சளிக்காய்ச்சலினால் ஒவ்வொரு வருடமும் இறக்கின்றார்கள்.**

**சளிக்காய்ச்சலும், வயிற்றோட்டமும் ஏன் குழந்தைகளுக்கு அதிகமாக ஏற்படுகின்றன?**

இவ்விரு நோய்களும் மிக் இலகுவாக தொற்றக்கூடிய நோய்கள் ஆகும். வைரஸ் கிருமித் தொற்றே இவ்விரு நோய்களுக்கும் மிகப் பிரதான காரணியாக அமைகின்றது. எமது சூழலில் நூற்றுக் கணக்கான சுவாசத் தொகுதியையும் சமிபாட்டுத் தொகுதி யையும் பாதிக்கக் கூடிய வைரசுக்கள் உள்ளன. அவை பொதுவாக காற்றினூடாக ஒருவர் இருமும் போதும், தும்மும் போதும் அல்லது தொடுகை மூலமும் ஒருவரின் கையிலிருந்தோ, பொருள்களிலிருந்தோ, உணவு, நீர்பானங்கள் அருந்தும் போதே இலகுவில் தொற்றி விடுகின்றன. ஒரு குழந்தைக்கு தொற்று ஏற்படுமாயின் ஒரு சில நாள்களிலேயே அந்தக்கிருமி சுவாசத் தொகுதியிலோ அல்லது சமிபாட்டுத் தொகுதியிலோ பெருகி நோய்க்கான அறிகுறிகளைக் காண்பிக்கும். பெரியவர்களிலும் பார்க்க, குழந்தைகளுக்கு இந்த நோய்களின் தாக்கம் அதிகமாக காணப்படுவதற்குக் காரணம் குழந்தைகளின் உடல் உறுப்புகள் முதிர்ச்சியடையாமல் இருப்பதுடன், குழந்தைகள் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகக் கொண்டிருப்பதனாலும் ஆகும். மேலும் பிறந்தது முதல் ஓரிரு வருடங்களுக்குப் பிள்ளைகள் வீட்டிலே இருப்பார்கள். பின்னர் முன்பள்ளிக்கோ அல்லது பகல் பராமரிப்பு நிலையத்துக்கோ செல்கையில் வேறு விதமான சூழலுக்கு முகம் கொடுப்பதுடன் நோயுற்ற மற்றைய குழந்தைகளுடன் சேர வேண்டி ஏற்படுகிறது. இதனால்தான் முன்பள்ளி சிறார்களுக்கு அடிக்கடி சளிக்காய்ச்சலும், வயிற்றோட்மும் ஏற்படுகின்றன. சில சமயங்களில் ஒரு பிள்ளைக்கு ஒரு வருடத்தில் 8-10 தடவை சளிக்காய்ச்சலும், 3-4 தடவைகள் வயிற்றுப் போக்கும் ஏற்படுகின்றன. எனினும், அதனால் பெரிய அளவில் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. ஏனெனில் அவை வைரஸ் கிருமித் தொற்றுக்கள் என்பதாலாகும்.

**சளிக்காய்ச்சலும், வயிற்றோட்டமும் ஏற்படுகையில் எவ்வகையான பராமரிப்புக்களை வழங்க வேண்டும்?**

பொதுவாக, குழந்தைகளுக்கு ஏற்படும் மேற் கூறிய நோய்கள் தானாக மாறக் கூடியவை. எனினும் காய்ச்சல் காணப்படும் வேளைகளின் சரியான அளவில் பரசிட்டமோல் எனப்படும் காய்ச்சலைக் குறைக்கும் மருந்தைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளை சௌகரியமாக இருப்பதுடன் உணவு உண்ணக் கூடியதாக இருக்கும். அதே போல் காய்ச்சல் அல்லது வயிற்றோட்டம் உள்ள குழந்தைக்கு அதிகளவு நீராகாரங்களைக் கொடுத்தல் வேண்டும். இதன் மூலம் நீரிழப்பை தடுக்க முடியும். அதே நேரம், குழந்தைக்கு சாதாரணமாக கொடுக்கும் உணவுகளைத் தொடர்ந்து வழங்க வேண்டியதுடன் "குழந்தை உணவை அல்லது நீராகாரத்தை ஆவலுடன் எடுக்கின்றதா என அவதானிக்க வேண்டும். முக்கியமாக குழந்தை சாதாரணமாக சிறுநீர் கழிக்கின்றதா என அவதானிக்க வேண்டும். காய்ச்சல், இருமல் அல்லது வயிற்றோட்டம் மூன்று, நான்கு நாள்களின் பின்னரும் குறையாது விட்டால் அல்லது குழந்தை உணவருந்தாது அல்லது பால் குடிக்காது சோர்வடைந்தால் வைத்திய ஆலோசனை பெறுதல் வேண்டும். ஒரு போதும் வைத்திய ஆலோசனையின்றி அன்ரிபயோற்றிக் எனப்படும் மருந்துகளை மருந்துக் கடைகளில் வாங்கிக் குழந்தைக்குக் கொடுக்கக் கூடாது. சாதாரணமாக, இந்த நோய்கள் வைரஸ் தொற்றுக்கள் என்பதால் அன்ரிபயோற்றிக்குகள் தேவையில்லை. தேவையற்ற வகையில் அவற்றைப் பாவிக்கும் போது அவற்றுக்கு எதிர்ப்புத் தன்மையை கிருமிகள் உண்டாக்கி அவற்றின் செயற்றிறன் இல்லாது போய் விடுவதுடன், தேவையற்ற பக்க விளைவுகளும் உண்டாகலாம். முக்கியமாக பெற்றோர்கள் குழந்தைக்கு காய்ச்சல், வயிற் றோட்டம், சளி வந்துவிட்டது எனப் பயந்து மனச் சோர் வடையாது தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெற்று திடமாக குழந்தையைப் பராமரிக்க வேண்டும். அதே போல் மற்றவருக்கும் இந்தக் கிருமித் தொற்றுக்கள் ஏற்படாதிருக்க சரியான நோய்த்தடுப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**சளிக்காய்ச்சல், வயிற்றோட்டம் போன்றவை ஏற்படாது எவ்வாறு எம்மைப் பாதுகாத்துக் கொள்வது?**

அனைவரும் தகுந்த நியம பாதுகாப்பு முறைகளை பின்பற்றுவதன் மூலம், இந்த நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும். நியமப் பாதுகாப்பு முறைகளில் மிக மிக முக்கியமானது. சரியான முறைகளில் கைகளைக் கழுவுவதாகும். சவர்க்காரமோ அல்லது வேறு சுத்தப்படுத்தும் திரவத்தையோ (Detergents) பாவித்து நன்றாக கைகளை கழுவ வேண்டும். பின்வரும் சந்தர்ப்பங்களில் கைகளை முக்கியமாக கழுவ வேண்டும்.

1. உணவு அருந்த முன், உணவு சமைக்க அல்லது பரிமாற முன்.
2. மலசல கூடத்துக்கு சென்ற பின்னர்.
3. குழந்தைகளை தொடுவதற்கு அல்லது பராமரிக்க முன்னர்.
4. இருமிய பின்னரும், தும்மிய பின்னரும்.
5. தொற்று ஏற்பட்ட இடங்களை தொட்ட பின்னர்.
6. குழந்தைகளுக்கு நப்பி (Nappy) மாற்றிய பின்னர்.
7. நோயுற்றவரைப் பராமரித்த பின்னர்.

கை கழுவுதல் போன்று, இன்னொரு முக்கியமான பாதுகாப்பு முறை என்ன வெனில் கைக்குட்டையை, திசுதாளை (tissue) அல்லது வாயையும் மூக்கையும் மறைக்கக் கூடிய முகமூடியை (Mask) சளிக் காய்ச்சல் உள்ளவர்கள் பாவிப்பதாகும். ஒரு வீட்டில் ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் அவர் மேற்கூறியவற்றை எந்த நேரமும் பாவித்தால் மற்றவர்களுக்கு சளிக்காய்ச்சல் (குறிப்பாக குழந்தைகளுக்கு) ஏற்படுவதைத் தடுக்க முடியும். மேற்கூறியவற்றை விட நோயுற்றவர் தகுந்த சிகிச்சையைப் பெறுவதன் மூலமும் குழந்தைகளுக்கு நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகளை வழங்குவதன் மூலமும், குழந்தைகளுக்கு தகுந்த போசாக்கான உணவுகளை வழங்குவதன் மூலம், குறிப்பாக தனித் தாய்ப்பாலூட்டலை குறைந்தது 6 மாதங்களாவது வழங்குவதன் மூலமும் சளிக்காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க முடியும்.

மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமயோசிதமாக சிந்தித்துச் செயற்படுங்கள்

அங்கொன்றும் இங்கொன்றுமாக கடந்த சில ஆண்டுகளாக சிறுபான்மை சமூகங்களின் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அளுத்கம தர்ஹா நகர் மற்றும் பேருவளை ஆகிய பகுதிகளில் கலவரமாக மாறியதன் பின்னர் சிறு பான்மை மக்களின் பாதுகாப்பு மட்டுமன்றி அவர்களது இருப்புத் தொடர்பான பிரச்சினைகளும் புதிய பரிணாமம் பெற்றுள்ளது.

ஆயுதப் போர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, இந்த நாட்டில் இனிமேல் எதிர்காலம் அமைதியானதாக இருக்கும் என்றெண்ணிய மக்களுக்கு கடந்த ஒருவார காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் சொல்லொணா வேதனையையும் தீராக் கவலைகளையும் ஏற்படுத்தி விட்டுள்ளன.

ஓர் இனமோ, தனிநபரோ தாக்குதலுக்கு உட்படுத்தப்படும்போது முதலில் அச்சங்கலந்த வேதனையும் பின்னர், அதனால் பதியப்படும் ஆழமான காயங் களும் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்ற உணர்வை பொதுவாக ஏற்படுத்துகின்றதை வரலாறுகள் காண்பித்து நிற்கின்றன.

ஆனால், இந்தத் தருணத்தில், குறிப்பாக பாதிக்கப்பட் டுள்ள முஸ்லிம் மக்கள் பழிவாங்கும் உணர்வைத் தவிர்த்து செயற்படுவது அவர்களது ஒட்டுமொத்த நலன்களுக்கு மிக மிக அவசியமானது.

வன்முறைகளை மேற்கொண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டுள்ள தரப்பினர் தற்போது இழைத்த குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் அடாத்தாக நடந்துகொண்டு எப்படியும் தமக்கு ஒரு சந்தர்ப்பம் மீண்டும் கிடைக்காதா என எதிர்பார்த்திருப்பதற்கு சாத் தியங்கள் உள்ளன. ஆகவே, அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை நாம் கொடுத்து விடக்கூடாது.

மனிதர்கள் அடக்குமுறைகளுக்கு உட்படும் வேளைகளிலும் உச்சபட்ச பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய தன் அவசியத்தை நபிகள் நாயகம் வலியுறுத்தியிருக்கின்றார். உச்சபட்ச பொறுமையை கடைப் பிடிக்கும் அதேவேளை, தனது உயிரையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதன் அவசியத்தையும் நபிகள்நாயகம் உணர்த்தி யிருக்கின்றார்.

உச்சபட்ச பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கூறுவதன் மூலம் நீங்கள் உங்களைக் கோழைகளாக ஆக்கி விடாதீர்கள் என்று அர்த்தம் கொண்டு விடாதீர்கள். மாறாக அனேகமான தருணங்களில் அடக்கம் என்பது நாம் சூடிக்கொள்கின்ற ஆபரணமாக விளங்குகின்றது. பொறுமை என்பது வேண்டத்தகாத சம்பவங்களில் இருந்தும் மனிதர்களிலிருந்தும் எம்மைப் பாதுகாக்கின்ற மாபெரும் ஆயுதமாக இருக்கின்றது.

பொறுமையாக இருங்கள்: தொடர்ச்சியாக சீண்டப்பட்டு அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் இலக்காக்கப்படும் நேரத்திலும் உச்சக்கட்டப் பொறுமையைப் பேணுங்கள். நீங்கள் ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு - பதில் தாக்குதல் நடவடிக்கையாக வன் முறைகளில் இறங்கிவிட்டால் உங்கள் குடும்பத் தவர்களுக்கு ஏற்படக்கூடிய நிலை குறித்து ஒன்றுக்கு நூறுமுறை சிந்தியுங்கள்.

உங்கள் சமூகத்தின் தலைவர்கள் காத்திரமாக விரைந்து செயற்படுவதற்காக நீங்கள் இடைவிடாமல் அழுத்தத்தைக் கொடுப்பதும், நடைபெற்ற மற்றும் நடைபெறும் வன்முறைகள் தொடர்பாக கிடைக்கக் கூடிய அனைத்துச் சான்றுகளையும் ஆவணப்படுத்தி, ஏற்கனவே இதுபற்றி விழிப்புடன் இருக்கும் சர்வதேசத் தரப்புக்கு உடனுக்குடன் கிடைக்கக் கூடியவாறு செய்வதும் தற்போது நீங்கள் செய்யக்கூடிய அதிமுக்கிய பணிகளாகும்.

உச்சக்கட்டப் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். உங்கள் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காக சமயோசிதமாக சிந்தித்துச் செயற்படுங்கள்.

# பேரம் பேசும் அணியாக மாறுவதற்கு கூட்டமைப்புக்கு சந்தர்ப்பம் உண்டு

## செயலில் இறங்குவார்களா அரசியல்வாதிகள்?

எம்.எம்.நிலாம்டீன்

அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாட்டில் ஒரு பொதுத் தேர்தலை அரசு நடத்துவதற்கு ஏதுவாக இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் நிறையக் காணப்படுகின்றன. இவ்வருட இறுதியில் அல்லது புத்தாண்டின் முற்பகுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையும் உள்ளது. அதாவது, 2016 ஆம் ஆண்டில்தான் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதேவேளை, ஆளும் கட்சியிலுள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போதைய நாடாளுமன்றம் 5 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும்வரை நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டாம் என்ற கோரிக்கையை அரசிடம் முன்வைத்துள்ளார்களாம். தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்க முடிந்தால் அந்த உறுப்பினர் ஓய்வூதியம் பெற அருகதை உடையவராகிறார். அந்த வகையில், 08.04.2010 ஆம் திகதி கடைசியாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றுள்ளது. அடுத்த ஆண்டு ஏப்ரல் 08 ஆம் திகதியுடன் 5 வருடங்கள் முடிவடைகின்றன. இதனால் பொதுத் தேர்தலுக்குத் தயாராகுமாறு சில உத்தரவுகள் இடப்பட்டுள்ளனவாம்.

முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் பரப்புரைக் களத்தில் குதித்துவிட்டது. அப்படியானால், பொதுத் தேர்தல் ஒன்றை நாம் சந்திக்கவுள்ளோம் என்பது உறுதியாகி விட்டது எனலாம்.

### தமிழரசுக் கட்சியில் முஸ்லிம்கள்

1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் முஸ்லிம்கள் தமிழரசுக் கட்சியில் இணைந்திருந்துதான் தங்களது அரசியலை முன்னெடுத்து வந்துள்ளார்கள். அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தில் காலம்சென்றவர்களான கல்முனை எம்.எஸ்.காரியப்பர், கல்முனை எம்.சி.அஹமட், நிந்தவூர் எம்.எம். முஸ்தபா ஆகியோர் தமிழரசுக் கட்சியில் வெற்றி பெற்று அப்போதைய ஆளும் கட்சிக்குத் தாவியவர்கள். அக்கரைப் பற்று சட்டத்தரணி காஸிம் சம்மாந்துறைத் தொகுதியிலும் கல்முனையில் செனட்டர் மருதமுனை மசூர் மௌலானாவும் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டு தோல்வி கண்டவர்கள். மசூர் மௌலானா மிகச் சிறிய வாக்குகள் வித்தியாசத்தில் கல்முனைத் தொகுதியில் தோல்வி கண்டார்.

1977 ஆம் ஆண்டு காலத்துக்கு முன்னர் தமிழ், முஸ்லிம் என்ற இனப் பாகுபாடு இல்லாது தமிழ்மக்கள் முஸ்லிம் வேட்பாளர்களுக்கும், முஸ்லிம் மக்கள் தமிழ் வேட்பாளர்களுக்கும் வாக்களித்து வெற்றியடைய வைத்து அழகு பார்த்த காலம்.

### அம்பாறையில் கூட்டமைப்பில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவாவதற்கு வாய்ப்பு அதிகம்

விகிதாசாரத் தேர்தல் முறை மூலம் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டால் மிகவும் சுலபமாக வெற்றியடையக் கூடிய பொன்னான வாய்ப்புள்ளது. கடைசியாக நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் கூட்டமைப்புக்குக் கிடைக்கப் பெற்ற மொத்த வாக்குகள் 49 ஆயிரத்திற்கும் அதிகமானது. இந்த 49 ஆயிரத்தையும் கடந்து மேலும் 10 ஆயிரம் வாக்குகளைத் தமிழ்ப் பகுதிகளிலிருந்து ஈட்டிக்கொள்ளலாம். அம்பாறை மாவட்டத்தில் ஒரு நாடாளு மன்ற ஆசனம்தான் கூட்டமைப்புக்குக் கிடைக்கும். அதுதான் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பங்கு.

ஆனால், முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால் இரண்டாவது நாடாளுமன்ற ஆசனமும் கூட்டமைப்புக்குக் கிடைக்கும். அதாவது, முஸ்லிம் ஒருவர் நிறுத்தப்பட்டு முஸ்லிம்களின் வாக்குகளில் இருந்து சுமார் 12 -15 ஆயிரம் வாக்குகள் கிடைக்குமானால், சுமார் 65 ஆயிரம் - 70 ஆயிரம் வாக்குகள் மூலம் இரண்டாவது நாடாளுமன்ற ஆசனமும் தமிழ்க் கூட்டமைப்புக்குக் கிடைக்கும். ஒரு முஸ்லிம் வேட்பாளர் முன்வந்து கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு முஸ்லிம் மக்களின் வாக்குகளில் இருந்து சுமார் 12-15 ஆயிரம் வாக்குகள் பெற்று கூட்டமைப்பு சார்பாக வெற்றிபெற முடியும்.

தேர்தல் காலங்களில் கூட்டமைப்பு சில வியூகங்களை திட்டமிட்டுச் செய்ய வேண்டிய தேவையுள்ளது. ஆனால், அந்த முஸ்லிம் உறுப்பினர் கொள்கைக்காக - உரிமைக்காக மக்களின் உறுப்பினராக நாடாளுமன்றத்தில் மக்களின் குரலாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு கூட்டமைப்பில் வெற்றியடைந்து அரசுப் பக்கம் சோரம் போய் ஒட்டிக்கொள்ளும் ஒட்டுண்ணி யாக மாறக் கூடாது. இன்னுமொரு அக்கரைப் பற்று பியசேன போன்று மாறக் கூடாது. முஸ்லிம்களின் சுமார் 15 ஆயிரம் வாக்குகள் இல்லாது கூட்டமைப்பு இரண்டாவது ஆசனத்தைப் பெறமுடியாது என்பதை தமிழ் மக்களும், தமிழ் மக் களின் ஆதரவும் - வாக்களிப்பும் இல்லாது முஸ்லிம் வேட்பாளர் ஆசனத்தைப் பெற முடியாது என்ற யதார்த்தங்களையும் நிஜமான நிலவரங்களையும் இரண்டு இனத்தவர்களும் உணரவேண்டும். சுயேச்சையாகவோ அல்லது எந்தக் கட்சியிலும் முஸ்லிம் ஒருவர் 12-15 ஆயிரம் வாக்குகள் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியொன்றை அடையமுடியாது.

### கூட்டமைப்பில் முஸ்லிம் ஒருவர் போனஸ் உறுப்பினராகலாம்

கூட்டமைப்பில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தலா ஒவ்வொரு முஸ்லிம் வேட்பாளர் நிறுத்தப்பட்டு உறுப்பினர் பதவி பெறுவதன் மூலமாகக் கூட்டமைப்புக்கு மேலும் ஒரு போனஸ் ஆசனம் அதிகரிக்கும். அதாவது, தற்போதுள்ள ஒரு போனஸ் ஆசனத்துடன் மேலும் ஒரு போனஸ் ஆசனம் கிடைக்கும். அந்த போனஸ் ஆசனத்தை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு முஸ்லிம் ஒருவரை உறுப்பினராக நியமிக்கலாம். ஏனென்றால், தற்போதைய நிலையில் மட்டக்களப்பில் கூட்டமைப்பு சார்பாக முஸ்லிம் வேட்பாளர் ஒருவரை நிறுத்தக்கூடிய சூழ்நிலை அங்கு இல்லையென்று கருதப்படுவதால் இந்த இணக்கப்பாடுகளை கூட்டமைப்புத் தலைமையுடன் பேசிக் கொள்ளலாம்.

மூன்று மாவட்டத்திலும் மூன்று உறுப்பினர்கள் கூட்டணி சார்பாக கோலோச்சும் போது தற்போது முஸ்லிம் மக்களை அடகு வைத்தும், விற்றும் அரசியல் வியாபாரம் செய்யும் இந்த முஸ்லிம் வகையறாக்களின் கொட்டம் அடங்கி ஓய்ந்து விடும்.

இந்த வகையறாக்களின் அரசியல் வர்த்தகத்தை உடைத்து முஸ்லிம் சமூகம் தலைநிமிர்ந்து நிற்க வேண் டுமானால் கூட்டமைப்புடன் இந்த இலக்கின் அடிப்படையில் ஒரு அணி உருவாக வேண்டும்.

### மு.கா. பேரம் பேசும் சக்தியாக முடியாது

அஷ்ரப்பின் காலத்தில் மு.காவின் தயவில்தான் சந்திரிகாவின் ஆட்சி நகர்ந் தது. அதன்பின்பு மீண்டும் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்பு சந்திரிகாவின் ஆட்சி ஹக்கீம் தலைமையிலான மு.காவில் தங்கியிருந்தது. ஆனால், ஹக்கீம், சந்திரிகாவின் ஆட்சியைக் கவிழ்த்து ரணிலிடம் ஆட்சியைக் கையளித்தார். ஆனால், அந்த ஆட்சி நீடிக்கவில்லை. காரணம், ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் சந்திரிகா ரணிலின் ஆட்சியை ஒரு வருடம் முடிந்த பின்பு கலைத்தார். அதன் பின்பு மு.கா. பேரம் பேசும் சக்தி என்ற பேச்சுக்கே இடமில்லாதுபோய் விட்டது. இனி வரும் காலங்களில் அந்த நிலைமை வராது. காரணம், இராணுவ அதிகாரி சரத் பொன்சேகாவின் கட்சியும், ஜே.வி.பியும் நாட்டில் போட்டி போட்டுக் கொண்டு மூன்றாம், நான்காம் சக்திகளாக உருவெடுத்து வருவதால் மு.காவின் பேரம் பேசும் சக்தி என்பது இனிமேல் மிகவும் கடினமானது. அந்தளவுக்கு மு.காவின் பேரம் பேசும் சக்தி நலிவடைந்துள்ளது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் மு.கா. தனித்துப் போட்டியிட்டால் அம்பாறையில் 2 இடங்களையும், மட்டக்களப்பில், திருகோணமலையில் தலா ஒரு ஆசனம் என்று மொத்தம் நான்கு ஆசனங்களையும் ஒரேயொரு போனஸ் ஆசனம் என்று 5 ஆசனங்களை மட்டுமே பெற இயலும்.

ஆனால், இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் கூட்டமைப்பு சார்பாக ஒரு முஸ்லிம் வேட்பாளர் நிறுத்தப்பட்டால் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆசனம் கிடைக்காது. கூட்டமைப்பு சார்பாக கிண்ணியாவில் இருந்து ஒரு முஸ்லிம் வேட்பாளர் நிறுத்தப்பட்டால் கூட்டமைப்பு இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றும். முஸ்லிம் காங்கிரஸ் திருமலை மாவட்டத்தி[illegible] தோல்வியைத் தழுவும். திருகோண மலை மாவட்டத்தின் கிண்ணியாவில் இருந்து ஒரு முஸ்லிம் வேட்பாளரை நிறுத்தக் கூடியவாறு சில முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஆட்சியமைக்கப் போகும் அணிக்கு தேவையேற்படலாம். ஆளும் கட்சியின் பலம் குறைந்து ஒரு தொங்கு நாடாளுமன்ற ஆட்சியாக மாறலாம். அதனால் ஐ.தே.க. ஆட்சியமைக்கக் கூடிய நிலை உருவாகலாம். அப்போது கூட்டமைப்பின் பலம் ஐ.தே.கவுக்குத் தேவைப்படலாம். அப்போது கூட்டணி பெரும் சக்தியாக இருக்கும். காரணம் தற்போது கூட்டணி 14 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதில் அக்கரைப்பற்று பியசேன நாடாளுமன்ற உறுப்பினராக கழித்துக் கணக்கிட்டால் கூட்டமைப்பு உறுப்பினர்களையே கொண்டுள்ளது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு 14 + 3 =17 ஆசனங்களைக் கைப்பற்றினால் - (முஸ்லிம் உறுப்பினர்களையும் சேர்த்து 17 என்று அமைந்தால்) கூட்டமைப்பு பெரும் பலம் கொண்ட அணியாகவும் நாட்டில் பேரம் பேசும் அணியாகவும் இருக்கும்.

ஐ.தே.க. ஆட்சி அமைக்குமா னால் இந்தக் கொடுங்கோல் ஆட்சி மாற்றத்தை விரும்பி தேர்தல் வெற்றியின் பின்பு ஐ.தே.க. ஆட்சியமைப்பதற்கான சூழ்நிலையைப் பொறுத்து சில முடிவுகளைத் தமிழ்க் கூட்டமைப்பும் எடுக்க வேண்டி வரலாம்.

தேவையேற் படுமானால் மக்களின் நலன் கருதி அமைச்சுப் பதவிக்கு ஆசைப்படாமல் வெளியில் இருந்து புதிய அரசுக்கு ஆதரவு அளிக்கும் அணியாகவும் மாறக்கூடிய அரசியல் சூழல் உருவாகலாம். அது சோரம் போன அணியாக அல்லாமல் ஒடுக்கப்பட்ட - நசுக்கப்பட்ட - இம்சிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட முடி வாக அமையலாம். தகுதிவாய்ந்த முஸ்லிம் வேட்பாளர் ஒருவரைச் சரியாகப் பயன்படுத்தினால் அவர் கூட்டமைப்பு ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகலாம். அத்துடன், கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியல் என்பது அந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரின் காலடிக்குள் வந்துவிடும்.

# தவிட்டு அரிசி எண்ணெய் சிக்கனமான சமையல் தீர்வு




ரைசெலா தவிட்டு அரிசி எண்ணெய் என்பது சிற்றிஹெல்த் இம்போர்ட்ஸ் பிரைவேற் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் இறக்குமதி செய்து விநியோகிக்கப்படுகிறது. சந்தையில் அறிமுகம் செய்யப்பட்ட குறுகிய காலப்பகுதியினுள் பிரபல்யம் பெற்றுள்ள இந்த எண்ணெய் வகை தவிட்டுஅரிசிஎண்ணெயில்காணப்படும்ஆரோக்கிய அனுகூலங்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளன.

அதாவது கொலஸ்ரோல் அளவை குறைக்கும் வகையில் அமைந்துள்ளதுடன், உங்கள் இருதயத்துக்கு ஆரோக்கியத்தை வழங்கக் கூடியதாக அமைந்துள்ளது. மேலும் உடல் பருமன் குறைவுக்கு உதவும் வகையிலும் அமைந்துள்ளதுடன், சருமத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, ஆற்றல் திறனை மேம்படுத்துவதுடன் புற்றுநோய் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துகிறது. அத்துடன் நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் ஊக்குவிக் கிறது. பல்வேறு ஆய்வுகளின்படி ஒவ்வாமை நிலையை குறைப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

வயது முதிர்ந்த பெண்கள் மத்தியில் மாதவிடாய் நிற்கும் தறுவாயில் ஏற்படக்கூடிய சிக்கல் நிலைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள உதவுகிறது. தவிட்டு அரிசி எண்ணெய் என்பது அதிகளவு ஃபைபர் கொண்டது. இது உணவு சமிபாட்டை ஊக்குவிக்கச் செய்யக் கூடியது. ரைசெலா எண்ணெயை நாட்டின் முன்னணி சுப்பர் மார்க்கெட்கள், விற்பனையகங்கள் மற்றும் பார்மசிகளிலிருந்தும் கொள் வனவு செய்ய முடியும்.

ரைசெலா என்பது பல்வேறு அனுகூலங்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. குறிப்பாக ஒலிவ் எண்ணெய் மற்றும் ஏனைய மரக்கறி எண்ணெய் வகைகளின் விலை மற்றும் ஆரோக்கிய அனுகூலங்கள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் சமையல் பயன்பாட்டுக்கு மேன்மையானது. அரிசி உமியிலிருந்து தவிட்டு அரிசி எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இதில் அதியுயர்வான புகை நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக உயர் வெப்பநிலையிலான சமையல் முறைகளில் பொதுவாக பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக வறுவல் பொறியல்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

சகல விதமான சமையல் எண்ணெய் வகைகளுடனும் ஒப்பிடுகையில் ரைசெலா தவிட்டு அரிசி எண்ணெய் மற்றும் பீநட் பட்டர் எண்ணெய் ஆகியன உகந்த கொழுப்பு அடக்கக்கூறுகளைக் கொண்டுள்ளன. ஆனாலும் ரைசெலா தவிட்டு எண்ணெயில் காணப்படும் மேலதிக போசணைகள் ஏனையவற்றைவிட உயர்ந்த நிலையைப்பேண உதவியாக அமைந்துள்ளது. தவிட்டு அரிசி எண்ணெய் என்பது ஆசிய கலாசாரம் நிலவும் நாடுகளான ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகளில் அதிகளவு பயன்படுத்தப்படுகின்றன. ஏனெனில் அரிசி என்பது அவர்களின் பிரதான உணவுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. ஆனாலும் தவிட்டு அரிசி எண்ணெய் என்பது அதன் விசேட ஆரோக்கிய அனுகூலங்களுக்காக உலகின் ஏனைய நாடுகளிலும் அதிகளவு பிரபல்யம் பெற்று காணப்படுகின்றது. விற்றமின் ஈ உடலுக்கு உகந்த கொழுப்பு அமில சமநிலை, அன்டிஒக்சிடென்ட் கொள்ளளவு மற்றும் கொலஸ்ரோலை குறைக்கும் ஆற்றல் ஆகிய உள்ளடகங்களை கொண்டுள்ளமையால் இந்த எண்ணெய் வகை அதிகளவு பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

தவிட்டு அரிசி எண்ணெய் தெவிட்டிய, ஒற்றை ஆபூரித மற்றும் பல நிறைசெறிவிலாக் கொழுப்பு ஆகியவற்றை சிறந்த சம நிலையில் கொண்டுள்ளது.

இவை அமெரிக்க இருதயசம்மேளனத்தினாலும் உலக சுகாதார தாபனத்தாலும் அதிகளவு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த சமநிலையான கொழுப்புஅமிலங்கள் என்பது உடலின் கொலஸ்ரோல்அளவை குறைக்கும் வகையில் அமைந்திருக்கும். ஏனெனில் உடலுக்கு சாதகமான கொலஸ்ரோல் வகைகள், பாதகமான கொலஸ்ரோல் வகை படிவதை தடுக்கும்.

இந்த நிலையானது அதெரோஸ்சிலெரொசிஸ் நிலையிலிருந்து பாதுகாக்கும் அத்துடன் இருதய கோளாறுகள் மற்றும் பக்க வாதங்கள் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளன. (த)

# கொமர்ஷல் கிரடிட் கார்ட் இருந்தால் 21 நிலையங்களில் பாரிய கழிவுகள்

தென் பகுதியின் யால மற்றும் உடவளவ்வ முதல் குளிர்ச்சியான மத்திய மலை நாட்டின் ஹப்புத்தளை மற்றும் நுவரெலிய வரைக்கும் அல்லது விழிகளுக்கு விருந்து படைக்கும் வடமேற்கின் கற்பிட்டி கடற்கரை வரைக்கும் கொமர்ஷல் வங்கி கிரடிட் கார்ட் உரிமையாளர்கள் உல்லாசம் அனுபவிக்க மகத்தானதோர் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கி அண்மையில் அறிமுகம் செய்துள்ள உல்லாச விடுதிகளின் கட்டணக் கழிவுத் திட்டத்தின் கீழ் இது சாத்தியமாகியுள்ளது. செரண்டிப் லெஷர் ஹோட்டல்கள் மற்றும் Bungalows.lk என்பனவற்றுடன் இணைந்து இந்தத் திட்டம் நடைமுறைபடுத்தப்படுகின்றது. விடுமுறையை மிக வும் உல்லாசமாகக் கழிக்கக் கூடிய நாட்டின் மிகவும் பிரபலமான 21 கண்கவர் இடங்களில் 50வீதம் வரையான கழிவுகளை இந்தத் திட்டத்தின் மூலம் அனுபவிக்கலாம். செரண்டிப் லெஷர் ஹோட்டல் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை டொல்பின் கிளப் ஹோட்டல், ஹோட்டல் சீகிரிய, களுத்துறை அவானி விடுதி மற்றும் பெந்தோட்டை அவானி விடுதி, ஆகிய இடங்களில் இந்தக் கழிவுகளை வழங்கும். கொமர்ஷல் வங்கி கிரடிட் கார்ட் உரிமையாளர்கள் குறிப்பிட்ட ஹோட்டல்களில் குறிப்பிட்ட காலப்பகுதியில் இருவர் தங்கும் அறைக்கு 50% கழிவும், மூவர் தங்கும் அறைக்கு 33% கழிவையும் பெற்றுக் கொள்ளலாம். இந்த ஹோட்டல்களுக்கான கட்டணங்களைக் கொமர்ஷல் வங்கி கிரடிட் கார்ட் மூலம் செலுத்தும் போது இந்தக் கழிவுகள் கிடைக்கும்.



இதேவேளை www.bunglows.lk_ இந்தக் கழிவுகளுக்காக 17 பங்களாக்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன. இவ்விடங்களில் 2014 ஓகஸ்ட் 31 வரை 40% கழிவுகள் வழங்கப்படும். கற்பிட்டி ஆர்யா லெகூன், யாலவில் போல்டர்ஸ், கண்டியில் பங்களா பை அமாயா, குருணாகல் இப்பகமுவவில் கொகோ பாம்ஸ், நுவரெலியாவில் குகூன் ஹில்ஸ், டிக்கோயாவில் அயோனா அகரபத்தன, கொக்கலயில் ஜோய்ஸ் பங்களா, யால ஜோய்ஸ் பங்களா, மாத்தளை குடா ஓய ரத்தொட, கொக்கல ஒக்டபஸ் ரீப், யால பன்தேரா லொட்ஜ், உடவளவ்வ சப்ரொன் பீல்ட்ஸ், பண்டாரவளை சப்ரொன் ஹில் ஹவுஸ், உஸ்வடகெடியாவ த ஹெமில்டன் பீச் விலா, யால த வைல்ட் டஸ்கர், தெரணியகல உடபொல, ஹப்புத் தளை விகாரகல எஸ்டேட் பங்களா ஆகிய இடங்களே அவையாகும்.

இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் என்பனவற்றைக்கொள்வனவுசெய்ய விரும்புகின்ற கொமர்ஷல் வங்கி கார்ட் உரிமையாளர்களுக்கும் ஜூன் மாதம் பல வாய்ப்புக்களை வழங்கவுள்ளது. அபான்ஸ் நிறுவனங்களில் பொருள் களுக்கான 20% கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும், அல்லது 24 மாத கால வட்டியற்ற தவணை கொடுப்பனவு அடிப்படையிலும் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம். 100க்கும் மேற்பட்ட வகையான பொருள்கள் மீது இந்த சலுகைகள் வழங்கப்படவுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக ஹமீடியாவில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகையான பொருள்களை கொள்வனவு செய்து அவற்றுக்கான கொடுப்பனவை கொமர்ஷல் வங்கியின் கொம்பேங்க் விஸா கார்ட் மூலம் செலுத்துகின்ற போது கொள்வனவு செய்யப்பட்டபொருள்களுக்குமுறையே 50%, 75% , மற்றும் 100% கழிவுகளைப் பெறலாம். (த)

# உயர் சம்பளத்துடன் தொழில் பெற உதவும் எடெக்செல் பிரெக்-எச்.என்.டி.

ஈசொப்ற் மெற்ரோ கம்பஸ் நிறுவனமானது இலங்கையில் மிகப் பெரிய தகவல் தொழிநுட்ப வலையமைப்பினைக் கொண்டுள்ளது. தகவல் தொழிநுட்பம், ஆங்கிலம், வியாபார முகாமைத்துவம் மற்றும் பொறியியற்துறை போன்ற சர்வதேச தரம் வாய்ந்த கற்கைநெறிகளை மாணவர்களுக்குப் போதிப்பதில் இலங்கையில் முதற்தரக் கணினி நிறுவனமாகத் திகழ்கின்றது.

இலங்கையில் 14 வருடகால நம்பகமான உயர்கல்விச் சேவையை மாணவர்களுக்கு வழங்கி வரும் ஈசொப்ற் நிறுவனம் 3 வருடப் பட்டப்படிப்பினை முதல் இரு ஆண்டுக் கல்வியான சர்வதேச அங்கீகாரமுள்ள பிரெக்-எச்.என்.டி இனை குறைந்த மூலதனத்துடன் யாழ்ப்பாணக் கிளையிலே கற்கக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டை பல்கலைக்கழகங்கள் மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தலைசிறந்த இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களின்; பட்டமொன்றினை யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.



இலங்கையில் மிகப் பிரசித்தி பெற்ற தரமான கல்வியை வழங்கும் ஈசொப்ற் நிறுவனமானது இங்கிலாந்து எடெக்செல் நிறுவனத்தின் இலங்கையின் மிகத்துரிதமாக வளர்ந்து வரும் எடெக்செல் நிலையமாக காணப்படுவது சிறப்பம்சமாகும். கல்விக்கு பிரபல்யமான யாழ்ப்பாணத்தில் மிகச்சிறந்த முழுநேர, பகுதிநேர விரிவுரையாளர்களை தன்னகத்தே கொண்டுள்ள ஈசொற் யாழ். கிளையானது எச்.என்.டி. கல்வியினைப் போதிப்பதற்கு பயிற்றப்பட்ட, பட்ட மேற்படிப்புகளை உரிய விரிவுரையாளர்கள் மூலம் மாணவர்களுக்கு போதிப்பது சிறப்பம்சமாகும்.

மாணவர்கள் கல்வியை கற்பதற்கு ஏற்றவாறு குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள் நவீன ஆய்வுகூட வசதிகள் வரையறையற்ற இணையத்தள வசதிகள் நூலக வசதிகள் என்பவற்றைக் கொண்டுள்ளதுடன் மாணவர்களது கற்றல் செயற்பாட்டிற்கு மேலும் வலுவூட்டுவதற்காக கற்கை நெறி அனைத்திற்குமான பாடப்புத்தகங்கள் முற்றிலும் இலவசமாக ஈசொப்ற் இனால் மட்டுமே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஐம்பது ஆண்டு கால பிரசித்தி பெற்ற பிரித்தானியா சார்ட்டட் இன்ஸ்ரிரியூட் ஒவ் ஐ.ரி. நிறுவனத்தின் மூன்று நிலைகளையும் போதிப்பதற்கு இலங்கையில் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனமாகக் காணப்படும் ஈசொப்ற், பி.சி.எஸ். நிறுவனத்தின் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டினை எச்.என்.டி. பூர்த்தி செய்த மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும். (த)

# ஹேமாஸ் 'அபிமான' முன்னெடுப்பு

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. தனது நிறுவனம் முழுவதும் ஒரு வாழ்க்கைமுறை போக்கை நிலைபேணச் செய்யும் பொருட்டு 'அபிமான' எனும் முன்னெடுப்பு திட்டத்தைக் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்துள்ளது.

பொறுப்புடன் வாழ்கின்ற வாழ்க்கை ஒன்றிலிருந்து மட்டுமே தோற்றம் பெறக்கூடிய ஆழமானதும் உள்ளார்ந்ததுமான கண்ணியம் மற்றும் பெருமை தொடர்பில் ஒவ் வொரு ஊழியருக்கும் ஊக்கமளிப்பதற்காக - ஒவ்வொரு நடவடிக்கை யுடனும் பொறுப்புணர்வு மற்றும் நிலைபேண்தன்மை ஆகியவற்றை ஒன்றிணைக்கும்விதத்தில் ஹேமாஸ் நிறுவனம் இந்தக் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு செயற்றிட்டத்திற்கு தலைமைதாங்கி வழிநடாத்துகின் றது.

இது தொடர்பான சம்பிரதாயபூர்வ அறிவிப்பு உள்ளடங்கிய 'சன்னச' அல்லது காகிதச்சுருள் பேழையை ஹேமாஸ் குழும நிலைபேண் தன்மை மற்றும் கூட்டாண்மை தொடர்பாடல் பிரிவு தலைமை அதிகாரி சிரோமி மசக்கோரள, பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்டீவன் இன்டர்பை அவர்களிடம் வைபவ ரீதியாக வழங்கி வைத்தார். பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்றது. குறிப்பாகப் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், முகாமைத்துவ உயரதிகாரிகள், முக்கியமான பங்குதாரர்கள் மற்றும் ஹேமாஸ் தன்னுடைய வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ள துறைகளில் பணியாற்றும் அதிகளவான ஊழியர்களும்; இதன் போது கலந்து கொண்டனர். (த)



# ஒரு மாணவனின் தொலைந்துபோன இலட்சியம்

**உண்மைச் சம்பவம்**

ஒவ்வொரு மாணவர்களும் தங்களுடைய பாடசாலைக் காலங்களில் கல்வி கற்கும் போது இலட்சியங்களினுடனேயே கல்வி கற்கின்றார்கள். அதாவது தாம் எதிர்காலத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவராக வர வேண்டும் என்றே கனவு காண்கின்றார்கள். ஆனால் சிலரது இலட்சியங்கள் ஏதோ ஒரு காரணத்தினால் அடைய முடியாமல் போய் விடுகின்றன. இந்தக் காரணங்களானவை குறித்த மாணவன் சார்ந்ததாகவோ அல்லது அந்த மாணவனின் எல்லைக்கு அப்பாற்பட்டதாகவோ அமைந்து விடுகின்றன. இவ்வாறு ஓர் இலட்சியத்துடன் கல்வி கற்ற ஒரு மாணவனின் உண்மைக் கதையைக் கவனிப்போம்.

குறித்த மாணவன் சமூக, பொருளாதார மட்டத்தில் கீழ் நிலையில் உள்ள ஓர் குடும்பத்தில் பிறந்தவன். அவன் குடும்பத்தின் ஒரே பிள்ளை. அப்பாவோ நாளாந்த உழைப்பை நாடிச் செல்பவர். அவன் தனது பாடசாலைக் காலத்தில் மிகவும் கெட்டிக்காரனாக அனைவரும் போற்றும் வண்ணம் கல்வியைக் கற்று வந்தவன். இதனால் அவன் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணதர) பரீட்சையில் ஓர் உயரிய பெறுபேற்றைப் பெற்றவன். அந்த வேளையில் அவனது இலட்சியம் நான் ஒரு பொறியியலாளனாக வர வேண்டும் என்றதாகவே இருந்தது.

இன்று எமது இளம் சமுதாயத்தை அச்சுறுத்துவதில் முக்கிய இடத்தைப் பெறுவது சிகரெட், மதுபானம், போதைவஸ்து என்பவையே ஆகும். இவை உயர்தரக் கல்வியை நோக்கி பயணிக்கத் தொடங்கிய இந்தக் கெட்டிக்கார மாணவனையும் விட்டுவிடவில்லை. பிறழ்வான நண்பர்களின் சேர்க்கையால் சிகரெட், மதுபானம், போதைவஸ்து என்பவற்றின் பழக்கங்களினுள் அகப்பட்டுக் கொண்டான். ஆரம்பத்தில் சிறு சிறு குழுக்களுடன் சேரத் தொடங்கியவன் நாளடைவில் வீட்டுக்கு வருவதையே தாமதப்படுத்திக் கொண்டான். பின்பு வீட்டாருக்குச் சொல்லாமலேயே வெளியிடங்களுக்கும் செல்லத் தொடங்கினான். நாள்கள் செல்லச் செல்ல குழுச் சண்டைகளிலும் பங்குபற்றத் தொடங்கினான். இதன் காரணமாக உயர்தரக் கல்வியைக்கூட சிந்திக்காமல் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தினான். பெற்றோரால் எதுவும் செய்ய இயலவில்லை.

இப்படியாக காலங்கள் ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் இந்த மாணவனின் நிலையைக் கண்டு அவனை நல் வழிக்குக் கொண்டு செல்ல அவனுக்குக் கல்வி கற்பித்த ஓர் ஆசிரியர் முனைந்தார். அந்த ஆசிரியர் அந்தப் பகுதி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரியுடன் தொடர்புகொண்டு அவர் மூலமாக அந்த மாணவனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து இயங்கும் 'குருந்தம்' எனும் மதுவுக்கு அடிமையானோர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தார். அங்கு பாதிக்கப்பட்ட அந்த மாணவனுக்கு போதிய சிகிச்சைகள், ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டன. இதன் காரணமாக நாளொன்றுக்கு 35 சிகரெட்டுகள் பாவித்தவன் இன்று அதைத் தொடாத ஓர் நிலைக்குத் திரும்பி விட்டான்.

இன்று அந்த மாணவன் திருந்தி விட்டாலும் அவனால் தனது உயர்தரக் கல்வியைத் தொடர முடியவில்லை. இது தொடர்பாக இன்றைய எமது மாணவர்கள், இளைய தலைமுறையினர், பெற்றோர்கள், ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டும்.

எனவே எமது பிள்ளைகளை, எமது மாணவர்களை அவர்களது இலட்சியப் பயணங்களை நோக்கிச் செல்வதற்கு இன்றைய காலத்தில் தடையாகவுள்ள சிகரெட், மதுபானம், போதைவஸ்து என்பவற்றுக்கு எதிராக அனைவரும் போராட வேண்டும். இது காலத்தின் கட்டாயமும் ஆகும்.

# திருத்தப்படுமா வேணாவில் ஆரம்ப சுகாதார நிலையம்

கிளிநொச்சி, ஜூன் 22

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வேணாவில் ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் மக்கள் மீள்குடியேறியபோதும் அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையம் இதுவரை புனரமைக்கப்படவில்லை. இதனால் அந்தக் கிராமத்துக்கான ஆரம்ப சுகாதார நிலையச் செயற்பாடுகள் பெரும் சிரமங்களின் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே குறித்த கிராமத்தில் சேதமடைந்து காணப்படும் மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புனரமைத்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)



திருத்தப்படாத நிலையில் வேணாவில் ஆரம்ப சுகாதார நிலையம்




SINGER
கணினி வசந்தம்
2014 மீண்டும் ஆரம்பம்.....
SINGER X SERIES
lenovo
ASUS
SINGER X SERIES
மாதங்களுக்கு 12 வட்டியின்றி.
SINX-243AT
• Intel Celeron Dual Core
• 14" Display, 2 GB, 320 GB
• DVD RW, Wifi, Webcam,
ரூ.49,999/-
காசுக் கொள்வனவுக்கு ரூ.4,000/- விலைக்கழிவு
ரூ.3,333/- x12
மாதங்களுக்கு 12 வட்டியின்றி.
SINX-QC-4G
• Intel Quad Core 2.17GHz
• 14" HD Display, 2 GB, 320GB
• DVD RW, Webcam, Wifi, B.T
ரூ.54,999/-
காசுக் கொள்வனவுக்கு ரூ.5,000/- விலைக்கழிவு
ரூ.3,667/- x12
மாதங்களுக்கு 12 வட்டியின்றி.
SINX-I3-4G
• Intel Core i3 4000M 2.4GHz
• 14" HD Display, 4 GB, 500GB
• DVD RW, Webcam, Wifi, B.T
ரூ.77,999/-
காசுக் கொள்வனவுக்கு ரூ.8,000/- விலைக்கழிவு
ரூ.5,200/- x12
ULTRA BOOK
SINX-I5-UB
• Intel Core i5 4200M 1.6 GHz
• 14" HD with Touch Screen ,
• 4 GB , 500GB, Webcam,
• Wifi, B.T, Genuine Windows 8
ரூ.122,199/-
ரூ.109,999/-
ரூ.8,041/-
மாதங்களுக்கு 12 வட்டியின்றி.
SINGER ALL-in-ONE COMPUTER
SINX-M173H
Intel Celeron B830 1.8GHz
17.3" Display, 2 GB, 320 GB
DVD RW, Wifi, In.Speakers,
Webcam, Keyboard & Mouse
ரூ.49,999/-
காசுக் கொள்வனவுக்கு ரூ.5,000/- விலைக்கழிவு
ரூ.3,333/- x12
AS-NB-I3
ASUS
• Intel Core i3 (3rd Gen.)
• 15.6" HD LED Display, 4 GB,
• 500GB HDD, DVD RW, Wifi, Webcam
ரூ.83,499/-
ரூ.75,149/-
ரூ.5,495/-
lenovo FOR THOSE WHO DO.
4th Gen.
lenovo LEN-NB-I3-4G
• Intel Core i3 (4th Gen.)
• 15.6" HD Display, 4 GB, 500GB
• DVD RW, Webcam, Wifi, B.T
மாதங்களுக்கு 12 வட்டியின்றி.
ரூ.88,899/-
காசுக் கொள்வனவுக்கு ரூ.8,890/- விலைக்கழிவு
ரூ.5,927/- x 12
lenovo LEN-NB-I5
• Intel Core i5 (4th Gen.)
• 15.6" HD Display, 4 GB, 500GB
• DVD RW, Webcam, Wifi, B.T
3 வருட உத்தரவாதம் இலவசம்.
ரூ.99,799/-
ரூ.89,819/-
மாதாந்தம் ரூ.5,927/- x 12
hp
HP-I3-14NB
• Intel Core i3 (3rd Gen.)
• 14" HD LED Display, 2 GB,
• 500GB HDD, DVD RW, Wifi, Webcam
ரூ.64,999/-
ரூ.4,453/- x 12
HP-I3-15NB
4th Gen.
• Intel Core i3 (4th Gen.)
• 15.6" HD LED Display, 4 GB,
• 500GB HDD, DVD RW, Wifi, Webcam
மாதங்களுக்கு 12 வட்டியின்றி.
ரூ.93,399/-
காசுக் கொள்வனவுக்கு ரூ.13,400/- விலைக்கழிவு
ரூ.6,227/- x 12
The Official IT Partner
http:// www.singersl.com
www.facebook.com/singersl
011 5 400 400
கிடைக்குமிடங்கள்
SINGER Plus காட்சியறைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடம்
நிபந்தனைகளுக்குட்பட்டது
(C/ 14294)

50 YEARS



அக்காலம் முதல் ▸ இக்காலம் வரை

C/14524

பெஸ்டல் என்றால் Homerun PAS மட்டுமே

www.pabcbank.com
(011) 4 667 222



சம்மான

ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கான கடன் வசதி

- ரூ. 500,000 வரை கடன் வசதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- 5 வருட மீள் செலுத்தும் காலம்
- 70 வயது வரை கடனை மீளச் செலுத்தக் கூடிய வசதி

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(011) 4 667 222

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பான் ஏஷியா வங்கி

C/14527

# பொதுநோக்கு மண்டபத்தை புனரமைக்குமாறு கோரிக்கை



அழிவடைந்த நிலையில்
பொதுநோக்கு மண்டபம்

கிளிநொச்சி, ஜூன் 22

முல்லைத்தீவு, பாலைப்பாணி கிராமத் தின் பொதுநோக்கு மண்டபத்தை புனரமைத்துத் தருமாறு அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பாலைப் பாணிக் கிராமத்தில் தற்போது 70 வரையான குடும்பங்கள் வசிக்கின்றன.

இந்தநிலையில் அங்குள்ள குடும்பங் கள் பல்வேறு அடிப்படைத் தேவை களையுடைய குடும்பங்களாக உள்ளன. இது ஒரு புறமிருக்க அந்தக் கிராமத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டு பல் வேறு தேவைகள் கருதி அமைக்கப் பட்ட பொது நோக்கு மண்டபம் போரால் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் ஆரம்ப சுகாதார நிலையச் செயற் பாடுகள் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வகுப்புக்கள், கலந்துரையாடல்கள் என்பனவற்றை அந்தக் கிராம மக்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியில் முன்னெடுக்க வேண் டிய நிலையில் இருந்து வருகின்றனர். எனவே குறித்த பொது நோக்கு மண்டபத்தைப் புன ரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி.
சுவர்ணகுமாரி இரகுநாதன்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

தோற்றம் : 03.05.1942 ✳ மறைவு : 27.05.2014

எமது அன்புத்தெய்வத்தின் பிரிவுசெய்திகேட்டு உடன் வந்து எங்களோடு துன்பத்தை பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், உள்நாடு, வெளிநாடுகளிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றியை தெரிவிப்ப தோடு 26.06.2014 (வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்தியநிகழ்விலும்,அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளையார் கோவில் வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்

# ஆயுள்வேத வைத்தியம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

## கூறுகிறார் ஆயுள்வேத வைத்திய அதிகாரி

> மனிதன் தற்பொழுது புதிய புதிய நோய்களை எதிர்கொள்கின்றான். எனவே மனிதன் ஆரோக்கியமான வாழ்வு வாழ இந்த ஆயுள் வேத வைத்திய நிலையம் உதவும்

சாவகச்சேரி, ஜூன் 22

ஆயுள்வேத வைத்தியம் மிகவும் பழைமை யானது. இடைக்காலத்தில் இது மந்த கதி நிலைக்குச் சென்றுவிட்டது. எனவே ஆயுள் வேத வைத்தியம் தொடர்பாக சமூக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண் டும். இதற்கென பல திட்டங்களை வகுத்துள் ளோம். இவ்வாறு தெரிவித்தார் கொடிகாமம் கிராமிய ஆயுள்வேத வைத்திய நிலையத்தின் வைத்திய அதிகாரியான கோ.கனகசுந்தரம்.

கடந்த 16 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபையின் எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆயுள்வேத வைத்தியசாலையின் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு வைத்தியசாலையின் பெயர்ப் பலகையை திறந்து வைத்து உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நிகழ்வு மிருசுவில் உப பணிமனையின் பொறுப்பதிகாரி திருமதி சி.கஜந்தினி தலைமை யில் நடைபெற்றது. ஆயுள்வேத வைத்திய சாலை புதிய கட்டடத்தை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராசா நாடாவை வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து வைத் தியதிகாரி அங்கு உரை நிகழ்த்துகையில்;

ஆயுள்வேத வைத்தியசாலைகள் மாகாண அரசினாலும், உள்ளூராட்சி சபைகளினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. எமது வைத்தி யத்தில் கட்டுப்பாடுகள் பல காணப்படுகின்றன. ஆயுள்வேத மருந்து வகைகளை மக்கள் நன்றாகப் பாவித்து வருகிறார்கள். கிராமிய வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது. இவை நிவர்த்தி செய்யப்படல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் சி.துரைராசா உரை நிகழ்த்துகையில்;

ஆயுள்வேத வைத்தியசாலை எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் திறக்கப்பட வேண்டும் என எம்மிடம் கோரப்பட்டது. இந்தப் பிரதேசம் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசம். எனவே இந்தப் பகுதி மக்களின் தேவையை கருத்தில் கொண்டு இந்த வைத்திய நிலையம் திறக்கப்பட் டுள்ளது.

மனிதன் தற்பொழுது புதிய புதிய நோய்களை எதிர்கொள்கின்றான். எனவே மனிதன் ஆரோக்கியமான வாழ்வு வாழ இந்த ஆயுள் வேத வைத்திய நிலையம் உதவும் எனக் குறிப்பிட்டார். (வ-131)







150 வருடம்

எஸ்பிஐ
வளர்ச்சி இங்கிருக்கிறது

அறிமுகமாகிறது எஸ்பிஐ ஃபிளாஷ்.
இன்ஸ்டன்ட் ரெமிட்டன்ஸ் சர்வீஸ்
ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு.



ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா கடந்த 150 ஆண்டுகளாக ஸ்ரீலங்காவின் முன்னணி வங்கியாக ஒப்பற்ற சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இந்தியாவிற்கு இன்ஸ்டன்ட் ரெமிட்டன்ஸ் சர்வீஸ் அறிமுகமாகிறது. பயனரின் எஸ்பிஐ வங்கி அல்லது துணை வங்கி கணக்குகளில் ஒரு சில நிமிடங்களில் பணம் வரவு வைக்கப்படும். வேறு வங்கி கணக்குகளிலும் வந்து சேர, ஒரு நாளை விட அதிகம் ஆகாது. சுலபம், சரிதானே?

C/14530



உரிய நேரத்தில் வேரோடு பிடுங்கப்படாவிட்டால், எதிர்காலத்தில் Bad English உங்களுக்கு அதிக வலியைத் தந்துவிடும். எனவே அதிக விளைவுகளை தருவதற்கு முன்பு ரூ. 800/- மாத்திரம் செலுத்தி எமது விசேட நிபுணர்களின் ஆலோசனைக்கு ஏற்ப விரைவானதும், வலியற்றதுமான ஆங்கில பரிசோதனையினை மேற்கொண்டு பரிந்துரைக்கும் பாடநெறியை பின்தொடருங்கள். ஆரோக்கியமான ஆங்கிலத்திற்கு British Council க்கு பிரவேசியுங்கள்.

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 3
T +94(0)11 7521 521

88/3 கொடுகொட வெல வீதி, கண்டி
T +94(0)81 2222 410

70 நாவலர் வீதி, ஜாப்னா
T +94(0)21 7521 521

நேரத்தை ஒதுக்கிக்கொள்ள உடன் அழையுங்கள்.

பரிசோதனைகள் மற்றும் பாடநெறிகள் காலி மற்றும் மாத்தறையில் அமைந்துள்ள Apex Business Academy யில் பெற்றுக்கொள்ள முடியும். உங்களுக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ள அழையுங்கள்.
மாத்தறை +94 (0)41 2229 555 காலி +94 (0)91 2232 755

E info.lk@britishcouncil.org

C/14531

BRITISH COUNCIL
www.britishcouncil.lk

# எல் பி மோட்டார் சைக்கிள் லீசிங்



★ பிளண்டர் இலவசம்
★ காப்புறுதி பணத்தில் 50% சேமிப்பு

தொடர்புகளுக்கு
0777 718 428

அங்கு இங்கு எங்கு சென்றாலும் குறைந்த பதிக்கட்டணம் எம்மிடமே!

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் - 0770 674851, 0214 920310/1 | நெல்லியடி - 0777 718426, 0214 923358/9 |
| சுன்னாகம் - 0774 920930, 0214 920331/9 | சாவகச்சேரி - 0770 412057, 0214 923360/1 |
| மானிப்பாய் - 0777 718407, 0214 923356/7 | கிளிநொச்சி - 0774 502485, 0214 923362/3 |

L B FINANCE

# தற்போது சம்பத் வங்கியிடமிருந்து உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிகூடிய அடகுத்தொகை..!

கரட் 24 இற்கு 30,000/-
கரட் 22 இற்கு 27,500/-

மாதாந்தம் 1.5% குறைந்த வட்டி வீதமே அறவிடப்படும்!

நாடு முழுவதிலுமுள்ள சம்பத் வங்கிக் கிளைகளில் தவணை முறையில் செலுத்தமுடியும்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

C/14522

Sampath Bank Fitch Ratings AA-(lka) 0112 30 30 50 www.sampath.lk



சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மாணவர்கள், பெற்றோர், சுன்னாகம் பொலிஸார், ஆசிரியர்கள் இணைந்து அண்மையில் டெங்கு நுளம்பு ஒழிப்புச் சிரமதானம் செய்தனர். (ஒ)



பொலிகண்டி மக்கள் படிப்பக முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் முன்பள்ளிச் சிறார்களின் உடற்பயிற்சிக் கண்காட்சி இடம்பெறுகின்றது. (க-108)

பன்மொழிப் புலவர் அருட்கலாநிதி தாவீது அடிகளாரின் 33 ஆவது நினைவு தின விழா தும்பளையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித் துறை பங்குத் தந்தை அருட்திரு ஜோன் மவுலிஸ் தாவீது அடிகள் நினைவு தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (வ-173)





அச்சுவேலி வருணன் அருள் மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமான் ஆலய மணவாளக் கோலத் திருவிழாவில் சுவாமி வீதி உலா வந்து அருள் பாலிக்கிறார். (வ-173)



தேசத்தின் மகுடம் கண்காட்சியில் நாட்டுப்புறப் பாடலில் முதலாமிடம் பெற்ற தி.தவராசாவுக்கு விசேட பரிசில் வழங்கப்படுகிறது. வடமராட்சி வடக்கு கலாசார உத்தியோகத்தர் செல்வி சுகுணாவும் உடனிருக்கிறார். (க-108)



கொழும்புத்துறை இலந்தைக்குளம் வதிரிபீட விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவின் போது விநாயகர் ரதபவனி வந்து அருள் பாலிக்கின்றார். (ஒ-135)



சுன்னாகம், ஸ்கந்தவரோதய கல்லூரியின் 2014ஆம் ஆண்டுக்கான சின்னம் சூட்டு விழா அதிபர் இ.ஈஸ்வரதாஸன் தலைமையில் நடைபெற்றது. அதில் சில காட்சிகள். (ஒ)



மானிப்பாய் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா கலந்து சிறப்பித்தார். (ஒ)





சேக்கிழார் விழா வவுனியா சிந்தாமணி கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் மங்கல விளக்கேற்றி வைப்பதையும், வவுனியா நிருத்திய நிகேதன கலா மன்ற மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் காணலாம். (ச-421)



வவுனியா இந்துக் கல்லூரி அதிபர் திருமதி ஜீ.நடராஜா கல்வி நிர்வாக ¼Äç k )«D III இற்குபதவி உயர்வு பெற்ற மைக்கான பாராட்டு விழா பாட சாலை சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெற்ற போது, பாட சாலை நிர்வாகத்தின் பாராட்டுசான்றிதழ் அவருக்கு வழங்கப்படுவதைக் காணலாம். (ச-402)



வவுனியா பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளிக்கு கோவில்குளம் இளைஞர் கழகத்தால் புத்தக பைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்தப் புத்தகப் பைகளை வவுனியா கோவில் குளம் இளைஞர் கழக ஸ்தாபகர் க.சந்திரகுலசிங்கம் முன்பள்ளி ஆசிரியர் சி.ராகினியிடம் கையளித்தார். (ச-402)



ஆன்மிக பணியில் ஈடுபட்டு வரும் ந.சுதாகரனுக்கு அவரின் பணியைப் பாராட்டி சிரேஷ்ட விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் அருள்நிதி ஞானி என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம். (ச-421)



மன்னார், எருக்கலம்பிட்டி கிராமத்துக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக்கால் வழங்கப்பட்ட குடி தண்ணீர் வசதி மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. (ச-56)



கிளிநொச்சி மாவட்ட கரும்புப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான பயிற்சி நிகழ்வு உடவளவையில் நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுடன் கரும்பு ஆராய்ச்சி நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலக, கரைச்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். (ச-18)





தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு தேசிய சேமிப்பு வங்கி யின் வவுனியா கிளை யினரால் நடத்தப் பட்டது. இந்த நிகழ்வில் வங்கியின் முகாமையாளர் சி.கருணாகரன், உதவி முகாமையாளர் திருமதி பி.யோகானந் மாணவர்களுக்கு பாசில்களை வழங்கினர். (ச-402)




வவுனியா நகரசபை பயன் தரக்கூடிய வகையில் இயற்கையான பொருள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பசளையை விநியோகம் செய்து வருகின்றது. (ச-421)



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் கருத்தாடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர் களில் ஒரு பகுதியினரைக் காணலாம். (ச-402)



சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி வவுனியா பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வில்வாழ்வின் எழுச்சித்திணைக் களத்தின் தலைமைப் பீட முகாமையாளர் திருமதி எஸ்.சந்திரகுமார், பிரதேச செயலர் க.உதயராசா, சமுர்த்தி உதவி ஆணையாளர் பி.எம். கே. வீரசிங்க உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-421)



வட இந்து ஆரம்பப் பாடசாலையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு முன்னாள் ஹாட்லிக் கல்லூரியின் அதிபர் ந.குணசீலன் பிரதம விருந்தினராகவும் ஹாட்லிக் கல்லூரியின் கனடா கிளை பழைய மாணவர் சங்கத் தலைவர் சு.சிவராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்களின் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (வ)



மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அ.மோகனராஜ் என்னும் மாணவனுக்கு தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ந.ரஞ்சனா பதக்கம் அணிவிக்கின்றார். அருகில் வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் காணப்படுகின்றார். (க-9)



காரைநகர் களபூமி தெருவடிப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கஜலட்சுமி ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. (வ-250)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் பொறுப்பாளர் சுவாமி சித்ரூபானந்தா அமரத்துவம் அடைந்ததைத் தொடர்ந்து, சேவாச்சிரமத்தின் இயக்குநர் சபை பூரணை தினம் தோறும் அன்னதானம் வழங்கும் நிகழ்வை கடந்த வைகாசிப் பூரணை தினத்தன்று மீண்டும் ஆரம்பித்தது. நிகழ்வில் கனக கௌரிபாலா ஆராதனை நடத்துவதையும், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற முகாமைத்துவ ஆலோசகர் எஸ்.இராஜரட்ணம் ஆகியோர் அன்னதானம் வழங்குவதையும் காணலாம். (வ-173)



அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய மாதர் அபிவிருத்திச் சங்கத்தினரால் அண்மையில் கொண்டாடப்பட்ட மகளிர் தின எழுச்சி விழாவின்போது, விருந்தினர்கள், மாதர் அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களால் அழைத்து வரப்படுவதையும் நிகழ்வுக்கு வருகை தந்தவர்களையும் காணலாம். (ஒ)



தென்மராட்சி கல்வி வலய மட்ட மாணவர்களின் மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் வரணி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றபோது அனைத்து விளையாட்டுக்களிலும் முதலிடம் பெற்றுக் கொண்ட வீர, வீராங்கனைகளும் கழுத்துப்பட்டி வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தென்மராட்சி கல்வி வலய பணிப்பாளர் திரு.சு.கிருஷ்ணகுமார் மற்றும் பிரதம விருந்தினர் ஒலிம்பிக் பதக்கம் வென்ற கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் ஆகியோருடன் வீர, வீராங்கனைகள். (க-122)




திருமதி சுபாஷினி பிரணவனின் குமுறல் கவிதை நூல் வெளியீட்டு விழா துர்க்காதேவி மணி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது முதற் பிரதியை முன்னாள் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா வெளியிட்டு வைக்க ஆசிரியர் திருமதி யாழினி ராஜகுமார் பெறுகிறார். அருகில் நூலாசிரியர் காணப்படுகிறார். (ஒ-135)



சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்கள் புடை சூழ வீதி வலம் வருவதைக் காணலாம். (ஒ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஆனி-09 திங்கட்கிழமை 23.06.2014
திதி: ஏகாதசி பி.ப.12.24 வரை
நட்சத்திரம்: பரணி பி.இ.01.23 வரை
சுபநேரம்: 11.54 - 01.24 வரை
இராகுகாலம்: 07.24-08.54 வரை

**ஏகாதசி விரதம்**



**மேடம்:** எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். அவர்களால் மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.



**இடபம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப் படுவீர்கள். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.



**மிதுனம்:** எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை வரும். உறவினர், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விடயங்களை பகிர்ந்து கொள்வார்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள்.



**கடகம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடிவடையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். உறவினர்கள் உங்களைப் புரிந்துகொள்வார்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.



**சிங்கம்:** பழைய பிரச்சினைகளை நினைத்துப் பார்த்து கோபப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். தோற்று விடுவோமோ என்ற ஒரு அவநம்பிக்கையும் வந்து போகும்.



**கன்னி:** உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் உண்டு. தாய்வழி உறவினர்களின் ஆதரவு பெருகும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும்.



**துலாம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள். பழைய உறவினர், நண்பர்கள் வீடு தேடி வருவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.



**விருச்சிகம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த புதிய முயற்சிகள் மேற்கொள்வீர்கள். அயல் வீட்டாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிரார்த்தனையை குடும்பத்தினருடன் சென்று நிறைவேற்றுவீர்கள்.



**தனுசு:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வரும். அரசு காரியங்கள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.



**மகரம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்து வாங்குவது, விற்பது சாதகமாக முடியும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளால் பழைய பொருள்கள் விற்பனையாகும்.



**கும்பம்:** செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் மீண்டும் தேடி வரும்.



**மீனம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவு பூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். உங்கள் குடும்ப விடயத்தில் மற்றவர்கள் தலையிட அனுமதிக்காதீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். அடுத்தவர்களை குறை கூறுவதை நிறுத்துங்கள்

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 5 | 4 | | 2 | 1 | | 8 |
| 1 | 7 | | | 6 | | | | |
| | 2 | | 7 | | 5 | 6 | 3 | |
| | | | | | 9 | | 2 | |
| 9 | | 2 | | | | 7 | | 6 |
| | 3 | | 8 | | | | | |
| | 1 | 7 | 5 | | 6 | | 9 | |
| | | | | 4 | | | 6 | 1 |
| 3 | | 8 | 2 | | 1 | 4 | | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | 2 | 6 | 3 | 5 | 7 | 8 |
| 7 | 5 | 8 | 9 | 4 | 1 | 3 | 6 | 2 |
| 6 | 3 | 2 | 8 | 5 | 7 | 9 | 4 | 1 |
| 9 | 7 | 1 | 5 | 8 | 4 | 6 | 2 | 3 |
| 2 | 8 | 4 | 6 | 3 | 9 | 1 | 5 | 7 |
| 3 | 6 | 5 | 7 | 1 | 2 | 4 | 8 | 9 |
| 5 | 9 | 6 | 3 | 2 | 8 | 7 | 1 | 4 |
| 4 | 2 | 3 | 1 | 7 | 6 | 8 | 9 | 5 |
| 8 | 1 | 7 | 4 | 9 | 5 | 2 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# Vacancy Announcement

**Title of the Post** : Local Economic Development Coordinator - Enterprise Development

**Duty Station** : Kilinochchi

**Project Period** : Initially for eight months starting from July 2014 – April 2015.

## Responsibilities:

Under the overall supervision of the Kilinochchi District Women Development Federation(KDWDF) and the management of the LEDC Guarantee Limited, the Local Economic Development Coordinator – Enterprise Development will undertake the following duties:

1. Contribute towards the analysis of general socio- economic conditions of the Producer Organizations, as well as in the implementation of their operation strategy.
2. Assist the BDS provider in organizing, identifying, linking and mobilizing POs, enterprises and entrepreneurs as per the project requirements.
3. Identify the economically feasible production lines that could be promoted within the target project areas using local resources.
4. Engage in the development and implementation of overall project work plan, especially monitoring of field level activity.
5. Follow -up with the Producer Organizations and the LEDC Guarantee Limited to ensure sustainability of their businesses.
6. Develop and maintain a data management system that will feed into overall scope of the project.
7. Prepare monthly progress reports and submit to the management of KDWDF.

## Required Qualifications and Experience:

1. Understanding of basic business processes.
2. Solid teamwork and interpersonal skills.
3. At least 2 years experience in managing small scale industrial level development projects is recommended, including experience in conducting assessments, project implementation, and reporting.
4. Familiarity with local contexts and knowledge on resource availability is a plus.
5. Strong verbal and written communication skills with the ability to express technical concepts in business terms.
6. The candidate should hold a degree in fields related to business development and marketing or any other related field or 5 years progressive experience in the relevant field will be considered as equivalent for a degree

## Additional Requirements

* Full-time
* Travel required – Approximately 60%

(ஜி14771)
(12.3.6)

Interested candidates should submit their resume and cover letter through registered post addressed to the President, Kilinochchi District Women Development Federation, C/O Director Planning, Planning Secretariat, Kachcheri, Kilinochchi to reach on or before 07th of July 2014. Please indicate the applied position on the top of left hand corner of envelop.

**வீடு விற்பனைக்கு**

சுன்னாகம், மாணிக்கதியாகராஜ வீதி செல்ல வளவில் 2 பரப்பு 7.90 குழி கொண்ட காணியுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434 (49067) (4.3.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பாடசாலைக்கருக்கு அண்மையாக ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S.நாதன், இல.16/3, விதனையார் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 077 614 6434 (49096)(4.3.6)

**வீடு வாடகைக்கு**

யாழ்.கொழும்புத்துறை, வளன்புரத்தில் மூன்று அறைகள் கொண்ட விசாலமான வீடு வாடகைக்குண்டு.
வாகனத்தரிப்பிட வசதி, குழாய் நீர் வசதி, பௌதீகப் பயன்கள் உண்டு.
தொடர்பு கொள்ளவேண்டிய
தொ.பே.எண்: 075 722 6879
(49109) (12.3.6)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1975இல் பிறந்த 8இல் செவ்வாய் கிரகபாவம் 32 உள்ள N.C.E, Computer படித்த பெண்ணிற்கு படித்த தொழில் உள்ள வரனை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் எதிர்பார்க்கிறோம்.
தொடர்பு: London tamil70@gmail.com
077 079 7514
(49051) (12.3.6)

**கடை வாடகைக்குண்டு**

பருத்தித்துறை வீதி,3ஆம் கட்டை, கல்வியங்காடு என்ற முகவரியி லுள்ள வீட்டுடன் கூடிய கடை வாடகைக்குக் கொடுக்கப்படும். (49186)(5.6.3)
தொ.பே:021 223 0390/071856 5298

**விநியோகஸ்தர் தேவை**

யாழ்ப்பாணத்துக்கு MA'S Food Processing (PVT) Ltd இன் MA'S உணவு உற்பத்திப் பொருள் களும் கிளிநொச்சி புதிய ஆரம்பம் பால் உற்பத்தி நிலையத்தின் பல தரப்பட்ட சுவையூட்டப்பட்ட போத்தல் பாலினையும் விநியோகம் செய்ய தகுதியான விநியோகஸ்தர் தேவை.
தொடர்பு:072 233 2450, 077 949 1015

**கடை வாடகைக்கு**

திருநெல்வேலி சந்திக்கு அருகில் ஆடிய பாதம் வீதியில் 16'x70' அளவைக் கொண்ட (இணைந்த குளியலறை)6 கடைகள் வாடகைக்குண்டு.முழுவதும் மாபிள் பதித்தது. வாகனத் தரிப்பிட வசதியுண்டு.
தொ.பே:077 6681547 (49198) (5.6.3)


# பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் பொது அறிவித்தல்

***வழக்கு இல: நம்பிக்கைச் சொத்து - 167/12***

இம்மன்றில் மேற்காண் வழக்கு குடியியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 16இன் கீழ் பிரதிநிதித்துவ ரீதியில் வல்வை முத்துமாரியம்மன் ஆலயத்தின் 11ஆம் திருவிழா உபயம் தொடர்பாக நடத்தப்பட அனுமதி வழங்குவதற்காக தொடரப் பட்டுள்ளதென இத்தால் அக்கறையுள்ள தரப்பினருக்கு அறிவித்தல் வழங்கப்படுகிறது.

*மன்றின் கட்டளைப்படி,*
*வரைவு*

சி.கந்தசாமி,
மனுதாரர்களின் சட்டத்தரணி.

(48760) (12.3.6)

பதிவாளர்,
பருத்தித்துறை,
மாவட்ட நீதிமன்று.

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் Dr.பொன்னையா யோகலிங்கம்

மலர்வு
21★05★1926

உதிர்வு
13★07★2004

ஆல விருட்சம் போல் வேரூன்றி
விழுது விட்டு கிளை பரப்பி
நிழல் தந்த எங்கள் அருமைத் தந்தையே!
விதி என்னும் அந்த இரண்டெழுத்து
உங்களை வேரொடு
சாய்த்து பத்தாண்டுகள் ஆனதுவே அப்பா
தரணியிலே நாம் வாழ தக்க வழி காட்டி சீராக
வாழ் வைத்த எங்கள் ஆருயிர் அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

18,பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
[00447961453036]
(49115)(4.6.3)

மகள்: திருமதி வி.யோகவதனி

## 14ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் வைத்தியகலாநிதி
கபிரியேல் ஜோர்ஜ்
(D.A.M,RIMP,J.P.)

அன்னை மடியில்
06.04.1930



ஆண்டவன் அடியில்
22.06.2000

"இறைவா என்னைக்காத்தருளும்
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்"
(திபா.16:1)

பூவுலகு விடைகொடுக்க பொன்னுலகை அடைந்து -புகழ்
மேலுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்
நீங்காத நினைவுகளால் நீர் மல்கும் விழிகளுடன்
தாங்காத மக்கள் உற்றார் உலகோர்
ஏங்காத நாளில்லை ஏன் பறந்தீர் எம்மைவிட்டு?
நீங்காத நோயகற்றும் தெவிட்டாத சேவையினால்
ஆண்டாண்டு போனாலும் ஆர் மறப்பார் அரிய தொண்டை
மாண்டாருள் மாணிக்கமே மகிமையெல்லாம் சேர்த்து வைத்தீர்
தூண்டாமணி விளக்காய் துயர்களெல்லாம் துடைத்தவனே
இறையின்பம் என்றென்றும் உன்னிடத்தில் நித்தியமாம்
குறையின்றி வாழ்வதற்காகக் கோயில் எல்லாம் கும்பிடுவோம்.


உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(45581)(5.6.3)

கபிரியேல் ஜோர்ஜ் வைத்தியசாலை,
Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்



மடத்தடி வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கெருடாவில், சாவ கச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் 19.06.2014 வியாழக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாச்சிப்பிள்ளை தம் பதியரின் பாசமிகு மகனும், காலஞ் சென்ற கந்தையா மற்றும் சின்னத்தங் கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன் புக் கணவரும், சிவயோகநாதன், சிவமதி, சிவனேந்திரன், சுதன், சிவபுஷ்பம், சிவகுமார், சிவஜீவன், சிவமகேசன், சிவநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சகுந்தலை, யோகலிங்கம், வாசுகி, பாலசுரபி, விஜயகுமார், விஜயலதா, துஸ்யந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், சிவறஞ்சனி, சிவதர்சினி, சிவதீபன், மதிகரன், மதுசிகா, அஸ்வின், அகர்சா, யஸ்மினி, கருணிகா, துர்க்கா, அக்சயா, அகர்சன், அஸ் வினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப.ஒரு மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

டச்சு வீதி,
சாவகச்சேரி.

(43668)
(12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 885 9996/076 644 3200

## சமய சந்நிதிகளில்

காரைநகர் களபூமி அருள் மிகு திக்கரை முருகன் ஆலயத்தின் மாம்பழத் திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள் ளது. காலை9.30மணி யளவில் வசந்த மண் டபப் பூசையைத் தொடர்ந்து விசேட மலர் அலங்காரத்து டன் வள்ளி தெய் வானை சமேத முரு கப் பெருமான் திரு வீதி உலா வருவார். மாலை 4 மணியள வில் மாம்பழத் திரு விழா இடம்பெறும்.(க)

◆◆◆

கொக்குவில் மாத்த னைக் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 23 ஆம் திகதி திங்கட் கிழமை கொடியேற்றத் துடன்ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 28 ஆம் திகதி மஞ்சத் திருவிழா வும், அடுத்த மாதம் 02 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், மறு நாள் 03 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 04 ஆம் திகதி வெள் ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (க)

◆◆◆

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய மகா கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நாளைதிங்கட்கிழமை காலை7மணிதொடக் கம் இடம்பெறும். பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமி கள் அருளுரை நிகழ்த் துவார். (ஒ-9)

◆◆◆

கச்சேரி நல்லூர் வீதி யில் அமைந்துள்ள நல்லூர் மூத்த விநா யகர் தேவஸ்தானத் தின்வருடாந்த மஹோற் சவம் எதிர்வரும் 25 ஆம்திகதி புதன்கிழமை 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பரத் திருவிழாவும் மறுநாள் வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திரு விழாவும் வெள்ளிக் கிழமை 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ)

## பொதுக் கூட்டம்

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத் தின் விசேட பொதுக் கூட்டம் இன்றுஞாயிற் றுக்கிழமை இரவு 7 மணிக்கு நிலையத் தலைவர் சி.சிவலிங் கம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் கல்விக் கழ கம், விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் அபிவிருத்தி சம்பந்த மாகவும்,ஆண்டுவிழா சம்பந்தமாகவும் கலந் துரையாடப்படவுள்ள தாக செயலாளர் தெரி வித்தார். ஒ-288)


## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
17.09.1938



ஆண்டவன் அடியில்
04.07.2013

அமரர் வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு
(BA, Special Trained in English, SLPS I முன்னாள் அதிபர்)
திதி : 22.06.2014 அபரபக்க ஏகாதசி

நினைவென்னும் அலை வந்து மோதும்
ஆறாது. ஆறாது நெஞ்சம் இது
அழுதாலும் தீராத துன்பம்
வேறாகி மாறாத பந்தம் - எங்கள்
விழி நீரே. நீ ஆடும் மஞ்சம்
நீறாகி நீர் வெந்த போதும்
நினைவென்னும் அலை வந்து மோதும்
ஆறாகி நீர் ஓடும் கரையில் அழுத
விழியோடு நாம் பார்த்து நிற்போம்

(49118)(12)(3.6)

"குமாரோதயம்" புகையிரதநிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மனைவி - சாந்தகுமாரி,
மகள், மருமகன்.

## மூன்றாமாண்டில் முகிழ்க்கும் நினைவுகள்

அமரர் திருவாட்டி
மகேஸ்வரி இராஜேந்திரம்
(சம்பந்தர் மிஸ்)



தோற்றம்
29 . 07 . 1925

மறைவு
22 . 06 . 2011

பொங்குந்தன் அறிவாலே புலமை யோடு
பொலிவுறவே கல்வியினைப் புவியி லூட்ட
செங்குந்தக் கல்லூரி சிறப்புற் றோங்க
சீராரும் பணிகளினை யுவந்தே செய்தீர்
எங்குந்தன் புகழ்பரப்பி எழிலார் வாழ்வை
இகநீத்தோர் மூன்றாண்டுகள் முழந்த போதும்
தங்குந்தன் நெஞ்சமுறை நினைவி னோடே
தரணியிலே வாழ்ந்திருப்போம் தகையும் சாந்தி!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

(C/10152)(4.6.3)

இல.30,
நெல்சன் பிளேஸ்
கொழும்பு-06

கலாநிதி
இ.செந்தில்நிதி
நாயன்மார்கட்டு

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
25 - 03 - 1954

உதிர்வு
03 - 07 - 2013

திருமதி
துரையம்மா மகாராசா

ஆலவிருட்சம் போல் வேரூன்றி விழுதுவிட்டு
கிளைபரப்பி நிழல் தந்த எங்கள் அருமை அன்னையே!
விதி என்னும் அந்த இரண்டெழுத்து உங்களை
வேரோடு சாய்த்து ஓராண்டு ஆனதுவே அம்மா
தரணியிலே நாம் வாழ தக்கவழி காட்டி சீராக வாழ வைத்த
எங்கள் ஆருயிர் அன்னையே! எங்கள் உள்ளத்தோடு
ஒன்றிவிட்ட உங்கள் நினைவுகள் எங்கள் உயிர் உள்ளவரை
நிலைத்திருக்கும் அம்மா ! உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

(45591)(5.6.3)

பளவத்தை,சமரபாகு,
வல்வெட்டித்துறை.

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### ஜீவகாந்தி ஜீவபாலன்

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜீவகாந்தி ஜீவபாலன் 18.06.2014 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் ஜீவகாந்தி காலஞ்சென்ற திருப்பதி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை (புத்திசாலி-சான்டோ, சில்லாலை)-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அன்ரனிஷா பெசியின் (UK) அன்புக் கணவரும், ரிச்சேட் அன்ரனி ஷான் (UK), றொமிலா நிலுக்ஷி (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவநேசன் (கனடா), ஜீவகுமாரன் (கனடா), ஜீவரூபன் (கொழும்பு), ஜீவலதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரியரோகினி (கனடா), ஈவிலின் சுகந்தினி (கனடா), கிறிஸ்ரீன் ஜெயநிதி (கொழும்பு), டெனிஸ் (கனடா), அன்ரனிற்றா வுளொஸ்சி (UK), அமிர்தராஜா (UK) ஆகியோரின் மைத்துனரும், யோசுவா மனோஜ் (கனடா), மைரா நியோமி (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும், ஜீவிக்கா (கனடா), ஜீவனோஜ் (கனடா), ஜீவாஸ் (கொழும்பு), ஜீவினி (கொழும்பு), அனிஸ்ரன் (UK), றோஸ்லின், அனிஸ்ரன் (UK) ஆகியோரின் பெரியப்பாவும், ஜெத்தோ (கனடா), யூதா (கனடா), அஞ்சலோவுளோரின் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரின் ஏழாலை இல்லத்தில் 21.06.2014 சனிக்கிழமையும் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமையும் வைக்கப்பட்டு, பி.ப 3.30 மணிக்கு இறுதி ஆராதனையின் பின் ஏழாலை தெற்கு C.A.C.M. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்:

(சி/14535)(10.6.3) மகன் (UK) - 00447417402065 / கொழும்பு - 0777 008279

## பருத்தித்துறையில் இன்று சிறப்புரை

யாழ்ப்பாணம், ஜூன் 22

பருத்தித்துறை ஞானாலயத்தில் இடம்பெற்று வரும் சித்தம் அழகியார் நிகழ்வில் இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு "தமிழர்களின் மக்கள் பெயரும் இடப்பெயரும்" என்னும் தலைப்பில் தமிழகத்தின் செம்மொழி ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் ஜெ.அரங்கராஜ் சிறப்புரை நிகழ்த்துவார். (ஒ-78)

## கைதடி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் இன்று மாலை நிகழ்வு

கைதடி, ஜூன் 22

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தினால் கனடா வாழ் கைதடி உறவான மாதர் சிவப்பிரகாசத்தின் அனுசரணையோடு வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு கைதடி வளர்மதி சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நட்புறவுக் கழகத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன. (ஒ-288-9)

## கல்வி மேம்பாடு தொடர்பான மாணவர் ஆய்வுக்களம் நாளை

வேலணை, ஜூன் 22

வேலணை மத்திய கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்வி மேம்பாடு தொடர்பான மாணவர் ஆய்வுக் களம், அமரர் அதிபர் ஏ.கே.கந்தையா அரங்கில் நடைபெறும். தேசிய கல்வி நிறுவன பட்டப்பின் கல்விக்கான யாழ்.பிராந்திய இணைப்பாளர் திருமதி தனலட்சுமி வில்வநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வாழ்த்துரையை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன்குயின்ரஸ் வழங்குவார். அதிபர் சி.கிருபாகரன் தொடக்கவுரையையும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு மதிப்பீட்டாளர் உரையையும் நிகழ்த்துவர். (ஒ)

## முகப்பு மாடம் திறப்பு விழா

நெல்லியடி மத்திய கல்லூரியின் முகப்பு மாடம் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் கலந்து கொள்வர். (ஒ-422)

## அடிக்கல் நடும் விழா

நெல்லியடி மத்திய கல்லூரியின் மஹிந்தோதய தொழில் நுட்ப பீடத்தின் அடிக்கல் நடும் விழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (ஒ-422)

## மரண அறிவித்தல்

### திருமதி நவமணி சடாச்சரம்



கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவமணி சடாச்சரம் 20.06.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்-இராசமணி தம்பதியரின் ஏக புதல்வியும், செல்லையா சடாச்சரத்தின் (ஓய்வுநிலை நீதிமன்ற முதலியார்) அன்பு மனைவியும், குகநேசன் (ஜேர்மனி), குகதாசன், காலஞ்சென்ற புவிராசசிங்கம் மற்றும் வாசுகிதேவி, இன்பலதா (பிரான்ஸ்), இன்பராணி (பிரான்ஸ்), குகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயந்தி (ஜேர்மனி) சுமதி (Dentel Surgeon Bh/ Chavakachcheri), சுகிர்தமலர் (பிரான்ஸ்), பாலசந்திரன் (ஓய்வு நிலை முகாமையாளர், மக்கள் வங்கி), தெய்வேந்திரன் (பிரான்ஸ்), சிறிகஜேந்திரா (பிரான்ஸ்), சர்மிளா (லண்டன்) ஆகியோரின் மாமியும், கௌசிகா, மயூரதன், அர்ச்சனா, அனந்தி, மருதிகா, கேவின், காலஞ்சென்ற ஸ்ரீபன் மற்றும் ஜனிக், தர்மிகா, நிருபராஜ், பாலஇளந்திரையன், இளங்கோவன், ஆர்த்திகா, சிறிபவன், மதுஷன், வனஜன், மதுஷிகா, பத்மஜன், கஜானன், திவானி பிருந்தாபன், நவீகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2014) திங்கட்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பாலாவித்தாள் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : செல்லையா சடாச்சரம்
(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்)
குடும்பத்தினர்.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (C/10156)(10.6.3) T.P: 021 2050 395, 077 443 8663

## மரண அறிவித்தல்கள்

### Dr.Mrs.ரதிதேவி ஆனந்தசாகரன்



யாழ்.கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. Mrs. ரதிதேவி ஆனந்தசாகரன் 21.06.2014 சனிக்கிழமை அமெரிக்காவில் இறைவனடி எய்தினார்.

அன்னார் நமசிவாயம் ஆனந்தசாகரனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான C.அருளம்பலம் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்-நல்லூர்)-பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும், நமசிவாயம் தம்பதியரின் மருமகளும், ஜெகன், ஜீவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமெரிக்காவில் வசிக்கும் சிவராஜா, சிறிஸ்கந்தராஜா, சிவானந்தன், சிவதாசன், மலர்வதினி, சிவகுமார், மேனகா, பொன்ராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு.திருமதி E.S.S. சின்னத்துரை அவர்களின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2014) திங்கட்கிழமை அமெரிக்கா சியட்டலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
30, ஹேக் வீதி, கொழும்பு 4
தொ.பே: 011 2580 532
Mr.சின்னத்துரை சரவணபவான் (மாமா)

### பூதன் சின்னத்துரை



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பூதன் சின்னத்துரை கடந்த (18.06.2014) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதன்-கதிரி தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ராமன், வள்ளி, சின்னம்மா மற்றும் கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சூரியகலா, குணசிங்கம் (லண்டன்), சந்திரகலா, உதயகலா, ஜெயசிங்கம், விஜயகலா, சுகிர்தகலா, தனசிங்கம் (லண்டன்) ஆனந்தகுமார் (மலேசியா), றஜிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
கைதடி மேற்கு, கைதடி. (49140)(10.6.3) குடும்பத்தினர்.

### திருமதி ஈஸ்வரி சோமசுந்தரம்



நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் 76, முருகமூர்த்தி வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி சோமசுந்தரம் நேற்று முன்தினம் (20.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49136)(4.6.3)

தகவல்:
76, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
மகன்: சோ.ஜெயராசா
மகள்: பா.ஜெயதேவி

### திருமதி மரகதம் தங்கராசா



முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரகதம் தங்கராசா நேற்று (21.06.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்வி ஆகியோரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற தங்கராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம், சின்னத்துரை, நல்லையா, கந்தப்பிள்ளை, செல்லையா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பிள்ளையம்மாவின் மைத்துனியும், செல்லம்மா, அன்னலட்சுமி, பரஞ்சோதி (சட்டத்தரணி - முல்லைத்தீவு), மனோகரி, சுப்பிரமணியம், கணேசலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), தில்லைநடராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், தனபாலசிங்கம், நாகராசா, விக்னேஸ்வரி, சிவலிங்கம் (கிராமசேவையாளர் - தண்ணீரூற்று கிழக்கு), வக்சலாதேவி, சாந்தினி (கல்வி அமைச்சு - வடமாகாணம்), வனிதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 3ஆம் வட்டாரம் முள்ளியவளையிலுள்ள அவரது மகன் த.பரஞ்சோதி அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாவற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம், முள்ளியவளை. தகவல்:
021 2061041 (49135)(45.6.3) குடும்பத்தினர்

## உடனடியான வேலை வாய்ப்புக்கள்

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜாம்/கோடியல்/பிஸ்கட்/பால்மா/யோகட்/செலட்/PVC/கிளவுஸ்/பொலித்தீன்/காமெண்ட்/சோயா/பெயின்ட்/இறைச்சி/வாசனைத்திரவியம்/Printing / cargills போன்ற தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல்/தரம்பிரித்தல்/களஞ்சியப் பிரிவுக்கு. 18-50 வயது ஆண், பெண் தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில். சம்பளம் 19000/=, 25000/=, 35000/= வரை.

(43352)(12.3.6) தொடர்பு: 077 111 6770



## கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்

இடம் மாற்றுவதை முன்னிட்டு 15.06.2014 முதல் இருப்பகற்றல்.
கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393



## குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

**ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்**

உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818

## பணிப்பெண் தேவை

நன்கு சமையல் தெரிந்த வீட்டுப்பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 802 9725

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

C.D 200 HONDA, 148- XXXX நல்ல பாவனையிலும் மீள் சுத்திகரிக்கப்பட்டதுமான வாகனம் குறைந்த விலையில் உள்ளது.
தொடர்பு: 077 774 6855, 077 563 4008

## கடை வாடகைக்கு

சுன்னாக நகர் மத்தியில் கடை வாடகைக்கு உண்டு (3ஆம் மாடிக் கடை 1200 சதுர அடி)
தொடர்பு: 077 385 4623 (49132)(12.3.6)

## பணிப்பெண் தேவை

சமையலுக்கும் ஒரு நோயுற்ற அம்மாவுக்கு உதவவும் இரவிலும் தங்கியிருக்கக்கூடிய ஒரு பணிப்பெண் தேவை.
தொடர்பு: கண்ணன், 244/4, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (49134)(12.3.6)

## காணிகள் விற்பனைக்கு

கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கும் இராமாவில் கந்தசாமிகோயிலுக்கும் இடையில் A9 வீதியில் காணிகள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 460 5329 (49126)(45.8.3)

## கடை விற்பனைக்கு/வாடகைக்கு

யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள யாழ். மாநகரசபை கடைக் கட்டடத் தொகுதியில் தரைத் தளத்தில் 43அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு.
(சி10159)(12.3.6) தொடர்பு: 077 361 1282

## காணி விற்பனைக்குண்டு


ஆஸ்பத்திரி வீதியில், சத்திரச் சந்திக்கு அருகில் சதுர வடிவமுள்ள 1½ நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சி10158)(12.3.6) தொடர்பு: 077 361 1282

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் 3 பேர் கொண்ட சிறிய தமிழ்க் குடும்பத்திற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.
சம்பளம் 15,000/=
(41293)(12.3.6) தொடர்பு: 077 251 3699

## நிரந்தர தொழில் வாய்ப்பு

18-50வயது ஆண்/பெண் இருபாலாருக்கும் தொழில் வாய்ப்பு. சம்பளம் 19000/=, 38000/= (தொழில் அடிப்படையில்) கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜாம்/கோடியல்/பிஸ்கட்/செலட்/PVC/கிளவுஸ்...போன்றவற்றுக்கு உற்பத்தி, லேபல், பொதியிடல், தரம்பிரித்தல் பிரிவுக்கும் மற்றும் தனியார் துறைமுகம், விமான நிலையம், தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள். பல வெற்றிடமுண்டு. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். (நண்பர்கள், குழுவினர், தம்பதியினர் ஒரே இடங்களில் வேலை செய்யலாம்)
(43352)(12.3.6) தொடர்பு: 077 556 1883



## பஸ்சேவை
## சிங்ககிரி ரான்ஸ் போட்
## யாழ்ப்பாணம்-கதிர்காமம்

யாழ்ப்பாணத்திலிருந்து மகியங்கனை, மொனறாகலை ஊடாக கதிர்காமத்திற்கான தினசரி பஸ்சேவை.

- யாழ் புறப்படும் நேரம்: மாலை 3.50 மணி
- கதிர்கா மத்திலிருந்து புறப்படும் நேரம் இரவு 11.00 மணி

கட்டணம் 943/=

யாழ். ஆசனப் பதிவுகளுக்கு வரணி ஆசனப்பதிவகம்
T.P. 021 222 2868, 021 490 0955, 077 604 8921
கதிர்காமத்தில் ஆசனப்பதிவுக்கு: ரோகித்த - 072 8382140

## விற்பனை ஊக்குவிப்பு வெளிக்கள உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மொழித் தேர்ச்சி விரும்பத்தக்கது.

கல்வித் தகைமை : க.பொ.த.உயர்தரம்.
சாரதி அனுமதிப் பத்திரம் : கட்டாயமானது.
வயதெல்லை : 20 வயது தொடக்கம் 30 வயது வரை.
விண்ணப்ப முடிவு திகதி : 25.06.2014

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

வி.இல. 4501, மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## VISIT VISA

- சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கல, அமங்கல காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- பெற்றோர், பேரன், பேர்த்தியர்களுக்கான சுப்பர் விசா - கனடா, மணமான தம்பதியருக்கான வதிவிட விசா - சகல நாடுகளுக்கும்.



ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**தாமதமாகிய விசாக்கள் - நிராகரிக்கப்பட்ட விசாக்கள் உள்ளனவா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சினை உள்ளதா?**

Refused? Rejected?

- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் விசா முடிந்ததும் இலங்கைக்குத் திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்புப் பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் அது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.
- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- விசா விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- Ticket, Hotel Booking, Travel Insurance செய்து தரப்படும்.
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

## வங்கியில் பணவைப்பு

*Savings Book, Fixed Deposit, Statement*

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

## உங்களின் விசா எங்களின் சவால்

Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals New Applications etc...

**SKYWALK** Visa Solutions

## SKYWALK VISA SOLUTION

No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)
Web: www.skywalk.com

Hotline: 0777 711 905

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பாதுகாப்பு

சந்திப்பு இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்றஉறுப்பினருமானசுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

போரின் பின்னரான மக்களின் மீள்குடியமர்வு, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, மாகாண சபை அதிகா ரங்கள் ஆகியன தொடர்பில் ஐ.நா. உதவிச் செயலர் பல்வேறு விடயங்களை எம் முடன் பேசினார்.

இது தொடர்பில் பல்வேறு கேள்விகளை அவர் எம்மிடம் கேட்டார். அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முழுமையான பதில் வழங்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு நிலைமை

வடக்கு - கிழக்கில் போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை. அவர்கள் நலன்புரி நிலையங்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களது சொந்த நிலங்கள் இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் என்று கையகப்படுத்தப் பட்டிருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் இராணுவப் பிரசன்னம் என்பதற்கு அப்பால், இராணுவ ஆட்சியே அங்கு நடைபெறுகின்றது. ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் குறித்த மாகாணங்களில் மாத்திரம் குவிக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கு மேலதிகமாக வடக்கின் ஆளுநராக, போரை வழி நடத்திய தளபதியே நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியல் தீர்வு

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இலங்கை அரசு எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும்எடுக்கவில்லை. 18 சுற்றுப் பேச்சுக்கள் இலங்கை அரசுடன் நாம் நடத்தினோம். பல்வேறு தீர்மானங்களில் அரசு உடன்பட்டிருந்தாலும் எவற்றையும் நடைமுறைப்படுத்தவில்லை. எனவே இந்த அரசுடன் சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் பேசுவதால் பயனில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக இனப்பிரச்சினைத் தீர்வு காணப்படமாட்டாது. இலங்கை அரசு தொடர்ச்சியாக ஏமாற்றி வருவதன் காரணமாகத் தமிழ் மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

வடக்கு மாகாணசபை

வடக்கு மாகாணசபையை இலங்கை அரசு செயற்படுத்த விடாமல் தொடர்ச்சியாக முட்டுக்கட்டைகள் போட்டுக் கொண்டுள்ளது. மாகாண சபையின் பிரதம செயலாளரை மாற்றுவதற்குக் கூட இதுவரையில் இலங்கை அரசு சாதகமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மேலும் வடக்கு மாகாண சபையின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போதும், அவர் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சந்திப்பின் போது ஐ.நா உதவிச் செயலரிடம் குறிப்பிட்டார், என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (த-5)

## வன்முறைகளை

இலங்கையில் இடம்பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் மிகவும் கவலையளிக்கின்றன.இந்த வன்முறைகளைத் தூண்டியவர்களைப் பொறுப்புக்கூற வைக்க வேண்டியது இலங்கை அரசின் கடமை.

அத்துடன், சிறுபான்மையினர் மற்றும் வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாக்கவேண்டியதும் இலங்கை அரசின் கடப்பாடாகும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். (த-5)

## அளுத்கம

விடயம் தொடர்பில் எழுத்து மூலமான அறிக்கையை, அரச உயர்மட்டத்திலிருந்து ஐ.நா. உதவிச் செயலர் கோரியுள்ளார். இருப்பினும் ஐ.நாவினால் கோரப்பட்ட அறிக்கையை வழங்குவது தொடர்பில் அரச உயர்மட்டம் இன்னமும்தீர்மானிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## முஸ்லிம்கள்

இதன் பின்னர் குறித்த பிரதேசங்களில் அமைதியின்மை தோன்றியிருந்ததுடன், பொலிஸாரினால் இரு நாள்கள் ஊரடங்குச் சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறத் தொடங்கியிருந்தன.

கடந்த இரு தினங்களில் மாத்திரம் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் 5 இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முஸ்லிம் தொழுகை அறை மீது கழிவு ஒயில் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் நாவாந்துறையில் அமைந்துள்ள பள்ளிவாசல் மீது கல்வீச்சு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக அமைந்துள்ள முஸ்லிம் வர்த்தக நிலையத்தின் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சிங்கள இளைஞர்களால், கடையின் உரிமையாளரான முஸ்லிம் வர்த்தகர் தாக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கண்டியிலுள்ள பள்ளிவாசல் மீது இனந்தெரியாதோர் கல்வீச்சு நடத்தியுள்ளனர். அத்துடன் நேற்று அதிகாலை, பாணந்துறையிலுள்ள மிகப்பெரிய முஸ்லிம் வர்த்தக நிலைய மான 'நோலிமிட்' தீயினால் முற்றாக எரிந்து சாம்பராகி யுள்ளது.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்பட வில்லை. இதேவேளை, மத வன்முறைகள் தொடர்பில் விசாரணை செய்யும் விசேட பொலிஸ் பிரிவுக்கு இதுவரை 52 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (த-5)

## முஸ்லிம்

மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில், வர்த்தக நிலையத்தின் பிறிதொரு அறையில் 7 ஊழியர்கள் உறங்கிக் கொண்டிருந்துள்ளனர். இருப்பினும் அவர்கள் தெய்வாதீனமாக சிரமப்பட்டு வெளியேறித் தப்பியுள்ளனர்.

ஏற்கனவே முஸ்லிம்களுக்கு எதிராகக் கலவரம் இடம்பெற்ற களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறைபிரதேசம் அமைந்துள்ளது. இங்கு முஸ்லிம் மக்களே அதிகளவில் வசித்து வருகின்றனர். பாணந்துறை பிரதான வீதியில் 'நோலிமிட்' காட்சியகம், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இரு மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடம், காட்சியறை மற்றும் களஞ்சியம் என்பவற்றைக் கொண்டமைந்துள்ளது.

வழமை போன்று நள்ளிரவின் பின்னர் காட்சியறை மூடப்பட்டுள்ளது. அதிகாலை 3.15 மணியளவில் திடீரெனக் காட்சியறையில் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. இதன்போது அங்கு தங்கியிருந்த ஊழியர்கள், தீயணைப்புப் படையினருக்கு உடனடியாகவே தகவல் கொடுத்தனர். தகவல் கொடுக்கப்பட்டு இரு மணி நேரத்தின் பின்னர், காலை 5 மணிக்கே தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்துள்ளனர். அதற்கிடையில் வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது. பல கோடி ரூபா பெறுமதியான சொத்திழப்பு ஏற்பட்டுள்ளபோதும், நோலி மிட் நிர்வாகம் இதுவரையில் உத்தியோகபூர்வமாக எவ்வ ளவு சொத்திழப்பு ஏற்பட்டது என்பதை அறிவிக்கவில்லை.

வர்த்தக நிலையத்தில் தீ ஏற்பட்டதை அறிந்து காலையிலேயே முஸ்லிம் மக்கள் அந்தப் பகுதியில் கூடத் தொடங்கினர். இதனால் பிரதான வீதியில் பதற்றமான சூழ்நிலை உருவாகியது. சிறிது நேரத்தில் விசேட அதிரடிப் படையினர் அந்தப் பகுதிகளில் குவிக்கப்பட்டனர். விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே அந்தப் பிரதேசம் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்ற அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், ரெஜினோல்ட் குரே, ஏ.எச்.எம். பௌஸி ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

வர்த்தக நிலையத்தின் கூரை மீது ஏறிவந்தே காட்சியறைக்குத் தீ வைக்கப்பட்டதாக அந்தப் பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றபோதும் அதனைப் பொலிஸார் உறுதிப்படுத்தவில்லை. அதேவேளை, காட்சியறை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் தீயில் எரிந்துள்ளது.

இது தொடர்பாகப் பொலிஸார் விரிவாக விசாரணை நடத்துவதாகவும் இது மின்சார ஒழுக்கால் ஏற்பட்ட தீ அனர்த்தமா அல்லது சதியா என்று தற்போது கூறமுடியாது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இதேவேளை இது பற்றி விசாரணை நடத்துவதற்காக உயர்மட்ட விசாரணைக் குழுவொன்றை அமைக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மிகப் பிரபலமான ஆடை விற்பனை நிலையங்களில் ஒன்றான 'நோலிமிட்' நிறுவனத்தில் 5 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் 2 ஆயிரத்து 500 சிங்கள ஊழியர்களும், 2 ஆயிரத்து 500 தமிழ் ஊழியர்களும் பணிபுரிகின்றனர். முஸ்லிம் ஒருவரே இந்த நிறுவனத்தின் உரிமையாளராகவுள்ளார். அவர் தற்போது மலேசியாவுக்குக் குடும்பத்துடன் சென்று தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த 15 ஆம் திகதி இதே மாவட்டத்திலுள்ள தர்ஹா நகரில் முஸ்லிம்கள் மீது, சிங்களவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் அழிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஐ.நா.

துள்ளது. இந்த விசாரணையின்போது, இலங்கை அரசினாலும், அதன் இராணுவத்தினராலும் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சாட்சியமளிப்பதற்குத் தயாராகவுள்ளனர்.

ஆனால் இலங்கை அரசு, ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மறுத்துள்ளதுடன், சாட்சியமளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளது. இலங்கையின் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, சாட்சியமளிப்பவர்கள் எதிரிகளாகக் கருதப்பட்டுத் தண்டனை வழங்கப்படும் என்று எச்சரித்திருக்கின்றார்.

எனவே, ஐ.நா விசாரணையில் சாட்சியமளிக்கக் காத்திருக்கும் தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். அதற்குரிய ஏற்பாடுகள் ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று வலியுறுத்தினர். இருப்பினும் ஐ.நா உதவிச் செயலர் இது தொடர்பில் எது வித பதிலும் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐ.நா உதவிச் செயலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றும் அவருடன் மீண்டும் கலந்துரையாடல் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பொது பல

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டம் கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே, முஸ்லிம் அமைச்சர்களின் கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

களுத்துறை மாவட்டம், அளுத்கம வன்முறைகளுக்குக் காரணமான பொது பல சேனாவைத் தடை செய்யவேண்டும் என்று அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் ஆகியோர் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொது பல சேனாவைத் தடை செய்யமுடியாது என்றும், அவ்வாறு செய்தால் அவர்கள் கதாநாயகர்களாகி விடுவர் என்றும் குறிப்பிட்டார். அடிப்படைவாத அமைப்புகளைத் தடை செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், அதன் மூலம் மதங்களுக்கிடையிலான பிரச்சினை முடிந்துவிடும் என் பதற்கு உத்தரவாதம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியலமைப்பை மோசமாக மீறும் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்திருந்தாலும் கூட, அத்தகைய செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருக்காது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (த-5)

**கடை வாடகைக்குண்டு**

பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டை, கல்வியங்காடு என்ற முகவரியிலுள்ள வீட்டுடன் கூடிய கடை வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொ.பே:021 223 0390/071856 5298
(49186)(5.6.3)

**பசு மாட்டைக் காணவில்லை**

✱கட்டைக் கொம்பு, மாவெள்ளை பசு மாடு கன்றுத்தாச்சி பச்சைப்பட்டுக் கட்டப்பட்டது.

✱சிவப்புநிற பசுமாடு கொம்பு வளைந்தது பச்சைப் பட்டுக் கட்டப்பட்டது.

தொ.பே: 077 885 9058

**SB TRAVELS & TOURS (PVT) LTD** SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 16,450/- | LONDON | 91,799/- |
| TRICHI | 22,200/- | MALDIVES | 17,900/- |
| CHENNAI | 21,900/- | PARIS | 82,099/- |
| BOMBAY | 28,500/- | TORONTO | 176,999/- |
| BENGALURU | 29,199/- | NEW YORK | 129,999/- |
| KOCHI | 22,199/- | MELBOURNE | 109,999/- |
| DELHI | 39,599/- | PERTH | 109,999/- |
| MALAYSIA | 25,600/- | CANTON | 69,699/- |
| SINGAPORE | 29,600/- | NARITA | 68,999/- |
| BANGKOK | 30,799/- | AUCKLAND | 130,900/- |
| SYDNEY | 109,999/- | | |

VISA MASTER American Express Card Accepted

INDIAN, BANGKOK MALAYSIA VISA ARRANGEMENT

If you want any country air tickets please call our office number

0771083480, 0771083482, 0771083481, 0771083483
0766911085, 0766911086, 0766911089, 0766911090

No. 15, JAMPETTAH STRTEET, COLOMBO - 13.
Tel: 00942446666, 2333322, 2540280

**BANGKOK TOUR**
- 3 Night Accommodations
- Daily American Breakfast
- City and Temple Tours
- Sightseeing on SIC Basis
- All airport and Hotel Transfers

From: Rs.12,000 Per Person on double Sharing



**KUALA LUMPUR TOUR**
- 3 Night Accommodations
- Daily Breakfast
- Kuala Lumpur City Tour
- Sightseeing on SIC Basis
- All Airport and Hotel Transfers

From: Rs.15,200 Per Person on double Sharing



HOTLINE: 0766911080 0766911083

Email: sbtours23@gmail.com

**SB Travels and Tours Pvt Ltd**
No. 324, Aluthmawatha Road, Colombo-15. Tele: +94 2446666, +94 2444800
ALL WORLD WIDE TOURS, TICKETS, VISA AND TRAVEL ARRANGEMENTS, TRAVEL INSURANCE

## மரண அறிவித்தல்



அழைப்பின் குரல் கேட்டேன்- என
ஆண்டவர் என உணர்ந்தேன்

### மத்தியாஸ் வென்சிலஸ்(ராசு)

திருகோணமலை புனித அந்தோனியார் பதியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியை வாழ்விடமாகவும் கொண்ட மத்தியாஸ் வென்சிலஸ் (ராசு) நேற்றுமுன்தினம் (20.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரிதிரேசாவின் அன்பு கணவரும், யாலின் யசிந்தா (பின்லாண்ட்),ஆன்சலின் சுதா சுபாசினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கிழக்கு மாகாணம்),யான்சி,அலன் (மின்னியல் உதவியாளர், கிழக்கு மாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சுதா கோமகன் (பின்லாண்ட்), வின்சன்,உதயராசா (மேற்பார்வையாளர்,மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு மாமனும், நிருஜிகா, றிஸ்ரோ ஆகியோரின் பேரனும் அந்தோனிப்பிள்ளை (சுவிஸ்), ஸ்கொலஸ்ரிக்கா புஸ்பவதி, அன்ரனி அல்பிரெட் (கிராமசேவை அலுவலர்,திருகோணமலை மாவட்டம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,கிளாறம்மாவின் பாசமிகு சகோதரனும்,அஞ்சலா (கனடா)வின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைக்காக நாளை (23.06.2014) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.தோமஸ் ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல்: சி.ஜோ. கொன்விக்ரர் (குணம்)
ம.கிளாறம்மா.

## மரண அறிவித்தல்



### திருமதி அருந்தவம் தர்மராசா

கைதடி நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருந்தவம் தர்மராசா நேற்று (21.06.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம்- திலகவதி தம்பதியரின் அன்பு மகளும், தர்மாராசாவின் அன்பு மனைவியும், பத்மநாதன் (ஜேர்மன்), அன்புச் சகோதரியும், சரண்யா, நிருசா, நிரோசன்(இத்தாலி), லக்சிகா, மயூரி ஆகியோரின் அன்புத் தாயும், அயந்தன், இராச்சின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குச்சப்பிட்டி இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# அடுத்த சுற்றில் கோஸ்டாரிக்கா இத்தாலி அதிர்ச்சித் தோல்வி



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இத்தாலியை கோஸ்டரிக்கா 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதி-16 சுற்றுக்குள் நுழைந்தது. இதனால் இங்கிலாந்து உலகக் கிண்ண அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது.

கோஸ்டரிக்கா அணியின் பிரையன் ரூய்ஸ் 44ஆவது நிமிடத்தில் அடித்த கனவு கோலே பிறகு வெற்றிக்கான கோலாகவும் மாறியது.

இத்தாலி வெற்றி பெற்றால்தான் இங்கிலாந்துக்கு வாய்ப்பு இருந்தது.

இப்போது இத்தாலி, உருகுவே மோதும் போட்டி முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதில் எந்த அணி வெற்றி பெறுகிறதோ, அந்த அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறும்.

முதல் போட்டியில் இத்தாலி இங்கிலாந்தை வீழ்த்த, உருகுவேயை 3-1 என்று அதிர்ச்சித் தோல்வியுறச் செய்தது கோஸ்டரிக்கா. இவ்வளவு ஆண்டுகளாக உதைபந்தை உயிர் மூச்சாகக் கருதி ஆடி வரும் இங்கிலாந்து வெளியேற, 4ஆவது உலகக் கிண்ணத்தில் ஆடிவரும் கோஸ்டரிக்கா இரண்டாவது முறையாக அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தகுந்த சாதனையாகும்.

முதல் பாதியில் அன்று இங்கிலாந்தின் கனவைத் தகர்த்த இத்தாலி வீரர் பலோடெல்லி கோஸ்டரிக்கா அணிக்கு எதிராக ஒரு கோல் வாய்ப்பைத் தவற விட்டார். இந்த ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர இத்தாலி சொல்லிக் கொள்ளும்படியான எந்தவித முன்னேற்றத்தையும் செய்துவிடவில்லை.

32ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் ஆண்ட்ரியே பிர்லோ கொடுத்த பந்தை பலோடெல்லி கோலாக மாற்றியிருந்தால் ஆட்டத்தின் போக்கு வேறு விதமாக மாறியிருக்கும். மேலும் கோஸ்டரிக்காவுக்கு முதல் பாதியில் கிடைக்க வேண்டிய கட்டாய பெனால்டி சிலி நடுவரால் மறுக்கப்படுகிறது. இது நிச்சயம் பெனால்டி கொடுக்கப்படவேண்டிய முறை தவறிய தடுப்பாட்ட உத்திதான் என்பது தெரியவந்தது.

ஆட்டத்தின் 44ஆவது நிமிடத்தில் கோஸ்டரிக்கா வீரர் ஜூனியர் டயஸ் இடது பக்கத்திலிருந்து ஒரு உதையை உதைக்க சியெலினி மற்றும் மத்தியோ டார்மியன் இடையே புகுந்த கோஸ்டரிக்கா வீரர் ரூயிஸ் தலையால் முட்டி கோலுக்குள் தள்ளினார். கோல் லைன் தொழில் நுட்பம் இது கோல்தான் என்று உறுதி செய்தது.

ஒவ்வொரு முறை இத்தாலி வீரர் பலோடெல்லியிடம் பந்து செல்லும் போதும் கோஸ்டரிக்கா வீரர் கியான் கேரியோ கொன்சாலஸ் அவரை தடுத்து நிறுத்தினார். இது பலோடெல்லிக்கே வெறுப்பை வரவழைத்தது. மேலும் கோஸ்டரிக்கா வீரர் டயஸை முறை தவறி எதிர்கொண்டதற்காக அட்டை வேறு காண்பிக்கப்பட்டார் பலோடெல்லி. அவரது நாளாக இது அமையவில்லை.

கடைசி விசில் ஊதப்பட்டபோது கோஸ்டரிக்கா பயிற்சியாளர், வீரர்கள், ரசிகர்கள் எழுச்சியுற, தங்கள் விரல்கள் வழியே இங்கிலாந்து ரசிகர்கள் சோகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். (த)

## வென்றது ஈக்குவடோர்

ஹொண்டுரஸ் அணிக்கு எதிரான உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியில் ஈக்குவடோர் அணி வெற்றி பெற்றது.

பிரேஸிலில் உலகக் கிண்ண உதை பந்தாட்டத் தொடர் நடக்கிறது. இதன் இ பிரிவு லீக் போட்டியில் ஈக்குவடோர் அணி, ஹொண்டுரஸ் அணியை எதிர்கொண்டது.

போட்டியின் முதல் பாதியின் 31ஆவது நிமிடத்தில் ஹொண்டுரஸ் வீரர் காஸ்லி முதல் கோல் அடித்தார்.

இதற்கு ஈக்குவடோர் அணியின் வாலன்சியா உடனடியாகப் பதிலடி கொடுத்தார். இதன் மூலம் முதல் பாதியின் முடிவில், போட்டி 1-1 என சமநிலை வகித்தது.

பின் விறுவிறுப்பாக தொடங்கிய இரண் டாவது பாதியின் 65ஆவது நிமிடத்தில் ஈக்குவடோர் அணியின் வால்சியா ஒரு கோல் அடித்தார்.

இதற்கு கடைசிவரை போராடிய ஹொண்டுரஸ் அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

இறுதியில் ஈக்குவடோர் அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஹொண்டுரஸ் அணியை வீழ்த்தியது. (த)




## சுவிஸை வீழ்த்தியது பிரான்ஸ்



சுவிட்சர்லாந்து அணிக்கு எதிரான உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியில் பிரான்ஸ் அணி வெற்றி பெற்றது.

பிரேஸிலில் 20ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. இதன் இ பிரிவில் நடந்த லீக் போட்டியில் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து அணியை எதிர்கொண்டது.

ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பிரான்ஸ் அணிக்கு போட்டியின் 17ஆவது நிமிடத்தில் கிரோர்ட் முதல் கோல் அடித்தார். இந்த அதிர்ச்சியில் இருந்து சுவிட்சர்லாந்து வீரர்கள் மீள்வதற்குள் மின்னல் வேகத்தில் செயல்பட்ட மற்றொரு பிரான்ஸ் வீரர் மாடுடி அடுத்த நிமிடத்திலேயே (18ஆவது நிமிடம்) இரண்டாவது அடி கொடுத்தார். தொடர்ந்து அசத்திய பிரான்ஸ் அணிக்கு வால்பியூனா மூன்றாவது கோல் அடித்தார். முதல் பாதியில் சுவிட்சர்லாந்து அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

பின் விறுவிறுப்பாகத் தொடங்கிய இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த பிரான்ஸ் அணிக்கு பென்சிமா, சிசோகோ ஆகியோர் இரண்டு கோல் அடித்து வலுவான முன்னிலை அளித்தனர்.

கடைசிவரை போராடிய சுவிட்சர்லாந்து அணிக்கு ஜிமாயிலி, ஜாகா ஆகியோர் இரண்டு கோல் மட்டும் அடித்து ஆறுதல் அளித்தனர். ஆட்டநேர முடிவில், பிரான்ஸ் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த)

## மரண அறிவித்தல்



### கந்தையா நமசிவாயம்

நெடுந்தீவு மேற்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் 2ஆம் கட்டை முரசுமோட்டை கூமாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது பின் லாந்தினை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நமசிவாயம் கடந்த (11.06.2014) புதன்கிழமை பின்லாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பாலாம்பிகையின் பாசமிகு கணவரும், ஞானலோசினி (காவேரி- கனடா), அன்பரசி (அன்பு - சுவிஸ்), வாமதேவன் (தேவன்- சுவிஸ்), காலஞ்சென்ற சிறீதரன்,நித்தியானந்தன் (ரவி- கனடா),கெங்கநாதன் (நாதன்- பின்லாந்து), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் தனுஸ்கோடி, பொன்னம்பலம், வேலுப்பிள்ளை, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருஞானசம்பந்தன் (திருனா-கனடா), மதியழகன் (மதி-சுவிஸ்),வினோதினி (வினோ-சுவிஸ்),ஜெகதீஸ்வரி (விஜி-கனடா) சறோஜினி (சறோ- பின்லாந்து), தனேஸ்வரன் (தனேஸ்- லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (23.06.2014) திங்கட்கிழமை பின்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புக்கு: 077 7042517

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கந்தையா மாதவர்

(இளைப்பாறிய இராணுவ சார்ஜன்ட்)

சுழிபுரம் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட இளைப்பாறிய இராணுவ சார்ஜன்ட் கந்தையா மாதவர் நேற்று (21.06.2014) சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னம்மா (ஆச்சிக்குட்டியின்) பாசமிகு சகோதரனும், விஜய கலாவின் பாசமிகு தந்தையும்,முருகமூர்த்தி (சாமியின்) மாமனும், மிருந்தலா, சசிகலா,கலிகரன்,கலிகிருஷ்ணா, சேயழகன்,சங்கமிதா ஆகியோரின் அன்பு மிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் வடக்கு,சுழிபுரம். (0779160437)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி சீதாதேவி துரைச்சாமி

இல.04, ஸ்ரான்லி கல்லூரி வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீதாதேவி துரைச்சாமி 20.06.2014 வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்து துரைச்சாமியின் (ஓய்வுபெற்ற பொது முகாமை யாளர், மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சோமசுந்தரம்-சுந்தரம் தம்பதியரின் செல்வப் புதல்வி யும், நாகமுத்து-ரத்தினம் தம்பதியரின் மருமகளும், திலீபன் (யாழ். தபால் திணைக்களம்), பகீரதன் (இலங்கை மின்சார சபை), சஞ்ஜீவன் (இலங்கை மின்சார சபை) ஆகியோரின் பாசமிகு தாயும், யசிந்தாவின் (முன்பள்ளி ஆசிரியர்), அன்பு மாமியும், தேஜக்ஷினியின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர் களான பரமேஸ்வரி, தம்பிராஜா மற்றும் கனகராஜா, புனிதம்மா, சரோஜினிதேவி, வரதராசா, பத்மாவதி, புவனேந்திரராஜா, ராஜீ ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, முருகையா மற்றும் கமலாதேவி, நடராஜா, சிவலிங்கம், இந்திராணி, ஸ்ரீநந்தினி, குமாரசாமி, காலஞ்சென்ற சிவசாமி மற்றும் செல்வராஜா, சற்குணராஜா, லிங்கேஸ்வரி, சர்வேஸ்வரி, சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்து பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


04, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை.
தொடர்பு: 021 2219 605, 077 4484 613

(49265) (10)

தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அருட் சகோ. விமலதாசன் செ.தா



என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் உயிர்வாழ்வான் (யோ.11:25)

செபமாலைதாசர் சபையைச் சார்ந்த அருட் சகோதரர் விமலதாசன் நேற்று (21.06.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தேவதாஸ்- அன்னப்பிள்ளை கிருபை தம்பதி யரின் மகன் ஆவார்.

இவரது உடலம் தற்பொழுது அஞ்சலிக்காக இல. 05, கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் (குழந்தை இயேசு கோவில்) வைக்கப்பட்டுள்ளது.

இவரது இறுதி அஞ்சலி நிகழ் வுகள் நாளை (23.06.2014) திங் கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் (யாழ். ஆயர்) தலைமையிலான கூட்டுத்திருப் பலியின் பின், அச்சு வேலியில் அமைந்துள்ள செப மாலை தாசர் ஆச்சிரமத்துக்கு (அன்பகம்) கொண்டு செல்லப் பட்டு இவரது உடலம் அங்கு வைக்கப்படும். மாலை 3 மணிக்கு மற்றுமொரு கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அங்கேயே நல்லடக்கமும் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: செபமாலை தாசர் சபையினர்.
அருள் ஆச்சிரமம்
இல. 5, கோவில் வீதி (குழந்தை இயேசு கோவில்),
யாழ்ப்பாணம்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மகேந்திரன் சசீந்திரன்

தோற்றம் 13.10.1984

மறைவு 22.06.2009

வந்த வழி மறந்து சென்றாயோ - சசி
வழிப்போக்கன் கண்ணில் சிக்கினாயோ - சசி
சிட்டுக்குருவியாய் சிறகடித்து பூமிதனில் வாழ்ந்த - உனை
பாதிவழியில் உன் உயிரை குடித்தனர் கொடிய அரக்கர்கள்
உன் சிரித்த முகம் எம் நெஞ்சில் இருக்க
பாருலகம் விட்டுச் சென்று ஐந்து வருடங்கள் ஆனதையா
ஆனால் உம்மை மறக்க முடியவில்லை
உன் உருவை ஒருமுறை காணுவதற்கு
பறிகொடுத்துப் பதறுகிறார்கள் உன் உறவுகள்
அழகிய புன்சிரிப்பும் உன் பேச்சுத் திறனும் எம்
மனதில் வந்து போகுதையா

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

31, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(Sharujan Fancy House)

குடும்பத்தினர்.

Study, Work & Settle
அடிப்படைத் தகைமை O/L அல்லது A/L சித்தி மட்டுமே
LITHUANIA
CYPRUS / INDIA
AUSTRALIA (Scholarship Available)
UK / CANADA
GERMANY
DUBAI
40 Days Visit Visa 40,000/=
We help for
Refused Visa, Visit Visa, Business Visa, Tourist Visa, Dependent Visa
SCHENGEN VISA
NEW ZEALAND
FREE
- Two week accommodation
- Laptop
- Airport pickup
- Mobile sim card
- Wi-fi
- Job skill training
- Job placement assistance
- Part time job for hospitality & computing students
- Scholarship available
- No need IELTS
Malaysia செல்லும் உங்களுக்கு...
இலவச விமானப் பயணச் சீட்டு,
இலவச தங்குமிட வசதி,
பாடநெறிக் கட்டணத்தில் 80% தள் ளுபடி,
பயணத்துச் செலவு 850 டொலர் மட்டுமே,
வயது வேறுபாடு இல்லை,
முதல் 100 மாணவர்களுக்கு மட்டும்,
part time job செய்ய முடியும்.
450,000/- புலமைப் பரிசில்கள்
Courses
- Certificate
- Diploma
- Undergraduate
- Master
- Mphil
- Phd
SINGAPORE
- ஒரு மாதத்திற்குள் பயணம்
- கல்வி நெறிகளின் பின்னர் Part time jobs (மாதம் ரூ.100,000 வரை)
- ஐரோப்பா பல்கலைக்கழகங்களுக்கு transfer செய்ய முடியும்
- பாடநெறிக் கட்டணம் தவணைக் கட்டணங்களாகச் செலுத்த முடியும்
பட்டம் பெற்ற பின் குறைந்த பட்சம் 3 இலட்சம் சம்பளம்
விசா கிடைத்த பின் பணம் செலுத்தலாம்
edutrust
4 Years Edu Trust
நியூசிலாந்து அரச அங்கீகாரம் பெற்ற விசேட பிரதிநிதி
V T L Management
No.380, Galle Road, Colombo-03.
Cool line: 077-9600085 / 0775902280 /011-5922116
Email: vtlmgt@gmail.com Web: www.vtlmgt.edu.lk
0774939777 தமிழில் தொடர்பு கொள்ள
எம்முடன் ஒரு தடவை தொடர்பு கொண்டு பாருங்கள்

CORNERstone INTERNATIONAL COLLEGE
Chennai, India
UK UNIVERSITY DEGREE PROGRAM
www.cornerstone.edu.in



Presenting, for the first time ever in Asia
BACHELOR'S DEGREE WITH HONOURS IN
MOTORSPORT ENGINEERING
A Univerisity of Derby Degree
Course Offered:
- B.Eng in Motorsport
- B.Eng in Mechanical
- B.Eng in Automobile
- B.Eng in Aeronautical
- B.Eng in Avionics
- B.Eng in Aerospace
- B.Eng in Electronics
- B.Eng in Civil
- B.Eng in Computer
- B.Eng in Mechatronics
- B.Eng in Robotics
- BBA & MBA
Benefits:
- Qualification recognized for international employbility.
- Engineering qualification recognised by Washington Accord.
- 70% Practical & 30% theory.
- Curriculam integrated with Microsoft, CISCO, Bosch, Suzuki, Siemens, CATIA, and Auto CAD certifications.
- 100% post study visa to live and work in Australia.
Study 2 Years in INDIA + 1 Year in UK + 18 months Work In AUSTRALIA
Regional Office : EDUTECH 0778400129, 0770709040

கடைக்கு கணக்கியல் தெரிந்த பெண் வேலையாள் தேவை
நெல்லியடியில் இல. 181, பிரதான வீதியில் இயங்கும் Lanka Tiles காட்சியறைக்கு சந்தைப்படுத்தும் மற்றும் கணக்கியல் துறையில் அனுபவமுள்ள பெண் வேலையாள் உடன் தேவை.
தொ.பே: 021 226 4300, 077 857 7243

# ஊர்காவற்றுறை அன்ரனிஸை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 22
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120 ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையே நடத்தும் 5பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியனாது. நேற்று சனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றிரயசர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி அணி 3:0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23-86)

## வடமாகாண ரெனிஸில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான ரெனிஸ் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்றபாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**
முதலாமிடம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, இரண்டாமிடம் சென். ஜோன்ஸ் கல்லூரி, மூன்றாமிடம் கொட்டடி நாமசிவாய வித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**
முதாலாமிடம் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் யாழ். இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
(த- 23-86-108)



## மூன்றாம்பிட்டி அன்ரனிஸின் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
மூன்றாம்பிட்டி புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு மூன்றாம்பிட்டி சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நாளை திங்கட்கிழமை மூன்றாம்பிட்டி சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.
மேற்படி போட்டியில் 25 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)



*தேசிய மட்டத்துக்கு தகுதி பெற்ற மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலய அணியின் பெண்கள் உதைபந்தாட்ட அணிக்கான பாராட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் ஜேம்ஸ் பங்கிராஸ் தலைமையில் இடம்பெற்றது. அணி வீராங்கனைகள் பதக்கம் அணிவிக்கப்பட்டுப் பூச்செண்டு கொடுத்து கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோசலை குணபாலசிங்கம், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, மாதகல் பங்குத்தந்தை கனீசியஸ் ராஜ், வட மாகாண அதிபர் சங்கத் தலைவரும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபருமான எஸ்.சிவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-86)*

## ஆதிசக்தி, டயமன்ஸ் அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 22
கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
ஆதிசக்தி விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் வல்வை விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக 'ஏ' அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணிக்கும் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கும் போட்டியில் அருணோதயக் கல்லூரியின் மாணவன் சி.டினிஸ்ரன் முதன்முறையாகப் பங்குபற்றி 19 வயதுப் பிரிவில் 56 கிலோ நிறைப் பிரிவில் கலந்து கொண்டு 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்து கொண்டார். (த-23)

## மாகாணப் பூப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வட மகாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**15 வயது ஆண்கள்**
முதலாம் இடம் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.
இரண்டாம் இடம் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.
மூன்றாம் இடம் - யாழ். இந்துக் கல்லூரி.

**19 வயது ஆண்கள்**
முதலாம் இடம்- வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.
இரண்டாம் இடம்- சென். ஜோன்ஸ் கல்லூரி
மூன்றாம் இடம்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**15 வயது பெண்கள்**
முதலாம் இடம் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
இரண்டாம் இடம் - மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**19 வயது பெண்கள்**
முதலாம் இடம் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
இரண்டாம் இடம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 22
கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 22
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடந்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இடம் பெறவுள்ளன.
இன்று பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாவத்தை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகாரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23-86)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ். மாவட்டப் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டத் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.
இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 5 மணிக்கு இடம்பெறும் 13 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.
மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.
யாழ்.இந்து மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் 13 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி மோதவுள்ளது. (த-23)

## சுண்டுக்குளி, கொக்குவில் இந்து கரம் போட்டியில் சம்பியன்கள்

கரணவாய், ஜூன் 22
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கரம் சுற்றுப் போட்டியில் பெண்களுக்கான ஆட்டத்தில் 15 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், 19 வயதில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் வென்று மாகாணச் சம்பியனாகின.
யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 15 வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் மோதின. இதில் 25:16, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தை யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி பெற்றது.
அடுத்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் 25:19, 25:17 என்ற அடிப்படையில் வென்று சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது.

**இதில் 25:16, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.**

இதில் மூன்றாமிடத்துக்காக இடம்பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணி 25:14, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மூன்றாமிடத்தைப் பெற்றது.
(த-108-422)



# உணர்ச்சி வசப்பட்டதால் கண்ணீர் விட்ட நெய்மார்

உலகக்கிண்ணப் போட்டி தொடங்கும் முன் ஒலித்த பிரேஸில் நாட்டுத் தேசிய கீதத்தை பாடிய நெய்மார் உணர்ச்சியில் அழத் தொடங்கினார். போட்டிகள் தொடங்கும் முன் அவர்கள் நாட்டு தேசிய கீதத்தை வீரர்கள் பாடுவது வழக்கம். இந்நிலையில் மெக்ஸிக்கோ- பிரேஸில் போட்டியின் போது பிரேஸில் அணி வீரர்கள் வரிசையில் நின்று அவர்களின் தேசிய கீதத்தைப் பாடத் தொடங்கினர்.

பிரேஸிலின் தேசிய கீதப் பாடல் மிகப்பெரியது. ஆனால் பிபா அமைப்பு 90 வினாடிகள் மட்டுமே பாடல் ஒலிக்க அனுமதி வழங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து அரங்கமே பாடலை பாடத்தொடங்கியது. கமரா மைதானத்தை வட்டமிடத் தொடங்கியது. வீரர்கள் முகங்களை நோக்கிய கமராவில் நெய்மார் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி இருந்தது தெரிந்தது.

ஒரு கட்டத்தில் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் அழுது விட்டார். இந்தப் போட்டியில் இரு அணிகளும் எந்த கோல்லும் அடிக்காததால் ஆட்டம் சமநிலை ஆனது. (த)


## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு

காரைநகர் மல்லிகையைப் பிறப்பிடமாகவும் 37.அன்னசத்திர ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு நேற்று (21.06.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மல்லிகை, கந்தையா-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான வாரிவளவு, நாகேசு - சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நாகேசு திருநாவுக்கரசுவின் (பிரபல வர்த்தகர் இங்கிரியா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் சிவசோதி, காலஞ்சென்ற மனோறஞ்சிதம் ஆகியோரின் மைத்துனியும், நித்தியானந்தன் (கிராம அலுவலர்), நித்தியலட்சுமி, பூமலர்,சந்திரகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயும், சிவகாமசுந்தரி, ஞானப்பிரகாசம் (ஓய்வுபெற்ற பொலிஸ் திணைக்கள தொலைத்தொடர்பு இயக்குநர்),சிவசுப்பிரமணியம்(BM Tex கொழும்பு),நந்தகுமார் (சுவிஸ்), ஆகியோரின் அருமை மாமியும், புஸ்பவதி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் சகலியும், நித்தியா, செந்தூரன்,பகீரதன்,மயூரதன்,சுதர்சினி, வாசுகி,வைகுந்தன், பார்த்தீபன், தர்சினி, தர்ஷன், சுரேக்கா,அமலேஸ்வரன், விக்கினேஸ்வரன், கல்யாணி ஆகியோரின் அருமை பேர்த்தியும்,லக்ஷிகா, சேயோன் ஆகியோரின் அருமை பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2014) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு 37, அன்னசத்திர லேன், கந்தர்மடத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37,அன்னசத்திர லேன், கந்தர்மடம் யாழ்ப்பாணம். (021 222 8090)

**தகவல்**: மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது. யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பிரெஞ்சு மொழிபெயர்புகள்,AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம். **குறிப்பு :** பிரான்ஸில் பிரெஞ் கற்பதற்கு AF இன் CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2 = IL TFS : AF இன் கிளைகளில் மட்டுமே எழுத முடியும்) மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.

தனிநபர்களிடம் சென்று பணத்தையும் நேரத்தையும் இழக்காதீர்கள்

**புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன.**

**021 222 8093** 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

கச்சேரி → கிறிஸ்தவ ஆலயம் ✝ → Alliance Française.

ஆரியகுளம் → நக்கா றோட் (J/John Bosco's School) → AF.

## களஞ்சிய காப்பாளர் தேவை

சங்கென் வட கிளைக்கு களஞ்சிய காப்பாளர்கள் தேவை. (Store Keepers) க.பொ.த.(சா.த) சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

adminjaffna@sanken.lk (சி14798) (12.3.6)

## Spot Admission 22.06.14 (Today)

# Study in Europe (Latvia)

மிகக் குறைந்த கட்டணத்தில் மீண்டும் ஓர் அரியசந்தர்ப்பம்

with work Permission

இன்று எமது யாழ் அலுவலகத்தில் நடைபெறும் அனுமதி தேர்வில் இணையுங்கள்

**நீங்கள் ஏன் Latvia இனை தெரிவுசெய்ய வேண்டும்**

- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம்
- A/L இல் 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Schengen visa (Schengen countries இல் உள்ள 25 நாடுகளிற்கும் சென்று பணிபுரிய முடியும்)
- UK Student Visa Reject ஆன மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுத்தரப்படும்.
- ஒரு வருடத்திற்கான கட்டணமாக 350,000/= உடன் (Engineering, Business Management, MBA, etc) உங்கள் உயர் கல்வியை பயிலமுடியும்.
- 2 மாதத்தில் உங்கள் பயணம் உறுதி.

EXPONET Overseas Consultants

வார நாட்களில் 9-5 மணிவரையும் வார இறுதியில் 9-2 வரையும் எமது யாழ்கிளையினூடாக முற்றிலும் இலவசமான LatviaStudent Visa தொடர்பான ஆலோசனைகளை பெற்றுகொள்ள முடியும்

#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk

#197, Arasady Road, Jaffna. 021 7538395 | 021 2227230 Web: www.expogroup.lk

முதலீடு ஒருமுறை மட்டுமே !!

## அதிக இலாபத்திற்கு இதோ புதிய வழி

ஜூஸ் பக்கெட் மெசின்



பெறுமதியான பரிசுகளுடன்

1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்

- 1 வருட உத்தரவாதம்
- இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
- விற்பனைக்கு பின் சேவை
- இலவச விநியோகம்

ரூ.2 /= ரூ.5 /= ரூ.10 /= பக்கட்டுகளை தயாரிக்கலாம்

WINRICH

max adz

தமிழில் தொடர்பு கொள்ள

**077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD

No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

## ஜேர்மன் கல்லூரி German Language Academy

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் மொழிகள் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு S.கோணேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகின்றது.

German Language Academy

பலாலி வீதி (ஆரியகுளம்), யாழ்ப்பாணம்.

(49142)(10.6) 077 970 7322

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? (48917)(7.6.3)

எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)

பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P : 072 681 6681, 072 681 6691

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## Angel International School Manipay

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY In God we trust Kumedica

# அரிய சந்தர்ப்பம்!

## Job Oriented Courses

- கணக்காளர் - AAT
- விமானத்துறை - Aviation Specialist
- தொழில் வாய்ப்புக்கான சிறப்பு ஆங்கிலக் கற்கை நெறி - Professional English Course

மேலதிக விபரங்களிற்கு : 021 225 5224, 021 225 5628, 077 306 8997

-அதிபர்-

(C/10150)(10)

## Spoken English

- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
- பல்கலைக்கழக மாணவர்கள், அலுவலக பணியாளர்கள் அனைவருக்கும் ஏற்றது.
- மாணவர்களின் வசதிக்கேற்ப வேறு நேர ஒழுங்கு செய்யப்படும்

ஆரம்பம் : 22.06.2014 by: குணா

076 717 0586 யாழ். பல்கலைக்கழகம் முன்பாக, குமாரசாமி லேன், யாழ்ப்பாணம். (49252)(10)

## LapTop

குறைந்த காலம் பாவித்த நல்ல நிலையில் இருக்கும் Acer i 3 LapTop (Graphis-4GB Ram, 640 GB HD) அவசர தேவைக்காக ரூபா 33000 இற்கு விற்கப்படவுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு - 0774336247

## வீட்டுப்பணிப் பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கும் குழந்தையைப் பாராமரிப்பதற்கும் பெண் வேலையாள் தேவை.

தொடர்பு: 0771532428 மானிப்பாய்.

சுண்டுக்குழி பாடசாலைக்கு அருகில் அறை வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: (49257)(10) 021 222 6660, 077 7412713

## வீடு வாடகைக்கு

நாவலர் வீதியில் மாடி வீடு கீழ் பகுதியில் சகல வசதிகளுடனும் வாடகைக்கு கொடுக்கப்படும். தனி அறையாகவும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு- 0766026021

## ICT & Music Classes

தரம் 10-11 மாணவர்களுக்கான ICT மற்றும் A/L மாணவர்களுக்கான விசேட ICT (தொழில்நுட்பப் பாடம்) & GITÖ Music வகுப்புக்கள் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பிரதேசங்களில் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 8998696

## வாகனம் விற்பனைக்கு

TATA Super ACE சாம்பல் கலர் வாகனம் AC உள்ளது லீசிங் உடன் விற்பனைக்கு உண்டு. 6500 கி.மீ. ஓடிய நிலையில்

T.P 0778331768


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.